கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை...

ஆசிரியர்களே!

கலைமகள் காரியாலயத்திலிருந்து குழந்தைகளுக்காக ஆரம்பித்துள்ள பத்திரிகை 'கண்ணன்'.

கண்ணனுக்கு ஓராண்டு நிறைந்து இந்த இதழிலிருந்து அடுத்த ஆண்டு தொடங்குகிறது.

குழந்தைகளுக்காகத் திட்டமிட்டு, குழந்தைகளுக்காகப் பதிப்பித்து, குழந்தைகளுக்கு நன்மை புரியவேண்டும் என்ற நோக்கத்துடனேயே 'கண்ண'னை ஆரம்பித்திருக்கிறோம்.

குழந்தைகளின் ஆசை இது: படிக்க வேடிக்கையாக இருக்க வேண்டும்; உற்சாகம் தரவேண்டும்; குதூகலம் பொங்கவேண்டும்.

உபாத்தியாயர்கள், பெற்றோர்கள் இவர்களின் ஆசை இது: குழந்தை படிப்பது நல்லதாக இருக்கவேண்டும்; அறிவு கொடுக்கவேண்டும்; பயனுள்ளதாக இருக்கவேண்டும்.

இந்த இரண்டு ஆசைகளையும் பூர்த்திசெய்வதே எங்கள் குறிக்கோள்.

அதிருஷ்டவசமாகத் தங்கள்போன்ற முதிர்ந்த அநுபவமுள்ளவர்களுடைய ஆதரவு கண்ணனுக்குக் கிடைத்திருக்கிறது. அவ்வப்போது அவர்கள் சிறந்த யோசனைகளைக் கூறி வருகிறார்கள். தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்கள் குழந்தைகளுக்குத் தேவையானவைகளை எழுதுகிறார்கள். குழந்தைகளின் கற்பனையைத் தூண்டும் பல விசேஷப் பகுதிகளை ஆரம்பித்திருக்கிறோம். இப்போது குழந்தைகளாக இருப்பவர்கள் நாளைக்கு இந்தியாவின் பெரியோர்களாகப் போகிறார்கள். அவர்களுடைய பச்சிளம் மனத்தைப் பண்படுத்தி உருவாக்குவதில் பத்திரிகைகளுக்கு உள்ள வசதி தங்கள் யோசனைகளால் பெரிதும் வளரவேண்டும்.

மேல் நாடுகளில் குழந்தைகள் பத்திரிகைகளுக்கு ஆசிரியர்கள் அளித்துவரும் பேராதரவைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அந்த வகையில் தங்கள் அரிய யோசனைகளையும் கூறி, கண்ணனை ஆதரிக்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

MADRAS

பொருளடக்கம்

மலர்: 2 இதழ்: 1

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
சின்ன ராஜா - 'வாசகன்' 3
கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 9
குட்டிக்கதைகள் - ராமசர்மா 13
ஜக்கு துப்பறிகிறான் - 'ஆர்வி' 17
பிள்ளையாரே வாரும் - 'மணிவண்ணன்' .. 23
திருந்திய வேணு - கா. ஜகந்நாதன் .. 25
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 30
மார்கழி பஜனை - 'ளைஜ' 33
மண்குடமும் பித்தளைக்குடமும்-'சோமசன்மா' 38
பட்டண வாழ்வு - எல்லார்வி 42
நமஸ்காரம் - 'சுண்டு' 48
தங்கப் பதக்கம் - கே. ஆர். ராமசந்திரன் .. 49
பூனைக்குட்டி - மு. ரா. கோபாலன் .. 55
எண்ணிலே படம் - 'மூட்டை' .. .. 5(
கண்ணாடி அழகி - கி. ரா. 57
சாக்பீஸில் சங்கிலி - ஸி. ரங்கநாதன் .. 62
ஆங்கிலச் சிறுவர்கள் - ச. கு. கணபதி ஐயர் 63
சீனித் தீவு - விக்கிரமன் 66
கண்ணன் தபால் 77

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே

குழந்தைகளே!

உங்களுக்கு என் புது வருஷ வாழ்த்துக்கள். இந்தப் புது ஆண்டு உங்களுக்கு எல்லா நலமும் மேன்மையும் வழங்குமாக.

இந்த நாளில் ஒவ்வொருவரும் புது வருஷத்தில் இவ்விதம் இருக்கவேண்டும், அவ்விதம் செய்யவேண்டும் என்றெல்லாம் தீர்மானித்துக் கொள்வது வழக்கம். நீங்களும் அப்படியே செய்துகொண்டிருப்பீர்கள் என்பது திண்ணம். ஆனால் நீங்கள் செய்துகொண்ட தீர்மானப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதே என் கோரிக்கை.

இந்த 1951-ஆம் வருஷத்தில் பத்திரிகைக் காகிதம் சுலபமாகக் கிடைக்கும், இந்த இதழைப் பிரமாதமாகக் கொண்டு வரலாம், பக்கம் பக்கமாகப் படங்களும், ஏராளமான கதைகளும் இன்னும் என்னவெல்லாமோ செய்து அற்புதமாகத் தயாரிக்கலாம் என்று திட்டம் போட்டோம். ஆனால் வருஷ ஆரம்பத்தின்போதே பத்திரிகைக் காகிதம் கிடைப்பதும் அரிதாகிவிட்டது. அதனால் எங்களுடைய திட்டத்தைக் கொஞ்சம் மட்டுப்படுத்திக் கொள்ளும்படி ஆகிவிட்டது. அப்படியும் ஒரு பதினாறு பக்கம் அதிகமாகத்தான் கொடுத்திருக்கிறோம்

இது கிரிக்கெட் ஸீஸன். காமன்வெல்த் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் இந்தியாவில் இப்போது இருக்கிறார்கள். சென்னையிலும் ஜனவரி 19-ஆம் தேதி முதல் ஆரம்பமாவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆஸ்திரேலியாவில் டெஸ்ட் மாட்சுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்குப் பொருத்தமாக இந்த இதழ் அட்டையிலும் கிரிக்கெட் படம் ஒன்றைத் தாங்கி வருகிறது கண்ணன். படத்திலிருக்கும் பையன் 'அவுட்' ஆகிவிட்டான். அவன் முகபாவத்திலிருந்து அவன் எவ்வளவு 'ஸ்கோர்' எடுத்திருப்பான் என்று நினைக்கிறீர்கள்? 'டக்கா, ஸென்சரி'யா சொல்லுங்கள், பார்ப்போம்.

இந்த இதழில் புதிய தொடர் கதை ஆரம்பமாகிறது. அதை எழுதுபவர் பிரபலமான ஆசிரியர். அது எப்படி இருக்கிறது என்று படித்துவிட்டுச் சொல்லுங்கள்.

போகப் போக, கதை ரொம்ப சுவாரஸ்யமாகப் போகும். அந்தச் சுவாரஸ்யத்தில் நீங்கள் ஆழ்ந்துவிடுவீர்கள்.

கண்ணன் வாசகர்களுக்கு இந்த மாதம் இரண்டு புது வெளியீடுகளை வழங்குகிறோம். அது பற்றிய விவரத்தைக் கடைசி அட்டையில் பார்க்கலாம். இன்னும் தொடர்ந்து பல புத்தகங்களைக் கொண்டுவர யோசித்திருக்கிறோம்.

கண்ணன் கழகக் கூட்டம் திருச்சியில் சுதந்தர நாள் அன்று நடத்த முடிவு செய்திருக்கிறோம். அழைப்புக்கள் தயாராகின்றன. இடமும் தேதியும் திருச்சியிலுள்ள அங்கத்தினர்களுக்கு முன்னாலேயே அறிவிக்கப்படும்.

—ஆசிரியர்.

சின்னராஜா

'வாசகன்'

"அதோ அதோ! அந்தப் புதரிலிருந்து ஒரு முயல் வரப் போகிறது. ஜாக்கிரதையாகப் பார்!" என்றான் சின்ன ராஜா.

"முயலும் இல்லை; ஒன்றும் இல்லை" என்றான் அதிகமான்.

"வில்லில் அம்பைத் தயாராக வைத்திரு; நானும் வைத்திருக்கிறேன். யார் அதை அடிக்கிறார்களோ, பார்க்கலாம்" என்றான் சின்ன ராஜா.

"முயலே இல்லாதபோது அம்பைப் பூட்டுவானேன்?" என்று சொல்லிச் சிரித்தான் அதிகமான்.

"போடா, மடையா! உனக்கு எத்தனை தரம் வேட்டையாடினாலும் இதெல்லாம் தெரியப் போவதில்லை" என்று சிறிது கோபத்தோடு சின்ன ராஜா சொன்னான்.

சொல்லிவைத்தாற்போல் இரண்டு நிமிஷத்தில் சின்ன ராஜா காட்டிய புதர் சலசலத்தது. அடுத்த நிமிஷம் வெள்ளை வெளேரென்ற குழி முயலொன்று பாய்ந்து வெளியே வந்து ஓடியது. சின்ன ராஜா தன் கைவில்லிலிருந்து ஓர் அம்பை எய்தான். அது அந்த முயலின் காதிலே பட்டு ஊடுருவிச் சென்றது. முயல் தப்பிப் போய்விட்டது.

"முட்டாள்! உன்னோடு பேசினதில் முயலைத் தப்பவிட்டு விட்டேன்" என்று கடிந்துகொண்டான் சின்ன ராஜா.

"நீ எப்படித்தான் ஜோசியம் சொல்லுகிறாயோ, தெரியவில்லை. அந்த முயல் புதரில் இருக்கிறேன் என்று உன்னுடன் ரகசியமாகப் பேசிற்றோ?" என்று பேச்சைத் திருப்பிவிட்டான் அதிகமான்.

"அதெல்லாம் சொல்லித் தெரியாது. அநுபவத்தால் தெரியவேண்டும்" என்றான் சின்ன ராஜா.

இப்படியே அந்த இரண்டு சிநேகிதர்களும் பேசிக் கொண்டே காட்டை விட்டு வந்துகொண் டிருந்தார்கள்.

சின்ன ராஜா யார் தெரியுமோ? சின்ன ராஜாதான். ஒரு சிற்றரசனுடைய பிள்ளை. அவன் பெயர் குலசேகரன். ஆனால் அந்தப் பெயரைச் சொல்லி யாரும் அழைப்பதில்லை.

அவனுடைய அப்பா பெரிய ராஜா; ஆகவே அவன் சின்ன ராஜா; ராஜகுமாரன் அல்லவா? அவனுடைய அரண்மனைக் காவலதிகாரி மருதப்பருடைய பிள்ளை அதிகமான். அதிகமானும் சின்னராஜாவும் இணைபிரியாத சிநேகிதர்கள்.

இன்னும் கொஞ்சம் விரிவாக இந்தப் பிள்ளைகளைப் பற்றிய விவரங்களைச் சொல்கிறேன்.

ராஜராஜ சோழ மகாராஜா ஆண்டுவந்த காலம் அது. 'அந்த மகாராஜா யார்?' என்று கேட்கிறீர்களா? சோழ தேசத்தை ஆண்டுவந்தவர். தஞ்சாவூரிலே பெரிய கோவில் ஒன்றைக் கட்டினரே, அவரும் ராஜராஜ சோழ மகாராஜா என்ற பெயர் உள்ளவரே. ஆனால் இந்த ராஜராஜ சோழர் அவருக்கு எத்தனையோ தலைமுறைக்குப் பிறகு சோழ ராஜ்யத்துக்கு அதிபதியாக வந்தவர்.

இந்தச் சோழ மகாராஜா காலத்தில் சோழ நாட்டின் பெருமை மங்கிக்கொண்டே வந்தது. சோழ ராஜாவுக்கு உட்பட்டுப் பல சிற்றரசர்கள் அங்கங்கே இருந்தார்கள். அவர்கள் சின்னச் சின்னப் பிரதேசங்களை ஆண்டுவந்தார்கள். அவர்கள் செய்த அக்கிரமங்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. எப்படியாவது பணத்தைச் சேர்க்கவேண்டும் என்ற எண்ணந்தான் அவர்களுக்கு இருந்தது. திடீரென்று குடிமக்களின் வயல்களுக்கு ஆட்களை அனுப்புவார்கள். பல மாதங்களாக உழைத்துக் குடிமக்கள் பயிர்பண்ணி யிருப்பார்கள். பயிர் விளைந்து அறுவடைக்குத் தயாராக இருக்கும். அந்தச் சமயத்தில் அரண்மனையிலிருந்து வந்த ஆட்கள் அத்தனையையும் அறுத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

இந்தச் சிற்றரசர்களாகிய குட்டி ராஜாக்களை அடக்குவதற்குச் சோழ மகாராஜாவுக்குத் தைரியம் இல்லை. ராஜாவுக்கு அளிக்கவேண்டிய கப்பத்தை ஒழுங்காகச் செலுத்து

பவரே இல்லை. சில சிற்றரசர்கள் மட்டும் சோழ ராஜாவுக்கு நண்பர்களாக இருந்தார்கள். அவர்களுக்குள்ளே சில நல்ல குட்டி ராஜாக்களும் இருந்தார்கள்.

குட்டிராஜாக்கள் தங்களுக்குள்ளே பகை மூண்டு சண்டை செய்வதும் உண்டு. ஒருவருக்குச் சொந்தமான ஊரில் மற்றொருவர் போய்க் கொள்ளை அடிப்பார்கள். எல்லாம் ஏக அநியாய அலங்கோலமாக இருந்தது

சோழ நாட்டில் ஆவூர்க் கூற்றம் என்பது ஒரு சிறிய பகுதி. அந்தக் கூற்றத்தின் தலைநகரம் ஆவூர். அங்கே ஒரு சிற்றரசர் ஆண்டுவந்தார். மார்த்தாண்டர் என்பது அவர் பெயர். நம்முடைய சின்னராஜாவின் தகப்பனார். அவர் நல்லவர். ராஜராஜ சோழ மகாராஜாவுக்கு நண்பர். சோழ மகாராஜா எப்போதாவது ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்யவேண்டுமானால் மார்த்தாண்டருக்கு ஆள்விடுவார். அவர் வந்தபிறகு அவரிடம் தம்முடைய கருத்தைக் கூறி ஆலோசிப்பார். சில சமயங்களில் யாரேனும் சிற்றரசன் மகாராஜாவுக்குச் சொந்தமான பிரதேசத்தில் அக்கிரமச் செயல் புரிவான். அவனை அடக்கும் விஷயத்தில் மார்த்தாண்டர் தம்

முடைய படையுடன் சென்று மகாராஜாவுக்கு உதவி புரிவார். இப்படிச் சோழ மகாராஜாவுக்கும் மார்த்தாண்ட மன்னருக்கும் நட்பு ஏற்பட்டு வளர்ந்து வந்தது.

ஆலூர்க் கூற்றத்தைப்பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? ஆலூர்க் கூற்றத்துக்குத் தலைநகர் ஆலூர்தான். அந்த ஊர் மிகப் பெரியது அன்று. ஆனால் அங்கே இருந்த கோட்டைதான் பெரியது. ஒரு காலத்தில் சோழ மகாராஜா ஒருவர் அந்தக் கோட்டையில் இருந்து வந்தார் என்று ஜனங்கள் கதை பேசிக்கொள்வார்கள். அது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. கோட்டை என்னவோ மிகவும் பலமான கோட்டை; பழமையான கோட்டை, கோட்டையைச் சுற்றி ஆழமான அகழி ஒன்று இருந்தது. கோட்டைக்கு வெளியே, அதாவது அகழிக்கு அப்பால் பெரிய காடு வளர்ந்திருந்தது. அந்தக் காடு பல மைல் தூரம் பரவியிருந்தது. காட்டில் இடையிடையே சில சிறிய ஊர்கள் இருந்தன.

கோட்டையின் மதில் சுவர்கள் மிகவும் உயரமானவை; அகலமுள்ளவை. அகழியின்மேல் ஒரு மரப்பாலம் இருந்தது. அதை வேண்டும்போது தூக்கிவிடலாம்; மற்றச் சமயங்களில் அகழியைக் கடக்க உபயோகித்துக் கொள்ளலாம். பகைவர்கள் வந்தால் அகழியைக் கடக்க முடியாதபடி அந்தப் பாலத்தைத் தூக்கிவிடுவார்கள்.

பாலத்துக்கு நேரே கோட்டை வாசல்; அந்த வாசலில் மிகப் பெரிய கதவு ஒன்று இருந்தது. கோட்டைவாசலில் எப்போதும் ஆயுதபாணிகளாகிய காவற்காரர்கள் இருந்து கொண்டே இருப்பார்கள்.

கோட்டை வாசலைக் கடந்து சென்றால் அழகான புல்வெளி இருக்கும். மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் முதலிய பூச்செடிகளை வைத்திருந்தார்கள். அதனால் கம்மென்ற வாசனை மாலைக்காலத்தில் வீசும். புல்வெளிக்கு அப்பால் நடுவே அரண்மனை இருந்தது. கருங்கல்லால் எடுத்த சுவர்கள். வாசலில் பெரிய இரும்புக் கதவு. உள்ளே புகுந்தவுடன் ஒரு பெரிய முன்கூடம். மார்த்தாண்ட மன்னர் கொலு வீற்றிருக்கும் இடம் அது. அதையும் தாண்டிச் சென்றால் பெரிய பெரிய அறைகள் இருந்தன. ஆயுதம் வைக்கும் அறை, கணக்கு வைக்கும் அறை, ஆடை ஆபரணங்களுக்கென்று தனி அறை; இப்படியாகப் பல அறைகள் இருந்தன. அவைகளை யெல்லாம் கடந்து சென்றால் அந்தப்



புரம் இருந்தது. அந்தப்புரம் என்றால் உங்களுக்குத் தெரியுமோ? அரசர்கள் வாழும் அரண்மனையில் அரசர்களின் மனைவிமாரும் அவர்களுடைய தாதிமாரும் வசிக்கும் இடத்துக்கு அந்தப்புரம் என்று பெயர். அது பெரும்பாலும் அரண்மனையின் உள்ளே பாதுகாப்பான இடத்தில் இருக்கும்.

ஆலூர் அரண்மனையிலும் அப்படி ஓர் அந்தப்புரம் இருந்தது. அங்கேதான் சின்ன ராஜாவினுடைய அம்மா இருந்தாள். மகாராணி என்று எல்லோரும் அவளை அழைப்பார்கள். சின்ன ராஜாவினுடைய அப்பா சோழமகாராஜாவுக்கு அடங்கிய சிற்றரசராக இருந்தாலும், அவரை அவருடைய அரண்மனையில் உள்ளவர்கள் மகாராஜா என்றே அழைப்பார்கள்.

மார்த்தாண்ட மகாராஜாவின் ஒரே பிள்ளை சின்ன ராஜா. அவனுக்குப் பன்னிரண்டாவது வயசு நடந்து கொண்டிருந்தது. பார்க்க வெகு அழகாக இருப்பான். முகத்தில் பால்வடியும் என்று சொல்வார்களே, அப்படி மனசை இழுக்கிற அழகு அவன் முகத்தில் இருக்கும்.

சுறுசுறுப்பாக இருப்பான். வெளியிலே சுற்றுவதென்றால் அவனுக்கு ஆசை அதிகம். அம்பு எய்யும் வித்தையில் அவன் பயிற்சி செய்து வந்தான்; வேடிக்கையாகத்தான் வாளும் வேலும் எடுத்துச் சண்டை செய்யப் பழகவேண்டும் என்று அவனுக்கு எவ்வளவோ ஆவலாக இருந்தது. அவனுடைய அப்பா, "அதெல்லாம் இப்பொழுது கூடாது; பேசாமல் உன் பாடங்களைப் படித்துக் கெட்டிக்காரனாகப் பார்" என்பார்.

இந்த ஒரு விஷயத்தில்தான் சின்ன ராஜா மோசம். படிப்பென்றால் அவனுக்கு வேப்பங்காய். அவனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காகவே ஒரு வாத்தியாரை மார்த்தாண்ட மன்னர் ஏற்படுத்தியிருந்தார். அந்த வாத்தியார் நன்றாகப் படித்தவர். மிகவும் பொறுமை உடையவர்.

சின்ன ராஜாவும் அதிகமானும் சேர்ந்து விளையாடுவார்கள். சின்ன ராஜாவுக்கு எப்போது பார்த்தாலும் வேட்டையைப் பற்றிய பேச்சுத்தான். இல்லாவிட்டால் யுத்தத்தைப் பற்றிப் பேசுவான். "எங்கள் அப்பாமட்டும் எனக்குக் கத்திச் சண்டை பழகுப்படி உத்தரவு கொடுக்கட்டும். எவ்வளவு ஜோராகச் சண்டை செய்வேன், தெரியுமா? ஒரு பயல் என் எதிரில் நிற்கமுடியுமா? என்னைச் சின்னப் பையன் என்று எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். சரியானபடி சந்தர்ப்பம் கிடைத்து, என்னையும் போர் வீரனாக்கி விட்டால் நான் எத்தனை பேரை வெட்டி வீழ்த்துவேன்! ஹூம்! அம்மா ஒரு பயங்கொள்ளி. நான் சின்னப் பையனென்று சொல்கிறாள். நான் கையில் வாள் எடுக்கக் கூடாதாம். ராஜாவீட்டில் பிறக்கிறதே தப்பு. என் இஷ்டப் படி இருக்கமுடிகிறதில்லை" என்று அவன் உற்சாகத்துடன் பேசுவான். அப்படிப் பேசும்போது நிஜமாகவே சண்டை போடுகிறவனைப் போலக் கையையும் காலையும் ஆட்டுவான்; தாவுவான்; தாண்டிக் குதிப்பான். இதையெல்லாம் பார்த்து அதிகமான் ஆச்சரியப்படுவான்.

காட்டில் முயல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சின்ன ராஜாவும் அதிகமானும் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். நன்றாக இருட்டிவிட்டது. சின்ன ராஜாவின் அம்மா அவனைக் கண்டால் கோபித்துக் கொள்வாள். ஆகையால் அவன் நேரே தன் அறைக்குப் போனான். அங்கே போன போது, "ஏண்டா இங்கே வந்தோம்?" என்று தோன்றியது அவனுக்கு. அங்கே வாத்தியார் அவனுடைய வரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்! (தொடரும்)

கிரிக்கெட் கற்றுக்கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்ஸெண்ட்

வெளித் தூக்குதல்
OFF DRIVE

1. பொதுவான ஆரம்ப நிலை.

2. மட்டையை நேராகத் தூக்கி இருப்பதைக் கவனியுங்கள். எதிர்த்துவரும் பந்தை இரண்டு கைகளாலும் எவ்வளவு வேகமாக அடிக்க முடியுமோ அதற்கு இந்த நிலை தான் வாட்டமானது.

3. பந்து விழும் இடத்துக்குச் சமீபமாய் முன்னங்கால் வருவதைக் கவனியுங்கள்.

4. உடலின் கனமெல்லாம் முன்னங்காலில்தான் விழுகிறது. தலையைச் சாய்த்து, பந்து விழுவதைக் கவனிக்கிறது அவர் முகம்.



5. முழுங்கை முன்புறம் நீண்டு வந்திருக்கிறது. தோள்பட்டை பந்தை வீசி எறிபவரைப் பார்த்து இருக்கிறது. பந்தைப் பலமாக அடிக்க அப்பொழுதுதான் சௌகரியப்படும்.

6. முன்னங்கால் பாதத்தைக் கவனியுங்கள். பந்துக்கும் மட்டைக்கும் சமீபமாய் இருக்கிறது. இப்படி இருந்தால்தான் பந்து தவருமல் மட்டையில் படும்.

7. தலை இன்னமும் குனிந்தபடிதான் இருக்கிறது. முன்னங் கால் பாதம் மட்டையின் வாட்டத்துக்கு இசையத் திரும்பியிருக்கிறது.

8. பந்தை வீசி அடித்தாகி விட்டது. அடித்த திசையில் உடம்பு வாட்டமாக வளைந்திருக்கிறதைக் கவனிக்கவேண்டும்.

குட்டிக் கதைகள்

ராமசர்மா

அதிசய இரும்புச் சட்டி

மூன் ஒரு காலத்தில் ஓர் ஊரில் ஓர் ஏழைக் கிழவியும் அவளுடைய பிள்ளையும் வசித்து வந்தனர். அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் ஒரு பணக்காரன் பறித்துக் கொண்டு போய்விட்டான். அதனால் அவர்களுக்கு ஒரு சிறு வீடும் ஒரு பசுமாடும் தான் மீதியிருந்தன.

சாப்பாட்டுக்கு ஒன்றும் இல்லாமல் அவர்கள் கஷ்டப்படும்போது ஒரு நாள் தாயார் மகனைப் பார்த்து, "அப்பா, நம்முடைய பசுமாட்டைக் கொண்டுபோய்ச் சந்தையில் விற்றுக்கொண்டு வா" என்று அனுப்பினாள்.

பையன் பசுவை ஓட்டிக்கொண்டு சந்தைக்குப் போகும் வழியில் ஒரு மனிதனைக் கண்டான். அவன் ஒரு பெரிய கோட்டு அணிந்திருந்தான். அதற்குள்ளே ஒரு சிறிய இரும்புச் சட்டி வைத்திருந்தான். அந்த மனிதன் பசுமாட்டைக் கண்டதும் பையனிடம், "அப்பா, இந்த இரும்புச் சட்டியை வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாகப் பசுமாட்டைத் தருகிறாயா?" என்று கேட்டான்.

பையன் முடியாது என்று சொல்லிவிட்டான். பின்னே சின்ன இரும்புச் சட்டிக்கு யாராவது பசுவை விற்பார்களா? பையன் முடியாது என்றதும், சட்டைக்குள்ளிருந்த இரும்புச் சட்டி, "பையா! என்னை வாங்கிக் கொள்" என்றது. உடனே பையன் இரும்புச் சட்டியை வாங்கிக்கொண்டு பசுமாட்டை அந்த மனிதனுடன் ஓட்டிவிட்டு வீடு திரும்பினான்.

வீட்டுக்கு வந்ததும் கிழவி, "எத்தனை பணத்துக்கு மாட்டை விற்றாய்?" என்று கேட்டாள். பையன் இரும்புச்

சட்டியைக் காட்டினான். அதைக் கண்ட கிழவி அவனைத் திட்டுத் திட்டு என்று திட்டிவிட்டு அந்த இரும்புச் சட்டியை வாங்கித் தூர எறியப் போனாள்.

அப்போது அந்த இரும்புச் சட்டி, "என்னை அடுப்பின் மேல் வைத்துத் தண்ணீரைக் காய வை" என்றது. அப்படியே கிழவி சட்டியை அடுப்பில் வைத்துச் சிறிது தண்ணீரை ஊற்றிக் காயவைத்தாள். உடனே தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. அப்போது இரும்புச் சட்டி, "நான் ஓடப் போகிறேன்! நான் ஓடப்போகிறேன்!" என்றது.

"நீ எங்கே ஓடப்போகிறாய், சட்டியே?" என்று கேட்டாள் கிழவி.

சட்டி, "அதோ அந்தப் பணக்காரன் வீடுவரையில் ஓடப்போகிறேன்" என்றது.

அப்படியே அடுப்பின்மேல் சட்டி குதித்தது. பிறகு வெளியே தாவி ஓடத் தொடங்கியது. பணக்காரன் வீட்டுக்குள் ஓடி அடுப்பங்கரைக்குள் போயிற்று. அப்போதுதான் அந்தப் பணக்காரன் மனைவி பொங்கல் செய்துகொண்டிருந்தாள். அங்கே அடுப்படியில் ஒரு சட்டி வந்து நிற்பதைக் கண்டு அதற்குள் பொங்கலை எடுத்து வைத்தாள்.

அவள் வைத்ததுதான் தாமதம். இரும்புச் சட்டி அப்படியே பொங்கலுடன் வந்த வழியே ஓடி கிழவியின் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்தது. கிழவியும் அவள் மகனும் வயிறு நிறையப் பொங்கலைச் சாப்பிட்டார்கள்.

மறுநாளும் கிழவி இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்துத் தண்ணீர் ஊற்றினாள். அன்றும் அது, "நான் ஓடப் போகிறேன்! ஓடப்போகிறேன்!" என்று குதித்தது.

அன்று குதித்துக் கொண்டே அந்தப் பணக்காரனின் தான்யக் களஞ்சியத்துக்குள் போய் நின்றது. அப்போதுதான் பண்ணையாட்கள் நெல்லைக் கொண்டு வந்து குவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்தச் சட்டியைப் பார்த்ததும் அதைக் கொண்டு நெல்லை அள்ளிக் களஞ்சியத்துக்குள் போடலாம் என்று எண்ணி, சட்டியை எடுத்து அதற்குள் நெல்லை அள்ளிப் போட்டார்கள். என்ன ஆச்சரியம்! அதற்குள் எவ்வளவு நெல்லைப் போட்டாலும் இடம் காலியாகவே இருந்தது. கடைசியில் இருக்கிற தான்யத்தையெல்லாம் அதற்குள் போட்டதும் அது நிறைந்தது. உடனே அந்தச் சட்டி குதிபோட்டுக்கொண்டு கிழவியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. கிழவிக்கும் அவள் மகனுக்கும் ஒரு வருஷத்துக்குச்

சாப்பாட்டுக்குப் பஞ்சம் இல்லை; அவ்வளவு நெல் கிடைத்து விட்டது.

இப்படியே மறுநாளைக்கு இரும்புச் சட்டி பணக்காரன் வீட்டுக்கு அவன் பணத்தையெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கும்போது போயிற்று. அவன் எண்ணிய பணத்தை எளிதாக இருக்கும் என்று அதற்குள் போட்டான். உடனே சட்டி அத்தனை பணத்தையும் தூக்கிக்கொண்டு கிழவியிடம் வந்து சேர்ந்தது.

நான்காவது நாளும் இரும்புச் சட்டி அடுப்பின் மேல் குதிக்கத் தொடங்கியது. அப்படியே பறந்து பணக்காரன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தது. அதைக் கண்ட பணக்காரன் தான் முதல் நாள் போட்ட பணம் அதற்குள் இருக்கிறதா என்று அறியத் தன் விரலை விட்டுத் தேடிப் பார்த்தான். காணவில்லை. அதற்குள் தலையை விட்டுத் தேடினுன்; அகப்படவில்லை. கடைசியில் அதற்குள் இறங்கித் தேடி விடலாம் என்று இறங்கினுன். அவன் இறங்கினதுதான் தாமதம். இரும்புச் சட்டி அவனையும் தூக்கிக்கொண்டு பறந்து போய்விட்டது. அது எங்கே போயிற்று என்று யாருக்கும் தெரியாது.

பொன்முடிப் பறவை

முன் ஒரு காலத்தில் ஒரு ராஜாளி பட்சிகளுக்கெல்லாம் ராஜா தான்தான் என்பதை நிரூபிக்கவேண்டும் என்று தீர்மானித்தது. அதற்காக ஒரு கடற்கரையை அடுத்த தோட்டத்தில் பட்சிகள் மகாநாடு நடத்துவது என்று தீர்மானித்து, எல்லாப் பட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பியது.

குறித்த காலத்தில் உலகத்தில் உள்ள பட்சிகள் எல்லாம் அந்தக் கடற்கரைத் தோப்பில் வந்து கூடின. பாலைவனத்திலிருந்து கடல் கடந்து நெருப்புக் கோழிகூட வந்திருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

எல்லாப் பறவைகளும் வந்து உட்கார்ந்தபின் ராஜாளி

தன் கட்சியை எடுத்துச் சொல்லிற்று. எல்லாரையும்விட உயரமாகத் தான் பறக்கமுடியும் என்றும் தனக்கு இருப்பதைப் போல் விசாலமான சிறகுகள் வேறு யாருக்கும் கிடையாது என்றும் எடுத்துச் சொல்லிற்று.

ஆனால் மற்றப் பறவைகள் ராஜாளியை அரசனாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறின. ஏனென்றால் அதற்குப் பிறர் சொத்தைத் திருடும் பழக்கம் இருக்கிறது என்று சொல்லி, ஒவ்வொரு பட்சியும் தான்தான் அரசனாக உரிமையுள்ளது என்று கட்சி பேசிற்று. நெருப்புக் கோழி ஓட்டத்தில் தான் வல்லவன் என்றது. தெய்வப் பறவையான மயில் தன்னைப் போல் அழகு யாரும் இல்லை என்றது. கிளி தன்னைப்போல் பேச எவராலும் முடியாது என்றது. குயில் தன் குரலின் இனி மையைப் புகழ்ந்தது. இவ்விதம் எல்லாம் பலநாட்கள் விவாதம் நடத்திய பின்பு ஒரு முடிவுக்கு வந்தன. அதாவது, எவன் மிக உயரமாகப் பறக்கிறானோ அவன்தான் அரசனாக வேண்டும் என்பதுதான் அந்த முடிவு.

எல்லாப் பறவைகளும் பறந்தபின் கடைசியாக ராஜாளி தன் பெரிய சிறகுகளை விரித்துப் பறந்தது. அது பறக்கத் தொடங்கியதும் அதற்குத் தெரியாமல் ஒரு சிறு குருவி திருட் டுத்தனமாய் அதன் முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டு விட் டது. ராஜாளி எல்லாப் பறவைகளையும்விட உயரமாய்ப் பறந்தது. பறந்துகொண்டே சூரியனுக்குப் பக்கத்தில் போய்விட்டது. அங்கிருந்தபடியே, "இதோ பாருங்கள்! நான்தான் எல்லாரையும்விட உயர்ந்தவன்!" என்று கூவிற்று. அப்போது, "இல்லை; என்னைப் பாருங்கள்!" என்று அந்தச் சின்னக் குருவி ராஜாளியின் முதுகிலிருந்து கூவி இன்னும் கொஞ்சம் உயரமாகப் பறந்தது. ஆனால் பாவம்! அது போன வேகத்தில் நேராகச் சூரியன்மேல் போய்த் தலையை மோதிக் கொண்டுவிட்டது! அந்த அதிர்ச்சியில் அப்படியே தலைகீழாகக் கீழே வந்து விழுந்தது. உடனே சமாளித்துக்கொண்டு ஒரு மலை உச்சியில் ஏறி நின்றுகொண்டது. அதை எல்லாப் பறவை களும் அரசனாக ஏற்றுக்கொண்டன. அது சூரியன்மேல் தலையை மோதிக்கொண்டதால் தலை உச்சியில் சிவப்பாகி விட்டது. அதனால் அதற்குப் பொன்முடிப் பறவை என்று பெயர் உண்டாயிற்று.

ஜக்கு துப்பறிகிறான்

★

'ஆர்வி'

ஜமக்காளத்துக்குள் பதுங்கிக் கொண்ட நந்துவின் உடம்புதான் அசையாமல் ஆடாமல் இருந்ததே தவிர அவன் மூளை என்னவோ தடுமாறிக்கொண்டுதான் இருந்தது. பாவம், துரதிருஷ்ட வசமாக உள்ளே கதவைத் திறந்து நுழைந்து வந்தவன் நந்துவின் கையை மிதித்துவிட்டான். அடுத்த கணம் 'வீல்' என்று கத்திவிட்டான் நந்து. பூட்ஸ் காலால் விரலை மிதித்தால் யார்தான் கத்தாமல் இருப்பார்கள்?

இந்தச் சத்தத்தைக் கேட்டு வெளியிலிருந்த மற்றவர்கள் ஓடி வருவதற்குள் விரலை மிதித்தவன் ஜமக்காளத்தை விலக்கிப் பார்த்தான். தேள் கொட்டிய திருடனைப் போல நந்து அவன் கைகளில் மாட்டிக்கொண்டு திருதிருவென்று விழித்தான். அவன் அந்தப் பையனைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

அவன்தான் சோனி! உல்பின் கட்சியைச் சேர்ந்தவன். இன்னும் சுருக்கமாகச் சொல்லப்போனால் எதிர்க்கட்சியின் மூளை. ஜக்குவுக்கும் உல்புக்கும் என்னதான் போட்டியிருந்தாலும் ஒருவனுடைய சாமர்த்தியத்தை மற்றவன் பாராட்டுவான். ஆனால் இந்தச் சோனியோ அப்படிப்பட்டவனல்ல. மகா வஞ்சனைக்காரன். இவன் இல்லாவிட்டால் மயிலாப்பூர் பையன்களிடையே இரண்டு கட்சிகளே இருக்காது.

நந்துவுக்கு இன்னொரு திகில் என்னவென்றால் ஜமக்காளத்தில் ஒளிந்திருக்கும் இன்னொருவனாவது இவர்கள் கையில் அகப்படாமல் இருக்கவேண்டுமே என்பதுதான். அவன் அநேகமாக முக்கால்வாசி, ஜக்குவாக இருந்தாலும் இருக்கலாம். இவர்கள் அவனை யாவது பார்க்காமல் இருக்கட்டும் என்று மனசுக்குள் வேண்டிக் கொண்டான்.

நந்து தன் திகிலை அடக்கிக் கொண்டு, "கொய்யாக்கா—கொய்யாக்கா—" என்றான். அவன் கண்ணில் நிஜமாகவே ஜலம் கசிந்தது. விரல் அகப்பட்டுக்கொண்டதனால் வந்த ஜலம்தான் அது!

"டேய் திருட்டுப் பயலே, உள்ளதைச் சொல்லு. யார் நீ? எங்கே வந்தே?" என்றான் சோனி.

இதற்குள் உல்பும் இன்னும் நாலு சிறுவர்களும் உள்ளே வந்துவிட்டார்கள். கட்டைத் தொண்டையில், "டேய் சோனி! பிடிச்சு

இழுத்துண்டு வாடா அந்தப் பயலை வெளியிலே!" என்றான் உல்ப்.

அவன் கையில் கீழே ஜன்னலருகில் மாட்டியிருந்த கத்தியில் ஒன்று இருந்தது. அதில் அங்கங்கே சிவப்புக்கறை படிந்திருந்தது. நந்துவுக்குச் சொரேர் என்றது.

"வாடா வெளியிலே!" என்று இழுத்தான் சோனி.

"ஐயோ, எம் மாமன் அடிப்பாரு. நான் மாட்டேன். அப்பாடீ!" என்றான் நந்து.

உல்ப் திருப்பி, "மாமனா? அவன் யாரடா மாமன்?" என்று கேட்டான்.

"எம்பேருதான் சொன்னேனே - முனிசாமின்னு" என்றான் நந்து, திமிறிக்கொண்டே.

"சுத்த அதிர்வேட்டுப் போலிருக்குடா இது!" என்றான் ஒரு பையன்.

இந்தச் சமயத்தில் ஏதோ கிரீச் சென்று சத்தம் கேட்டது. சத்தம் எங்கிருந்து வந்தது என்று மட்டும் தெரியவில்லை. ஆனால் உடனே நந்து உள்பட எல்லாருக்கும் தூக்கி வாரிப்போட்டது. மூலையில் ஜமக்காளம் மடங்கி மேடிட்டுக் கிடந்ததால் நந்துவைப் பிடித்திருந்த சோனி அவன் கையை விட்டுவிட்டு, "டேய், பானு! அந்த ஜமக்காளத்தைச் சுருட்டிவிடடா! இன்னும் யாராவது இருக்கானுகளா பார்க்கலாம்" என்று கூறினான்.

நந்துவின் உடல் வெடவெட என நடுங்கியது. 'யாரோ, பாவம்' என்று அந்த முகம் தெரியாத பையனுக்காக அவனுக்கு அநுதாபம் உண்டாயிற்று.

பானு என்ற பையன் உடனே ஜமக்காளத்தைத் தூக்கி நாலு புறமும் இழுத்து மடித்தான். ஆனால் என்ன ஆச்சரியம்! நந்துவுக்குப் பிரமிப்புத் தாங்க முடியவில்லை. அவனுக்குப் பக்கத்தில் வந்து பதுங்கிக்கொண்ட பையனை அங்கே காணவேயில்லை. என்ன அதிசயம் இது! கனவு காண்கிறோமோ என்றுகூட நந்து எண்ணினான். ஒரு சமயம் ஜமக்காளத்தோடு ஜமக்காளமாக அவனும் சுருண்டு விட்டானோ என்று தோன்றிற்று. அது எப்படி முடியும்? இருந்தாலும் தெரிந்துவிடுமே. இல்லாவிட்டால் ஒருகால் ஏதாவது பேய், பிசாசாக இருக்குமோ?

தரையைப் பார்த்தால் அது சமதளமாகவேதான் இருந்தது. பின்னே அந்தப் பையன் எங்கே? அவனே ஜக்குவாக இருந்தாலும் இருக்குமோ?

ஆனால் மற்றப் பையன்கள் இதையெல்லாம் உணராமல் அவனை, "வாடா வெளியிலே, செவிட்டுக் கழுதே!" என்று தடதடவென்று இழுத்துக்கொண்டு போனார்கள்.

அங்கே போனதுமே நந்து மூன்றாவது முறையாக நடுங்கியதுடன் வாய்விட்டு, "ஹோ.." என்றும் அலறிவிட்டான்.

முன்பு ஜக்கு எதைக் கண்டு அலறி, கண்களை இறுக மூடிக்கொண்டு தன் நினைவை மறந்தானோ அதே உருவத்தை, அந்தக் கோரமான மனித உடலை அங்கே சுவரில் சாய்த்து வைத்திருந்தது.

"ஐயோ, கொலை!" என்று கத்தலாமா என்று பார்த்தான் நந்து. சத்தம் தொண்டையை விட்டு எழுப்பினால்தானே?

சோனி அவன் எதிரே வந்து, "டேய் பயலே, உள்ளதைச் சொல்லிவிடு. யார் நீ? எங்கே வந்தே? எத்தனை நாளாய் இப்படி வந்துகொண் டிருக்கே? இன்னிக்கு

எதற்காக வந்தே? உள்ளதைக் கக்கவில்லையோ, நீ சாப்பிட்ட சோற்றையெல்லாம் கக்கிடுவேஉம்!'' என்று மமதையுடன், கன அழுத்தலுடன் பெரிய போலீஸ் இன்ஸ்பெக்டரைப் போலக் கேட்டான்.

அவன் கையிலும் இப்போது மற்றொரு வாள் இருந்தது. அவன் அதைத் தூக்கமாட்டாமல் தூக்கிக் கொண்டு நிற்பதைக் கண்ட நந்து தன் தைரியம், சாமர்த்தியம் அனைத்தையும் ஒருங்கு சேர்த்து, “ஹி.. ஹி..ஹி'' என்று கேலி செய்வது போல் சிரித்தான்.

“அடே, இது வெறும் பைத்தியம் போலிருக்குடா, சோனி!'' என்றான் பாலு.

“வெறும் பைத்தியமில்லேடா; வெல்லம் 'போட்ட பைத்தியம்! இவனா பைத்தியம்? நம்பளையெல்லாம் பைத்தியமாய் அடிக்காமல் இருந்தால் போதாதா? பெரிய ஸி. ஐ. டி. மாதிரி இப்படி வந்திருக்கான்; இவனைப்போய்ப் பைத்தியம் என்கிறான். நீதான் பைத்தியம்!'' என்றான் சோனி.

பயங்கரமான ஸ்டன்ட் ஆக்டர் போல உல்ப் ஒரு முறை. நோடையிடி மாதிரி சிரித்துவிட்டுக் கனைத்துக்கொண்டான். நந்துவோ ரொப்பச் சாமர்த்தியத்துடன் ‘ஒண்ணும் நப்பர்' செவிடன் போலவே ‘திருக்பிருக்'கென்று மிரள மிரள விழித்தான்.

பின்புறம் திருப்பி அந்தப் பயங்கர மனித உடலைக் கவனிக்கவே நந்துவுக்குத் திகிலாக இருந்தது.

உயரமானவர்: இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது! நேற்றைக்கு உங்கள் சங்கீதக் கச்சேரிக்கு வர முடியாமல் போய் விட்டது. மன்னிக்கணும்.

குள்ளமானவர்: அதனாலே என்ன இப்போ. இன்னிக்கு நம்ப சிஷ்யன் பாடரான். அதையாவது கேளுங்கோ!

அதையும் தவிர வெயில் பக்கமாய் எதிர்த்துப் பார்க்க வேண்டியிருந்ததால் கண்களும் கூசின. அதனாலேயே அவன் பின்புறமாகத் திரும்பி நின்றுகொண்டான்! 'என்ன ஆனபோதிலும் சரிதான். தைரியத்தை இழக்கக்கூடாது' என்று நிச்சயம் செய்துகொண்டான் நந்து.

"என்னடா, நான் கேட்கிறேன். ஹி..ஹ்..ஹி என்று சிரிக்கிறாய்! மிரள மிரள விழிக்கிறாய்? என்ன சேதி? உடம்பு எப்படி இருக்கு, தம்பி?" என்றான் சோனி.

"நான் இனிமே கொய்யாக்கா பறிக்க வரல்லீங்க, அண்ணே" என்றான் நந்து.

"டேய்!" என்று உறுமிக்கொண்டே ஒரு முறை புளியங்கொம்பை உலுக்குவதைப் போல நந்துவின் சட்டையைப் பற்றிக் குலுக்கிவிட்டு, "யாரு கிட்டே இந்த வேஷம்? செவிட்டுப் பயல்மாதிரி ஆக்ட் பண்ணுகிறாயா? அங்கே கிரீச்சென்று சத்தம்கேட்டபோது திரும்பிப் பார்த்தியே, அது மட்டும் எப்படிக் காதில் விழுந்தது உனக்கு? உம்?" என்று அவன் மேலும் மிரட்டினான்.

"எங்க மாமா பொல்லாதவரு! ஏண்டா போனேன்னு அடிப்பாரு. அந்தப் பங்களாவிலே பூதம் இருக்குதன்னு எங்க மாமா சொல்வாரு - நான் வீட்டுக்குப் போகணும். எங்க அம்மா அடிப்பாங்க!" என்று அழமாட்டாத குரலில் பேசினான் நந்து.

"சரி சோனி! நீ இந்தப் பக்கம் வா! உனக்கு எல்லாம் பசிய மாட்டான் அந்தப் பயல். நான் கவனிச்சுக்கறேன்" என்று உல்ப் முன்னால் வந்து நந்துவின் தலைமுடியை முரட்டுப் பிடியாகப் பிடித்துக்கொண்டான். என்ன துரதிருஷ்டம்! அவனுடைய கையோடு கையாக நந்துவின் தலையில் இருந்த பரட்டைத் தலை டோபா வந்துவிட்டது. உடனேயே அங்கு எழுந்த பெருத்த ஆரவாரத்தைப் பார்க்கவேண்டுமே!

"ஹா - ஹா!" என்று அட்டகாசமாய்க் கத்தினான் உல்ப்.

"அடேய் - நந்துப் பயல் மாதிரி இருக்காண்டா!" என்றான் பாலு.

"மாதிரி என்னடா? அவனே தாண்டா இவன்" என்றான் சோனி.

"நல்லாப் பாருடா" என்றான் இன்னொருவன்.

எவ்வளவோ முயன்றும் நந்துவினால் இதற்குமேல் தைரியத்துடன் இருக்க முடியவில்லை. எதிரிகளின் கையில் தகுந்த துணை

யின்றி அகப்பட்டுக் கொண்டு விட்டோமே என்று கலங்கினன். அவர்கள் அவனுடைய மாறு வேஷத்தைக் கண்டு பிடித்து விட்டார்களே என்ற அவமானம் வேறு ஒருபுறம் அவனைப் பிடுங்கி எடுத்தது.

உல்ப் பள பளவென்று மின்னும் வாளைப் பெரிய போர்வீரன் சுழற்றுவது போல் ஒரு சுழற்று சுழற்றி விட்டுக் கந்தல் ஆடையுடன் குன்றிப் போய் நிற்கும் நந்துவிடம் வந்து ஒருதடவை கனைத்தான். கைகளைப் பிடித்துக் கொண்டு, "அடேய்! இங்கே கிடந்த சாவி எங்கே? நேற்றும் நீதானே வந்தாய்? எங்கே அந்தத் திருட்டுக் கோழை ஜக்குப் பயல்?" என்று மிரட்டினன்.

இருந்தாற் போலிருந்து திடீரென்று வெளிப்புறம் இருந்த கதவு திறந்து கொண்டது. முகமூடி அணிந்த ஒரு பையன் அங்கே தோன்றினன். உத்தேசமாய்ப் பதினைந்து வயசிருக்கும். எல்லாரும் திரும்பிப் பார்த்தபோது அவன் கையில் ஒரு கைத் துப்பாக்கி இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்கள். சோனியின் கையிலிருந்த வாள் அவனை அறியாமல் கீழே நழுவியது.

"அடே பயல்களா! என்னடா செய்கிறீர்கள்?

"உம்?" என்று கர்ஜித்தான் அந்த முகமூடிப் பையன்.

என்னதான் மாறுவேஷம் அணிந்திருந்தபோதிலும் அவன் ஜக்குதான் என்று நந்துவுக்குத் தெரிந்துவிட்டது. நல்ல சமயத்துக்கு வந்தான் என்ற தைரியமும் பிறந்துவிட்டது. இனி அவனுக்கு என்ன பயம்? உடனே ஒரே தாவாகத் தாவி, கீழே கிடந்த அந்த வாளைக் கையில் எடுத்துக்கொண்டான்.

ஜக்கு கீழ்ப்புறம் தெரியும் ஜன்னலோரமாகப் பாதுகாப்புடன் நின்றான். நடுவில் அவன் பார்வை கீழே சென்றபோது அவன் முகம் மாறுதலடைந்தது. அழகான பெரிய கார் ஒன்று பங்களாவின் முகப்பில் நுழைந்து வந்தது. அதனுள் நாலைந்து பேர்கள் உட்கார்ந்திருப்பதும் லேசாகத் தெரிந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் கீழே கொய்யா மரத்து அணில், 'கீ கீ' என்று கீச்சிட்டது. ஜக்கு கையில் துப்பாக்கியுடன் என்ன செய்வது என்று புரியாமல் நின்றான். நந்துவோ யாரும் திடீரென்று தங்கள்மீது பாயாதவாறு வெகு உஷாராகக்கையில் வாளுடன் நின்றான். எதிரே சார்த்தியிருந்த மனிதவுடல் அவன் கண்ணில் இப்போது சரியாகப் பட்டது. உடனேயே, 'ஓஹோ' என்ற சத்தம் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டது.

மோட்டார் வந்து நின்ற சத்தம் கேட்டதும் உல்ப், சோனி கோஷ்டியாரின் முகங்களில் வேதனை தாண்டவமாடிற்று.

(தொடரும்)

சிங்கமும் கரடியும்

ஓடைக் கரையிலே பெரிய ரகளை ஏற்பட்டது. சிங்கம் ஒரேயடியாகக் கர்ஜிக்க, கரடி ஒரே கத்தலாகக் கத்த பெருத்த சண்டை தோன்றிவிட்டது.

சிங்கம் தண்ணீர் குடிக்க வந்த போது கரடியும் தாகசாந்தி செய்துகொள்ள ஓடைக்கரைக்கு வந்தது.

"அடேய், நீ எப்படி நான் வரும்போது வரலாம், ராஜா என்ற மரியாதையில்லாமல்?" என்றது சிங்கம்.

'ராஜா என்றால் தண்ணீர்த் துறையில் என்ன வந்தது?" என்று கேட்டது கரடி.

"அப்படியா சொல்கிறாய்?"

"அப்படித்தான் சொல்கிறேன்."

'ஹாஹ்ஹாங்" என்று கர்ஜித்தது சிங்கம்.

"ஹிஹி—" என்று கத்தியது கரடி.

ஒன்றின் மேல் ஒன்று பாய்ந்தது; பிறாண்டியது; அறைந்தது. ரத்த வெள்ளம் பெருகியது

நடுவில் இரண்டும் ஒரு கணம் பின்வாங்கின. ஒன்றின் மேல் ஒன்று மூர்க்கமாய்ப் பாயப் போகிறது. இந்தச் சமயத்தில் இரண்டும் தலை நிமிர்ந்தன. ஆகாயத்தில் சில கழுகுகள் வட்டமிட்டுக்கொண் டிருந்தன. இதைக் கண்டதும் இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்துக்கொண்டன. "நாம் நண்பர்களாகவே இருப்போம். வீணாக இந்தக் கழுகுகளுக்கு நாம் இரையாக வேண்டியதில்லை" என்று சொல்லிக்கொண்டு சண்டையை நிறுத்திவிட்டு, இரண்டும் ஒரே துறையில் தண்ணீரைப் பருகிவிட்டுச் சென்றன. —ஈசாப் கதை.

பிள்ளையாரே வாரும்!

'மணிவண்ணன்'

ஓடைக்கரைப் பிள்ளையாரே
ஒருநமஸ் காரம்
ஓடிவாரும் பிள்ளையாரே
உதவிடுவீர் நீரும்.

இருண்டநிறப் பிள்ளையாரே
இரண்டுநமஸ் காரம்
உருண்டவயிற் றோடுவந்து
ஊக்கம்மிகத் தாரும்.

முச்சந்திப் பிள்ளையாரே
மூன்றுநமஸ் காரம்
இச்சணமே ஓடிவந்து
இன்பங்களைத் தாரும்.

நாலுசந்திப் பிள்ளையாரே
நாலுநமஸ் காரம்
பாலும்பழம் தந்திடுவேன்
பாவங்களைத் தீரும்.

அஞ்சுகரப் பிள்ளையாரே
அஞ்சுநமஸ் காரம்
பஞ்சுபோலத் துன்பம் போகப்
பாலித்தருள் தாரும்.

ஆறுமுகன் அண்ணனாரே
ஆறுநமஸ் காரம்
நூறுஎண்ணு முன்னேவந்து
நுண்ணறிவு தாரும்.

யானைமுகப் பிள்ளையாரே
ஏழுநமஸ் காரம்
பானைவயிற் றோடுவந்து
பாடஞ்சொல்லித் தாரும்.

எங்கள் அன்புப் பிள்ளையாரே
எட்டுநமஸ் காரம்
மங்களமும் புகழும்வர
வரங்கள்பல தாரும்.

உறுதிதரும் பிள்ளையாரே
ஒன்பதுநமஸ் காரம்
சிறுமைகளைத் தீர்ப்பதற்குச்
சீக்கிரமே வாரும்.

பரமன்பெற்ற புத்திரரே
பத்துநமஸ் காரம்
இரங்கி வந்தெனக்குச்
சித்திபல தாரும்.

திருந்திய வேணு

நா. ஜகந்நாதன்

வேணு கிறிஸ்துவக் கல்லூரிப் பள்ளியில் படித்துக்கொண் டிருந்தான். அவன் மிகவும் பொல்லாதவன். திருட்டு, கோள்மூட்டுதல் முதலியவைகளில் நிபுணன். எந்தெந்தக் காரியங்களைச் செய்யக்கூடாது என்று பெரியவர்கள் சொல்கிறார்களோ, அவைகளை எல்லாம் செய்வான். ஊர் சுற்றிவிட்டு வெகுநேரம் கழித்துத்தான் வீடு திரும்புவான். பாடங்களைப் படிக்க நேரமிருந்தால் தானே, பரீட்சையில் மார்க் வாங்கப் போகிறான்? அவன் தந்தை எவ்வளவோ கண்டித்துப் பார்த்தார். அவன் யாருக்கும் அடங்காதவனாகிச் சிறுவயதிலேயே, 'போக்கிரி' என்ற பட்டம் பெற்றுவிட்டான்.

இந்த வருஷ ஆரம்பத்தில் கிறிஸ்துவக் கல்லூரிப் பள்ளி சேத்துப்பட்டுக்கு மாற்றப்பட்டதல்லவா? தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்கு மின்சார ரெயிலில் போகவேண்டும். இந்தச் செய்தியைக் கேட்டது முதல் வேணுவுக்குத் தலை கால் தெரியவில்லை. பள்ளிக்கூடம் செல்வதை வேம்பாகக் கருதிய அவனுக்குக்கூட இப்போது பாதாம் அல்வா சாப்பிடுவது போல் இருந்தது. எலெக்ட்ரிக் ரெயிலில் சென்று மகிழ்ச்சி அடைய விரும்பினான். பள்ளிக்கூடம் திறக்கும் நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

"டேய்! ஜாக்கிரதையாகப் போயிட்டு வா! ரெயில் ஓடும்போது இறங்காதே! எலெக்ட்ரிக் ரெயிலில் விஷமம் பண்ணினாயோ, அவ்வளவுதான்! தெரிஞ்சுதா! போய் இந்த ரூபாயைக் கொடுத்து ஸீஸன் டிக்கெட் வாங்கிக்கொண்டு அப்புறம் ரெயில் ஏறு!" என்று அவன் அம்மா உபதேசம் செய்து, ஓர் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தாள். வேணு பரம சாதுபோல் வாங்கிக்கொண்டு ஜோராகக் கிளம்பினான். ஸீஸன் டிக்கெட் வாங்குவதற்காகக் கொடுத்த பணத்தை ஐந்து நாட்களில் கண்டபடி செலவு செய்துவிட்டான். தினமும் ஓவ்வோர் அணா கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு சேத்துப்பட்டுக்குப் போவதும், திரும்புவதுமாக இருந்தான். வீட்டில் ஸீஸன் டிக்கெட் வாங்கிவிட்டதாகச் சொன்னான். அவ

னுடைய தாயாருக்குத்தான் ஆங்கிலம் தெரியாதே! எதையோ காட்டி ஸீஸன் டிக்கட்டென்று ஏமாற்றி விட்டான்.

சில நாட்களுக்குப் பிறகு கையில் காசில்லாமல் போய்விட்டது. டிக்கெட் வாங்க முடியவில்லை. எத்தனையோ பேர் 'டிக்கெட்' இல்லாமல் பிரயாணம் செய்வதைப் பார்த்திருந்த அவனுக்குத் தானும் அம்மாதிரி செய்துவிடலாம் என்ற யோசனை எழுந்தது. மேலும் மாணவர்களை அதிகமாக டிக்கெட் கேட்பதில்லை. ஆகையால் எப்படியும் டிமிக்கி கொடுத்துவிடலாம் என்று நினைத்துப் பல நாட்கள் டிக்கெட் வாங்காமலே பிரயாணம் செய்துவந்தான்.

ஒரு நாள் பம்பாயிலிருந்து அவன் மாமா வந்திருந்தார். அவர் பம்பாயில் ஒரு பெரிய ஆலையில் மானேஜராக இருந்து பெருத்த பணக்காரராக ஆகியிருந்தார். அவர் வந்து விட்டாரென்றால் வேணுவின் பாடு குஷிதான். ஹோட்டலில் வயிறு நிரம்ப இஷ்டப்பட்டதெல்லாம் வாங்கிக் கொடுப்பார்; தினமும் ஒரு சினிமாவுக்கு அழைத்துச் செல்வார்; ஞாயிற்றுக்கிழமைகளில் மரீனு பீச்சுக்கு அழைத்துப் போவார். ஆகவே வேணுகோபால் ரொம்பவும் குஷியாக இருந்தான். அவன் மீது அவருக்கு அபாரமான

கைதிகளுக்குப் போதிய வசதி கிடைக்கிறதா, அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்வையிட ஒரு பிரமுகர் ஜெயிலுக்கு விஜயம் செய்தார். அவர் ஒரு கைதி தம்மைப் பார்த்து அழுவதைக் கண்டு, "ஏன் அப்பா, உனக்கு என்ன குறை? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"விதி யாரைங்க விட்டது? நான்தான் திருடினேன்; ஜெயிலுக்கு வந்திருக்கிறேன். பாவம், நீங்களும் ஜெயிலுக்கு வரும்படியாயிடுச்சே, அதைப் பார்க்கறப்போ அழுகைதான் வருதுங்க" என்றான் கைதி.



அன்பு. ஏனெனில் அவருக்குக் குழந்தை குட்டி ஒன்றும் கிடையாது.

அன்று அவர் மீண்டும் பம்பாய்க்குப் புறப்படுவதற்காக யத்தனங்கள் செய்துகொண்டிருந்தார். வேணுவைக் கூப்பிட்டு மணிபர்ஸைக் கொடுத்து அதில் எவ்வளவு இருக்கிறதென்று எண்ணி வைக்குமாறு கூறி வெளியே போய்விட்டார். அவன் அதைப் பல தடவைகள் எண்ணிக் கடைசியில் 101 ரூபாய் இருப்பதாக எழுதினான். அவனுடைய குறும்புத்தனம் வாலாட்டியதன் பயனாக ஒரு ரூபாய் அவன் சட்டைப் பையில் புகுந்துகொண்டது. பையில் நூறு ரூபாய் இருப்பதாக எழுதிவைத்தான். அவனது மாமா இருக்கும் சமயங்களில்எல்லாம் அவன் அதிகமாக விஷமம் செய்ததில்லை. ஆகையால்தான் அவன் மீது அவர் அவ்வளவு நம்பிக்கையுடனும் அன்புடனுமிருந்தார். மாமா வந்ததும் நூறு ரூபாய் இருப்பதாகக் கூறினான். அவர் சரியென்று வாங்கிக் கொண்டார். ஊருக்குப் புறப்படும்போது அவனுக்கு ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டுப் போனார். இவ்வளவு அன்பாக இருப்பவருக்குத் துரோகம் செய்கிறோமே என்ற எண்ணம் துளிக்கூட உண்டாகவில்லை.

மாமா போனபிறகு பள்ளிக்குப் புறப்பட்டான். வழக்கம் போல் டிக்கெட் வாங்காமல் ஜம்மென்று ஏறி உட்கார்ந்துகொண்டான். பத்து ரூபாய் நோட்டு வீட்டில் இருந்தது. ஒரு ரூபாயை மட்டும் பாக்கெட்டில் வைத்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் முகம் மாறியது. எதிரே டிக்கெட் இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டிருந்தார். டிக்கெட்டை எங்கோ வைத்துவிட்டவன் மாதிரி நோட்டுப் புத்தகங்களிலும் பாக்கெட்டிலும் தேடுவதுபோல் பாசாங்கு செய்தான். டிக்கெட் வாங்கியிருந்தால்தானே? ஆகவே டிக்கெட் இன்ஸ்பெக்டரிடம், "எங்கேயோ தொலைஞ்சுவிட்டது, சார்!" என்றான் அழமாட்டாத குறையாக.

இந்த வேணுவைப் போல் எத்தனை பேரைப் பார்த்திருப்பார், டிக்கெட் இன்ஸ்பெக்டர்? அவன் சொன்னதை அவர் நம்பவில்லை.

"நீ டிக்கெட் வாங்கவே இல்லை. பொய் பேசாதே; அபராதம் பதின்மூன்றணா எடு! இருக்குதா, இல்லையா? இல்லாவிட்டால் புஸ்தகங்கள் என்னிடம் இருக்கட்டும். நீ வீட்டுக்குப் போய்ப் பணம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் புஸ்தகங்களை எடுத்துப் போ!......என்ன சொல்றே? பணமிருக்கா, இல்லையா?..." என்றார் கடூரமான குரலில்.

வேணுவின் பாடு, பாவம், வெலவெலத்துப் போய்விட்டது. புஸ்தகங்களின் விலையோ ஆறேழு ரூபாய் இருக்கும். அவைகளை ஈடு வைத்து விட்டுப் போக அவன் மனம் விரும்பவில்லை. வேறு வழி இல்லை என்ற முடிவுக்கு வந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தான். 'ஓர் அணா கொடுத்து டிக்கெட் வாங்கியிருந்தால் வழியில் நல்ல செலவு பண்ணியிருக்கலாமல்லவா?' என்று கேட்டது அவன் மனம். டிக்கட் இன்ஸ்பெக்டர் ஒரு பில்லையும் பாக்கி மூன்றணாவையும் கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

வேணுவுக்கு அன்றுதான் திருடிய பணம் நிற்காது என்ற உண்மை புலப்பட்டது. தன்னிடம் நம்பிக்கை வைத்துத் தனக்குப் பத்து ரூபாயும் கொடுத்த தன் மாமாவுக்கே துரோகம் செய்ய நினைத்த தன் புத்தியை நொந்துகொண்டான். அதனால்தான் அந்த ஒரு ரூபாய் தன்னிடம் தங்கவில்லை என்று அறிந்து மனம் வருந்தினான்.

வீட்டுக்குப் போனதும் தன் தாயிடம் தான் செய்த தவற்றை எடுத்துக் கூறினான்; அழுதான். அவன் தாய், "எப்படியோ உனக்குப் புத்தி வந்துவிட்டது. இனிமேல் நல்ல பையனாய் இருந்தால் அதுவே போதும்" என்றாள்.

மறுநாளே பம்பாயிலிருந்த மாமாவுக்குத் தான் செய்த தவற்றையும், அந்த ரூபாய் தன்னிடம் தங்காமல் போய்விட்டதையும் எழுதினான் ஒரு கடிதத்தில். அதில் தன்னை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டான். அவனை மன்னித்து விட்டதாகக் கடிதம் வந்தது. இப்போதெல்லாம் வேணுவைப்போல் நல்ல பையனே கிடையாது என்று அந்த ஊரார் எல்லாம் புகழ்கிறார்கள்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(E) 16. இப்ராஹிம், A., திருக்கோயிலூர். 17. ஈசுவர், T.R., பெரம்பூர். 18. ஏகாம்பரம், R., சிவகங்கை. 19. இருளப்பன், P., சின்ன காஞ்சிபுரம். 20. ஏழுமலை, T. M., திருமழிசை. 21. ஈசுவரன், S., கோபிச்செட்டிபாளையம். 22. எட்வர்டு லெக்ரண்ட், கிராண்ட் பாஸ். 23. இமானுவல் ராஜ், கொழும்பு. 24. ஏகாம்பரம், R., சிவகங்கை. 25. எதிராஜுலு, P., சென்னை-21. 26. இமானுவல், N., சென்னை-14. 27. ஈசுவரன், தத்தாத்திரேயன், T.V, சென்னை-18. 28. இளங்கோவன், P. K., பாப்பன்பாளையம்.

(F) 4. பெர்னாண்டோ, F., மணப்பாடு. 5. பெர்னாண்டோ, A., திரிகோணமலை. 6. பிரான்சிஸ் வின்செண்ட், திருச்சிராப்பள்ளி. 7. பரூக், P. M., கம்பளை. 8. பிரான்ஸிஸ் சேவியர், A., திருச்சிராப்பள்ளி.

(G) 97. ஞானசேகரன், E. R., திருப்பத்தூர். 98. கோவிந்தராஜன் K., உடுமலைப்பேட்டை. 99. கணபதி வெங்கடராஜன் K. P., கரூர். 100. கிரிஜா, ஜயராமன், S., கல்கத்தா - 29. 101. கணேசன், P., மட்டக்களப்பு. 102. கணேசன், V., சென்னை-17. 103. ஜார்ஜ், M. F., பீடர், விக்டர், மதுராந்தகம். 104. கோபாலன், M. C., அரக்கோணம். 105. ஜயராஜ், G., சென்னை - 14. 106. கோவிந்தராஜ், P., திருவாரூர். 107. கோபாலன், S., சென்னை-4. 108 கோவிந்தராஜன், ராஜன், நாராயணசாமி, A. R., மீளமேடு கோயம்புத்தூர். 109. கணபதி, P., வேலூர். 110. கோபாலகிருஷ்ணன், S., இடைப்பாடி. 111. கோபாலகிருஷ்ணன், S.V., கொழும்பு. 112. கோவிந்தராஜு S., பொள்ளாச்சி. 114. கோபாலகிருஷ்ணன், T. V., சென்னை - 4. 115. கோபாலன், S. S., சேலம். 116. கோபாலன், P. P., மருதூர். 117. கோபாலன், B. M., சென்னை-17. 118. குருசாமி, S., திருப்பத்தூர். 119. கோபாலகிருஷ்ணன், K., ஐயம்பேட்டை. 120. கஜானன் ராவ், A., மாடம்பாக்கம். 121. கோபிநாதன், விசுவநாதன், G., சென்னை - 6. 122. கோபு, S., கோனேரிராஜபுரம். 123. குருசாமி, V., சிவகாசி. 124. கோவிந்தராஜன், P., தாராபுரம். 125. கருடப்பன், V., ஸ்ரீவைகுண்டம். 126. ஞானு, சிவா, அண்ணாமலை, T., சென்னை-2. 127. கோவிந்தசாமி, V. M., கோபிச்செட்டிபாளையம். 128. கோபாலகிருஷ்ணன், N. S. K., யாழ்ப்பாணம். 129. கோபால் ராஜ், R., சென்னை - 21. 130. குருநாதன் N., பப்பளப்பிட்டியா. 131. கோபால், P. M., சென்னை - 7. 132. கோபாலசாமி, P. S., கொழும்பு. 133. ஞானசுந்தரம், M., யாழ்ப்பாணம். 134. கௌரி, சங்கர், விஜயலக்ஷ்மி, திருமூர்த்தி G., சொக்கிக்குளம் 135. கோபாலகிருஷ்ணன், D., ஆத்தூர். 136. கணபதி, A., பணகுடி. 137. கோபாலன், S., புது டில்லி. 138. கணபதி, N., ஜலகண்டபுரம். 139. கோவிந்தராஜ், P., கோயம்புத்தூர். 140. கணேசன், A., சென்னை-17.

(H) 19. ஹமீபா, பாதிமா, திண்டுக்கல். 20. ஹரிஹரன், P., திருவனந்தபுரம். 21. ஹேமாவதி, K., திண்டிவனம். 22. ஹமீபா, A. R. M., கொழும்பு. 23. ஹம்ஸா

M. H. M., கொழும்பு. 24. ஹரிஹரன், S., அறந்தாங்கி. 25. முகமத் ஹமீபா, N. M. K., திருச்சிராப்பள்ளி. 26. ஹேமேந்திர குமார், கும்பகோணம். 27. ஸ்ரீஹரி, N., கோயம்புத்தூர், 28. ஹரிஹரன் A., முசிரி. 29. ஹாலன், சுப்பன், H. N., அரவங்காடு. 30. ஹூசேன், S.M., அநுராதபுரம்.

(I) 16. இந்திராணி, V.S., மேல்வயல்மூர். 17. இந்திரா, J., கோயம்புத்தூர். 18. ஐயம்பெருமாள், லக்ஷ்மி, கல்யாணி, S., சௌந்தரலிங்கபுரம். 19. இப்ராஹிம், M. S. M., கண்டி. 20. இஸ்மயில்கான், மதுரை. 21. ஐயாதுரை, தில்லையாடி. 22. இந்திரா, கமலா, D., சென்னை - 8. 23. இந்திரா, S., திருநெல்வேலி. 24. இந்திரா தேவி, பாலசுப்பிரமணியன், K. C., கொல்லங்கோடு.

(J) 74. ஜம்புகாதன். P. S., சென்னை-17. 75. ஜப்ரி, S. M., அக்குறணை. 76. ஜயலக்ஷ்மி, T. N., தாம்பரம். 77. ஜயராமன், பேபி, கல்யாணி, சந்திரா, வடுகாதப்பட்டி. 78. ஜானகி, T. R., விள்ளிவாக்கம். 79. ஜகந்நாதன், V. S., மானிப்பாய். 80. ஜயலக்ஷ்மி, R., சென்னை - 4. 81. ஜயலக்ஷ்மி, உமாநாயகம், பம்பளப்பிட்டியா. 82. ஜானகி, S., ஈபோ, மலேயா. 83. ஜனார்த்தனம், S., (விலாசம் எழுதவில்லை.) 84. ஜோசப், S., ராகமா, சிலோன். 85. ஜானகிராமன், T. G., சேலம். 86. ஜவாஹர், K. R., கும்பகோணம். 87. ஜயலக்ஷ்மி, S., வில்லிவாக்கம். 88. ஜயபாலன், R., கடலூர். 89. ஜகதீசன், C., சென்னை - 4. 90. ஜயலக்ஷ்மி, A., சென்னை 10. 91. ஜனகநந்தினி, பிரேமா, கோயம்புத்தூர். 92. ஜயசேகரன், S., புதுச்சேரி. 93. ஜகந்நாதன், V., கல்கத்தா. 29. 94. ஜோதி, K. T., ராஜபாளையம். 95. ஜகதீசுவரி, அனந்தலக்ஷ்மி, ஆத்தூர். 96. ஜயலக்ஷ்மி, பம்பளப்பட்டியா. 97. ஜீவேந்திரன், S., திண்டிவனம். 98. ஜான் ஜாக்கப், C., வேலூர். 99. ஜகபீர், O. M. M., நாகூர். 100. ஜயராமன், V., ஊடுவேரா. 101. ஜயவேலு, M., சென்னை-15.

(K) 153. கண்ணன், N., திருச்சிராப்பள்ளி. 154. கந்தசாமி, S., கொடுமுடி. 155. கண்ணன், M., ஜீவரத்தினம், சென்னை-1 156. கனகவேல், R., மதுரை. 157. கண்ணன், தோதாத்ரி, S., புதுடில்லி. 158. கமலகுமாரி, பாலகுமாரன், V., காரவெட்டி. 159. கண்ணபிரான், மணி, M., (விலாசம் எழுதவில்லை.) 160. கல்பகம், R., சென்னை - 4. 161. கந்தசாமி, P., சேலம். 162. குலத்திலக ராஜு, யாழ்ப்பாணம். 163. குமாரசாமி, T., பணகுடி. 164. கோதண்டராமன், S.,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி.................

(தேதி, மாதம், வருஷம்)

ஜனவரி '51 கூபன் நெ.

சென்னை. 21. 165. கௌசல்யா, சரோஜா G., சென்னை - 1. 166. கலைநாயகப், V. M., குயப்பேட்டை. 167. கல்யாணராமன், அப்புலு, K., அறந்தாங்கி. 168. கல்யாணி, K., கோபாலகிருஷ்ணன், சென்னை - 1. 169. கல்யாணசுந்தரம், S. V., சூலூர். 170. கிருஷ்ணன், A., ராபர்ட்ஸன்பேட்டை. 171. கிருஷ்ணசாமி, H. N., பெங்களூர் - 5. 172. கிருஷ்ணசாமி, G., பண்ருட்டி. 173. கிருஷ்ணமூர்த்தி G., கல்கத்தா - 26. 174. கிருஷ்ணமூர்த்தி, V, கரூர். 175. கிருஷ்ணசாமி, G. V., சென்னை - 4. 176. கிருஷ்ணசாமி, P. N., வில்லிவாக்கம். 177. கிருஷ்ணா, S., சென்னை - 14. 178. கிருஷ்ணன், P., வெள்ளக்கோயில். 179. கிருஷ்ணன், B., மாயவரம். 180. கிருஷ்ணன், A., தாம்பரம். 181. கிருஷ்ணமூர்த்தி, D., திருவண்ணாமலை. 182. கிருஷ்ணன், M. N., (விலாசம் எழுதவில்லை.) 183. கிருஷ்ணன், C N, சென்னை -14. 184. கிருஷ்ணமூர்த்தி, R., நெல்லிக்குப்பம். 185. கிருஷ்ணன், P. R., பெங்களூர். 186. கிருஷ்ணசாமி, ராமசாமி, S. N., மதுரை. 187. கிருஷ்ணமூர்த்தி, K. V., மல்லேசுவரம். 188. கிருஷ்ணகுமார், ஷியாம் சுந்தர் P., சென்னை - 6. 189. கிருஷ்ணன், S., தஞ்சாவூர். 190. கிருஷ்ணமூர்த்தி, R., கள்ளக்குறிச்சி. 191. கிருஷ்ணராவ் K. B., பரமக்குடி. 192. கிருஷ்ணன் V., பணப்பாறை. 193. கிருஷ்ணன், S., கோட்டயம். 194. கிருஷ்ணன், S., ஹௌரா. 195. கிருஷ்ணபலால், C. B., ஈரோடு. 196. கிருஷ்ணன், R., சென்னை - 10. 197. கிருஷ்ண குப்தா, தியாகராஜன், செங்கம். 198. கிருஷ்ணசுவாமி, V., தாரமங்கலம். 199. கிருஷ்ணன், M.S., சேலம் டவுன். 200. கிருஷ்ணசுவாமி, T. P., தல்லாகுளம்.

(L) 50. லக்ஷ்மிநாராயணன், K. P., ஈரோடு. 51. லக்ஷ்மி, S., கோடங்கிபட்டி. 52. லக்ஷ்மணன் S. B., கொத்தமங்கலம். 53. லக்ஷ்மி ராகவன், ராமசந்திரன், G. R, கிருஷ்ணகிரி. 54. லக்ஷ்மி நாராயணன், B. S., சென்னை - 2. 55. லோகநாதன் D., சென்னை - 1. 56. லலிதா, பிரேமா, C.R, ஓசூர். 57. லீலா, C., சென்னை - 4. 58. லோகநாதன், பெருமாள், K., இடைப்பாடி. 59. லோகபதி J S. K., மதுரை. 60. லக்ஷ்மி, R., கோயம்புத்தூர். 61. லோகசுந்தரப் T. S., அம்பாசமுத்திரம். 62. லக்ஷ்மி காளிதாஸ், லலிதா, A, திருச்சி. 63. லலிதா தேவி, N, நாகப்பட்டணம். 64. லக்ஷ்மணன், E., நாகர்கோயில்.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★ ★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★ ★★★★★

மார்கழி பஜனை

'ஸேனு'

[கபாலீசுவரர் கோவிலுக்கு அருகில் ஒரு தெரு. விடியற்காலை மணி நாலரை. ஒரே இருட்டு. பனி பெய்கிறது. கிராதி போட்ட ஒரு வீட்டு வாசலில் தலையில் 'மப்ளர்' கட்டிக்கொண்டு மணியும் இன்னும் சில பையன்களும் மெதுவாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

மணி: என்னடா, சோமு! எதிர்வீட்டு ராஜு நேத்து என்னமோ பிரமாதமாகப் பேசினானே, நம்ம தெருவிலேயே பஜனையை ஆரம்பிக்கலாம்னு. எவ்வளவு எழுப்பியும் ஆள் சந்தடியையே காணோமே! அடுத்த தெருப் பசங்க சொன்னது சரியாகத்தான் போச்சு! அவங்க இத்தனை நேரத்துக்குப் புறப்பட்டிருப்பாங்கோ. இந்த ராஜுப் பயல் நம்மைக் கெடுத்துட்டாண்டா. அங்கேயாவது போயிருக்கலாம்.

சோமு: (குறும்புச் சிரிப்போடு) அடே! நாம்ப ஒண்ணு பண்ணலாம்டா...... (மணியின் காதோடு ரகசியமாக ஏதோ சொல்கிறான்.)

மணி: (சிரித்துக்கொண்டே) அதுதான், சரி. இப்போ நிச்சயமாக ஐயா எழுந்துடறார், பாரு.

[சோமு உள்ளே போய் எதையோ எடுத்துக்கொண்டு வருகிறான். எதிர்வீட்டு ஜன்னலருகில் தீக்குச்சியைப் பற்ற வைத்துக் கையில் இருக்கும் எலெக்ட்ரிக் பட்டாசைக் கொளுத்தப் போகிறான்.]

ஒரு குரல்: (ஜன்னலின் உள்பக்கத்திலிருந்து) நீ தானடா? (உள்ளேயிருந்து டார்ச் விளக்கின் வெளிச்சம் சோமுவின் முகத்தில் வீசுகிறது.) தெரியாதுன்னு நினைச்சூட்டயா? ஹிஹ்ஹிஹ்ஹி! எல்லாத்தையும் கேட்டுண்டுதான் இருக்கேன்.

சோமு: (திடுக்கிட்டுக் குச்சியைக் கீழே போட்டுக்கொண்டே) அட பாவி! நீ முழிச்சிண்டா இருக்கே?

ராஜு: (பெருமையோடு வெளியில் வந்து) அட பசங்களா! நீங்க இப்போதானேடா எழுந்திருந்தீங்க. இதோ பாருங்கடா! (தன் நெற்றியில் வெளிச்சம் தெரியும்படி டார்ச்சைத் திருப்புகிறான்.) நான் எப்பவோ எழுந்து குளிச்சு நெத்திக்குக்கூட இட்டாச்சுடா!

மணியும் மற்றவர்களும்: (ஆச்சரியத்தோடு) அட ராஸ்கல்! கடைசியிலே நாம்பதான் ஏமாந்துபோனோம்!

ராஜு: (கிண்டலாக) என்னடா, சோமு, கிட்டு! பல்லையாவது தேச்சிங்களா இல்லையா? (வேலுவின் முகத்தில் டார்ச்சை நீட்டி) அட கண்ணராவியே! இந்தப் பயல் இன்

கொள்கிறார்கள்.) சரி. நான் போய் ஆர்மோனியம், தாளம் எல்லாம் எடுத்துவறேன். (போகிறான்.)

[மணி தன் வீட்டுக்குள் போய் ஒரு குத்து விளக்கை ஏற்றிக் கையில் எடுத்து வருகிறான். அதே சமயம் எதிர் வீட்டிலிருந்து ராஜு ஆர்மோனியம், தாளத்தோடு வருகிறான்.]

வேலுவும் கிட்டுவும்: (குதூகலமாக) பலே! பலே! அடே சோமு! தலையில் கம்பளியை இறுக்கிக் கட்டுடா! நோஞ்சப் பயல், புறப்படறப்போ தும்மித் தொலைக்கப் போறே!........அடேடேடே!....

சோமு: (தும்முகிறான்) பிசுக், பிசுக், பி......(அதற்குள் கிட்டு வந்து அவன் மூக்கை அழுத்திப் பிடிக்கிறான். சோமு திணறிச் சமாளித்துக்கொள்கிறான்.)

வேலு: என்ன எழவோ, இரண்டுங்கெட்டான் தும்மலாயிருக்கு. நடுவில் ஒண்ணும் நேராதிருக்கணும், பகவானே!

ராஜு: சரி. ஆரம்பிக்கலாம். (ஆர்மோனியத்தில் சுருதி கூட்டுகிறான்.)...புறப்படுங்கள்.

[கிட்டு தாளம் போட்டுக் கொண்டே அவனோடு செல்ல, மற்றவர்கள் பின்னாலேயே போகிறார்கள்.]

சோமு: தேவாரம்! தேவாரம்!

மணி: ஆண்டாள் திருப்பாவை தான் சரி! (பாட ஆரம்பிக்கிறான்.)

'**மார்கழித் திங்கள்......**'

னும் கண்ணைக்கூடத் துடைக்கல்லையே! சேச்சே! போய் முகத்தைக் கழுவிட்டு வாடா! புறப்பட வேண்டாமா?

மணி: (அருவருப்போடு வேலுவைப் பார்த்து) மகாமோசம்! (வேலு முகம் தொங்கி உள்ளே போய்ப் பல் தேய்த்துவிட்டு வருகிறான்.)

ராஜு: (மணியைப் பார்த்து) நீ என்ன, குளிச்சூட்டயா?

மணி: இல்லேடா. குளிர்றதேன்னு பல்மட்டும் தேச்சேன். அதுக்குள்ளே தான்......

ராஜு: குளிச்சிருந்தா அப்பவே குளிர் விட்டிருக்கும், சரி; சரி! இந்தா. (மடியில் இருக்கும் ஒரு பொட்டலத்தைப் பிரித்து, தலா கொஞ்சம் விபூதி எடுத்துக் கொடுக்கிறான். எல்லாரும் அதை நெற்றியில் பூசிக்

ராஜூ: ‘மடி நிறையப் பொங்கல்’ (எல்லாரும் கொல்லென்று சிரிக்கிறார்கள்.)

மணி: (கோபத்தோடு) உங்களோடே சேரவே கூடாதுடா! சீச்சீ! நான் போறேன். (விறைத்துக்கொண்டு போகப் புறப்படுகிறான்.)

ராஜூ: (அவனைத் தடுத்து) அட முண்டம்! இதற்கெல்லாம் போய் யாராவது கோவிச்சுப்பாங்களாடா! ஏதோ தமாஷாகச் சொன்னேன். (மணி மறுபடியும் கூட்டத்தில் கலந்துகொள்கிறான்.)

கிட்டு: சரி. முதலில் பிள்ளையார் மேலேதான் பாடணும். (பாடுகிறான்.)

‘கைத்தல நிறைகனி அப்பமொ’

சோமுவும் வேலுவும்: ‘..டவில்பொரி’

ராஜூ: (பக்கென்று சிரித்து) இதென்னடா ‘டவில் பொரி?’ மிருதங்கம் இல்லையேன்னு டவிலைப் பிடிச்சீங்களா? (ஒரே சிரிப்பு.)

மணி: (கோபத்தோடு) இது பஜனையா, சந்தைக் கடையா?

சோமு: அட! பெரிய இவருடா இவரு! உபதேசம் பண்ண வந்துட்டாரு!

[அதே சமயம் அருகிலுள்ள ஒரு திருப்பத்தில் இன்னொரு பஜனைக்கோஷ்டி மிருதங்கத்தோடு பாடிக்கொண்டு வரும் சத்தம் கேட்கிறது. கூடவே குத்துவிளக்கோடு கூட்டமும் தெரிகிறது.]

சோமு: (ஆச்சரியத்தோடு) அடேடே! எதிராஜ் கோஷ்டி வருது!

மணி: (கோபத்தோடு) அடே ராஜூ, சோமு! நீங்க ரெண்டு பேரும் நடுவிலே நடுவிலே கெடுக்கிறீங்க. உங்க பஜனையுமாச்சு! மண்ணாங்கட்டியுமாச்சு! நான் அவங்களோடே சேர்ந்துக்கறேன். (போகிறான்)

[எதிராஜ் கோஷ்டியிலும் இவர்களைப் பார்த்ததும் கலவரம் ஏற்படுகிறது.]

ஒரு பையன்: அதோ பாருடா! அவங்க ஆர்மோனிய சுருதி போட்டுக்கொண்டு பாடறாங்க. நாம்பளோ சும்மா சுருதியிலே சேராமல் லொட்டு லொட்டுன்னு மிருதங்கத்தோடு கத்த வேண்டியிருக்கு!

இன்னொருவன்: ஆமாண்டா! இது சுத்த மோசமாக இருக்குடா. நாம்ப ராஜூ பஜனையிலே சேர்ந்துடலாம், வா. (போகிறார்கள். அவர்களோடு

இன்னும் நாலைந்துபேரும் புறப்படுகிறார்கள்.)

எதிராஜ்: (எரிச்சலோடு) அடேடே! அந்தப் பயல் ராஜுவா நமக்குப் போட்டியா வந்துட்டாண்டா! இந்தக் கழுதைகளும் அங்கே ஓடறாங்க! அந்த ராஜுப் பயலைச் சும்மா விடப் போறதில்லை நான்!

சில குரல்கள்: ஆமாம். ஆமாம். ...விடக் கூடாது அந்தப் பயலை!

மற்றவர்கள்: இதோ பார், எதிராஜ்! வீண் சண்டைக்கு இழுத்தாயோ நாங்களெல்லாருங் கூட ராஜுவோடே சேர்ந்துடுவோம்; ஜாக்கிரதை!

எதிராஜ்: (திரு திருவென்று விழித்து) என்னடா, இது! இப்படிச் சமயத்திலே காலை வாரி விடறீங்களே!

மற்றவர்கள்: நாங்க சொல்றபடி கேள்: நம்ம கிட்ட ஆர்மோனியம் இல்லை. அவங்ககிட்ட மிருதங்கம் இல்லை. ரெண்டு கோஷ்டியும் ஒண்ணாச் சேர்ந்துடறதுதான் நல்லது...என்னடா ராஜு? நாங்க சொல்றது சரி தானே?

ராஜு: (பெருமையோடு) நானா அப்பா, வேண்டாம்னேன்? எதிராஜ்தான் நேத்து முறைச்சுண்டு போய்ட்டான், உங்களையும் கூட்டிண்டு!

எதிராஜ்: (தன் ஜம்பம் சாயாது என்று கண்டுகொண்டு) சரிடா! ராஜு! சேர்ந்தே போகலாம்.

ராஜு: (சந்தோஷமாக) பேஷ்! அப்படிச் சொல், ராஜா! (எதிராஜைத் தட்டிக் கொடுக்கிறான்.)

சோமு: மணி எங்கேடா? கோவிச்சுண்டு போனானே!

ராஜு: அதோ பின்னாலே இருட்டிலே நிக்கிறான் பார்.

மணி: (அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே) போங்கடா, நீங்க ஒண்ணு! (மறுபடியும் கூட்டத்தில் கலந்துகொள்கிறான்.)

ராஜு: சரி, இனிமேல் யாராவது ஆரம்பியுங்கடா! (எதிராஜ் கோஷ்டியைச் சேர்ந்த ராகவ ராவைப் பார்த்து) ஏதாவது கன்னடப்பாட்டாய் எடேன்.

ராகவ: (பாடுகிறான்.)

'ஹொந்தொந்து
காலாடு க்ருஷ்ணா-
ஹரி மத்தொந்து
காலாடு மன்னாரு ரங்கா!'

சோமு: 'ஹரி ..ஹத்துப் போனி, டப்பா நெய்யி!' (ஒரே சிரிப்பும் கொம்மாளமுமாக இருக்கிறது.)

ராஜு: (பொங்கிவரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு சோமுவையும் மற்றவர்களையும் அதட்டி) அடே! நீங்க சும்மா இருக்கமாட்டீங்களாடா. சில பெரியவங்க தான் இப்படி ஒருத்தர் பாஷையை ஒருத்தர் திட்டறாங்கன்னா நாம்பளுமா அப்படிப் பண்ணணும்? அவங்க அவங்க பாஷை அவங்க அவங்களுக்கு ஒசத்தி..சரி. யாராவது ஹிந்திப் பாட்டுப் பாடுங்கள்.

சில பேர்: (ராம்சிங் என்ற பையனை முன்னே தள்ளி) மீரா பாட்டுப் பாடேண்டா.

ராம்சிங்: (சற்றுத் தயங்கிப் பாட ஆரம்பிக்கிறான்.)

"பாபே சாடே மாயே சாடே
சாடே சகா சகி
மீரா ப்ரபு லகன் லகீ
ஜோ ந ஹோயே ஹோயீ

மற்றவர்கள்: (குதூகலத்தோடு) அர்த்தம் புரியாவிட்டாலும் இதுதான் ஜோர்...

ஹோயி! ஹோயி! ஹோயி!

ராஜு: இதென்னடா! துணி கிணி ஏதாவது தப்புகிறீங்களா, என்ன?

[கொல்லென்று சிரிப்பு]

சோமு: (ராஜுவைப் பார்த்து) அது சரி. இப்படி வறட்டுத் தவளைமாதிரி கத்தறேயே! எந்தப் பெரியவங்களாவது வந்து நம்ம ரெண்டு குத்துவிளக்கிலேயும் ஒரு காலணாவாவது போட்டாங்களா? ஏதாவது வாங்கித் தின்னலாமோ இல்லையோ? பசங்கன்னு அவங்களுக்குக் கிள்ளுக் கீரைடா!

ராஜு: (சிரித்து) அடேடே! இதுக்கா அழறே? பஜனையைச் சீக்கிரமா முடிச்சுட்டுத் திரும்ப வேண்டியதுதான். எனக்கும் இப்பவே பசி வயித்தைக் கிண்டுறது!

சோமு: அடே பஜனையை முன்னே முடியுங்கடா!

எல்லாரும்: (திரும்பி வந்து கொண்டே பாடுகிறார்கள்.)

'ராஜீவ நயனத்யாக ராஜவிநுத
நீ நாம ரூபமுலகு நித்ய ஜயமங்களம்'

சோமு: ராதா ரமண கோவிந்தா!

மற்றவர்கள்: கோ-வி-ந்-தா! கோ-வி-ந்-தா!

[எல்லாரும் ராஜுவின் வீட்டு வாசலை அடைகிறார்கள். ராஜுவின் அம்மா அவர்களைப் பார்த்துவிட்டு வெளியில் வருகிறாள்.]

அம்மா: ஒரு நிமிஷம் எல்லாரும வாங்கடா! பொங்கல் ரெடியாக இருக்கு!

எதிராஜும் மற்றவர்களும்: (உற்சாகமாக) பொங்கலா!... பலே பலே! பொங்கலோ பொங்கல்!

மற்றவர்கள்: (ராஜுவைப் பார்த்து) கூடக் காபி கீபி உண்டோ இல்லையோ? முன்னாலேயே சொல்லப்படாதாடா, ராஜு!

[ராஜு சிரிக்கிறான். எல்லாரும் கைகால் கழுவிக்கொண்டு நாக்கில் ஜலம் ஊற, பொங்கல் சாப்பிட உட்காருகிறார்கள்.]

-திரை-



கடை முதலாளி: டேய் முருகா, நீ கடையில் உடைத்திருக்கிற சாமான்கள் விலையே உன் மாதச் சம்பளத்துக்குமேல் போய்விட்டதே.

முருகன்: அதுக்குத்தாங்க என் சம்பளத்தைக் கூடப்போட்டுக் கொடுங்கன்னு கேட்டுக்கிட்டிருக்கேன்!

மண் குடமும் பித்தளைக் குடமும்

'சோமசன்மா'

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றின் கரையில் ஒரு படிக்கட்டு இருந்தது. படிக்கட்டு இருந்தால் தானே அதன் வழியாக இறங்கிப் போய்க் குளிக்கலாம்?

தினம் அந்தப் படிக்கட்டில் ஒரு பித்தளைக் குடமும், ஒரு மண் குடமும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும். பித்தளைக் குடமும் மண் குடமும் எப்படித் தாமாக வந்து உட்கார முடியும் என்று தானே கேட்கிறீர்கள்? அவைகள் தாமாக வருவதில்லை. அவைகளை இரண்டு பெண்கள் தூக்கிக்கொண்டு வருவார்கள். பித்தளைக் குடத்தை ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணும் மண் குடத்தை ஒரு ஏழையின் வீட்டுப் பெண்ணும் தூக்கிக் கொண்டு வருவார்கள்.

அவர்கள் இருவரும் குடத்தைக் கொண்டு வந்து தேய்த்துக் கழுவி உடனே தண்ணீரைக் கொண்டுபோவதுதானே நியாயம்? அவர்கள் அப்படிச் செய்வதில்லை. குடத்தைக் கொண்டு வந்து படிக்கட்டில் வைத்து விட்டு, கரையில் ஏறி அரச மரத்தடியில் நின்றுகொண்டு இன்னும் மற்றப் பெண்களுடன் ஊர்க் கதை பேசிக் கொண்டு நிற்பார்கள். பொழுது போன பிற்பாடுதான் திரும்பி வந்து குடத்தைக் கழுவி, தண்ணீரை மொண்டு கொண்டு போவார்கள்.

அந்தப் பெண்கள் போய்

வம்படித்துக்கொண்டு நிற்கும் வரையில் அந்தப் பித்தளைக் குடமும் மண்குடமும் என்ன செய்யும் என்று நினைக்கிறீர்கள்? அவைகள் ஒன்றும் செய்யாது. அப்படியே பேசாமல் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்துகொண் டிருக்கும். ஒன்றையொன்று திரும்பிக் கூடப் பார்க்காது.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் அந்தப் பெண்கள் இரண்டு பேரும், பித்தளைக் குடத்தையும் மண் குடத்தையும் வழக்கம் போல் படிக்கட்டில் கொண்டு வந்து வைத்துவிட்டு ரொம்ப நேரம் வரையில் வம்பு பேசிக் கொண்டு நின்றார்கள். அன்று அவர்கள் அந்த ஊருக்குப் புதிதாகக் கல்யாணம் ஆகி வந்த ஒரு பெண்ணைப்பற்றிப் பேசவேண் டியதாக இருந்ததால் ரொம்ப நேரம் ஆனது கூடத் தெரியவில்லை.

அப்போது என்ன ஆயிற்று என்று நினைக்கிறீர்கள்? ஆற்றில் வெள்ளம் வேகமாக வந்தது. வந்து படிக்கட்டெல்லாம் ஜலம் ஏற ஆரம்பித்து விட்டது. அப்போது அந்தப் பித்தளைக் குடமும் மண் குடமும் வெள்ளத்தில் ஆடிக் கொண்டே இழுத்துப் போகப்பட்டன.

கொஞ்ச தூரம் ஜலத்தோடு இரண்டும் போய்க் கொண்டே யிருந்தன. பித்தளைக் குடத்துக்கு ரொம்பப் பயமாக இருந்தது. அது நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தது. சற்றுத் தூரத்தில் மண் குடம் வருவது தெரிந்தது.

பித்தளைக் குடம் சொல்லும்: "டேய், மண்! ஏண்டா அவ்வளவு தூரத்தில் போகிறாய்? வா, கிட்டத்தில். இரண்டு பேரும் ஒருத்தருக் கொருத்தர் துணையாய்ப் பேசிக் கொண்டே போகலாம்."

அதைக் கேட்ட மண் குடம் முகத்தைத் தூக்கிக்கொண்டு பதில் சொல்லும்: "நீ என்றைக்கும் பணக்காரன். இவ்வளவு நாள் தினமும் சாயங்காலம் ரெண்டு பேரும் ஒரே படிக்கட்டில் உட்கார்ந்திருப்போம். அப்போதெல்லாம் நீ என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. நீ பணக்காரன். நான் ஏழை. இப்போது ரெண்டு பேரையும் வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறது. அதனால் என்னைத் துணைக்குக் கூப்பிடுகிறாய். உன்னுடைய சிநேகம் நமக்கு வேண்டாம் அப்பா."

பித்தளைக் குடம்: நான்



என்ன உன்னை விழுங்கி விடுவேனோ? இத்தனை நாளும் எனக்கு யோசனை பண்ண எத்தனையோ விஷயம் இருந்தது. அதனால் உன்னோடு பேசவில்லை. இப்போது ரெண்டு பேருக்கும் ஆபத்து வந்துவிட்டது. அதனால் தான் உன்னைக் கூப்பிடுகிறேன்.

மண் குடம்: உன்னிடம் வந்தால், உனக்கு ஆபத்து இல்லை, எனக்குத்தான் ஆபத்து. உன் கை கால் பட்டாலே நான் நொறுங்கிவிடுவேன். இந்தப் பணக்காரர்களுடைய சிநேகமே இப்படித்தான்!

பித்தளை; டேய்! நீ சுத்தக் களிமண் என்கிறது சரியாயிருக்கிறது. இந்த ஏழைகளுக்கே அகம்பாவம் தான்!

மண் குடம்: டேய்! உன் பணக்காரப் பெருமை எல்லாம் என்னிடம் காட்டாதே! உனக்கு நான் என்ன அடிமையோ! நீ கூப்பிட்டால் வர வேண்டும்; இல்லாவிட்டால் போகவேண்டும். உனக்குத்தாண்டா திமிர்! பண மூட்டை!

பித்தளை: ஏ, அல்பப் பயலே! மரியாதையாகப் பேசு! வந்தேன்னா உன்னை நொறுக்கிவிடுவேன்;

மண் குடம்: வந்து பாரு! அயோக்கியப் பயலே!

இப்படியாக இரண்டும் சண்டை போட்டுக் கொண்டு, பித்தளைக் குடம் விரட்டுவதும், மண் குடம் ஓடுவதுமாகக் கரையோரத்தை அடைந்தன.

அப்போது இவர்களுடைய சண்டையைப் பார்த்த ஒரு கோரைப் புல், கடகட வென்று சிரித்தது. சிரிக்கும் சத்தத்தைக் கேட்டு இரண்டும் சண்டையை நிறுத்திவிட்டுக் கவனித்துப் பார்த்தன.

அப்போது அந்தக் கோரைப் புல் சொல்லும்: "நீங்கள் ரெண்டு பேரும் சண்டை போடுவதைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வருகிறது. இந்த உலகத்திலே ஏழை யாரு, பணக்காரன் யாரு? அப்படி இரண்டு ஜாதி கிடையாது. நல்லவர்கள், பொல்லாதவர்கள் என்று இரண்டு ஜாதி தான் உண்டு. ஏ மண் குடம்! நீயாகவே நான் தாழ்ந்தவன் என்று நினைத்துக் கொண் டிருக்கிறாய்! ஆனால் எப்படிப்பட்ட பணக்காரனும் உன்னை வைத்து ஜலம் நிரப்பி, அதைத்தான் குடிக்கிறான். பித்தளைக் குடத்தில் ஜலம் வைத்துக் குடிப்பதில்லை. ஒவ்வொருவருக்கு ஒரு உபயோகம் இருக்கிறது. அப்படிப் பார்த்தால் இந்த உலகத்தில் எல்லாரும் முக்கியமானவர்கள் தான்."

இப்படிப் பிரசங்கம் செய்த கோரைப்புல்லைப் பார்த்து மண்குடம் கேட்கும்:

"நீ செய்யற உபதேசம் எல்லாம் கேட்க நன்ருய்த் தான் இருக்கிறது. அதை யெல்லாம் அந்தப் பயல் பித்தளையிடம் சொல்றது தானே? அவன் எவ்வளவு கர்வத்துடன் தான்தான் உயர்ந்தவன் என்று அகம் பாவம் பிடித்து இருக் கிருன். என்னைக் கேவல மாக நினைக்கிருன்!"

மண் குடம் சொன்ன தைக் கேட்ட பித்தளைக் குடம் சும்மா இருக்குமா? "நிச்சயமாய் நீ மட்டம் தாண்டா! வெறும் களி மண்தானே! மூளை ஏது?" என்று பக்கத்தில் ஓடி வந்து சொல்லிற்று.

"யாரடா களிமண்! நசுங்கல் பயலே!" என்று பாய்ந்துகொண்டு வந்தது பித்தளை.

"அடே! அடிச்சு விடு வயோ! வாடா பார்க்கலாம்!" என்று துள்ளிற்று மண்.

"வா பார்ப்போம்! உன்னைச் சட்டினி பண்ணிவிடுகிறேன்! சட்டிப் பயலே!"

"வாடா பித்தளைப் பயலே!"

அவ்வளவுதான். இரண்டும் ஒன்றையொன்று முட்டி மோதிக்கொண்டு சண்டை பிடித்தன. கடைசியில் முடிவு என்ன? மண்குடம் நொறுங்கித் தூள் தூளாகி விட்டது. பித்தளைக்கும் உடம்பெல்லாம் ஒரே நசுங் கல். நடக்க முடியாமல் அது பெருமூச்சு விட்டுக்கொண்டு கோரைச் செடியின் பக்கம் வந்து ஒதுங்கிற்று.

ஆகையினுல் பிள்ளைகளே! இதனுல் உலகத்தில் ஏழை, பணக்காரன் என்று இரண்டு ஜாதிகள் கிடையாது என்பதும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உபயோகம் இருக் கிறது என்பதும் தெரிகிறது அல்லவா?

பட்டண வாழ்வு

'எல்லார்வி'

எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது போட்மெயில். பிரயாணிக ளெல்லாம் விழிப் படைந்து பரபரப்புடன் மூட்டை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு ரெயிலை விட்டு இறங்கினர்.

தாம்பரம் ஸ்டேஷனிலே விழித்துக் கொண்டு விட்ட முருகன் மற்ற நண்பர்களை அதட்டி எழுப்பினன்.

"எழும்பூர் வந்தாச்சா?" என்றான் ஒருவன்.

"வந்தாச்சுடா" என்றான் இன்னொருவன்.

"எல்லோரும் இறங்கி விட்டார்களே. நாமும் இறங்க வேண்டியதுதானே?" என்று கேட்டான் முருகன்.

"ஆமாமாம். ரெயில் இனி மேல் போகாது. இறங்க வேண்டியதுதான்" என்றான் மற்றொருவன்.

எல்லோரும் இறங்கினர்கள்.

எல்லோரிலும் வயதில் மூத்தவன் கேசவன். வயதில் மட்டுமல்ல; உலக விவகாரங்களிலுங்கூட எல்லோரையும் விடத் தேர்ந்தவன். ஆகவே அவன் சொற்படிதான் எல்லோரும் நடந்துகொண்டார்கள்.

கேசவன் எல்லோரையும் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போனன். அங்கே மாடிமேல் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டார்கள்.

பட்டிக் காட்டிலேயே உழன்றுகொண்டிருந்த முருகனுக்குப் பட்டணத்து வீதிகளையும் அவைகளில் செல்லும் திருநாள் கூட்டம் போன்ற ஜனத்திரளையும் சைகிள், மோட்டார், டிராம், மோட்டார் சைகிள், ரிக்ஷா முதலியவற்றையும் காணக்காண வெகு விநோதமாயிருந்தது. மாடியின் கிராதி ஓரமாகப் போய் நின்றுகொண்டு வீதியையே பார்த்துக்கொண் டிருந்தான். கேசவனை, "இது என்ன; அது என்ன?" என்று அடிக்கடி கேட்டுக்கொண்டும் இருந்தான். அவனுடைய கேள்விகளுக்குச் சளைக்காமல் பதில் சொல்லி வந்தான் கேசவன். அவன் சொன்ன தகவல்களில் உண்மை கால்பாகம் பொய் முக்கால் பாகம். ஆனல் முருகன் அதையெல்லாம் என்ன கண்டான்? தேவலோகத்துக்கே வந்து சேர்ந்து விட்டோம் என்கிற நினைவோடு திறந்த வாய் மூடாமல் கேசவன் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான்.

பத்து மணியானதும் எல்லோரும் குளித்தார்கள். சாப்பிட்டார்கள். அறைக்குச்

சென்று படுத்தார்கள். நாலு மணிக்கு எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு 'டிபன்' சாப்பிட்டார்கள். 'டீக்காக' உடுத்துக் கொண்டு, அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே கிளம்பினார்கள். காரியம் எதுவுமில்லை. இத்தனைக்கும் செலவுக்குப் பணம் ஏது தெரியுமா? முருகனிடம் இருந்ததுதான். மனம் போனபடி எங்கெல்லாமோ சுற்றினார்கள். சினிமாவுக்கும் போனார்கள்.

இப்படியே ஒவ்வொரு நாளும் வயிறு புடைக்கத் தின்பதும் ஊர் சுற்றுவதுமாகச் சுமார் ஒரு மாத காலத்தைக் கன 'குஷி'யாகக் கழித்தார்கள். பணத்தை யெல்லாம் அவன் கேசவன் கையில் ஒப்படைத்து விட்டான். கேசவன் தன் இஷ்டம் போல் செலவழித்து வந்தான். ஒரே மாசத்துக்குள் ரூபாயெல்லாம் தீர்ந்து போயிற்று.

ஒரு நாள் காலையில் முருகன் கண் விழித்தெழுந்த போது அறையில் தன்னுடன் படுத்திருந்த நண்பர்கள் ஒருவரையும் காணாது திகைத்தான். நேரம் சென்றுகொண்டே

இருந்ததே தவிரக் கேசவனையோ மற்றவர்களையோ காணவில்லை. அவனுக்கு வயிற்றைப் பசித்தது. சாப்பிடலாம் என்று நினைத்துப் பெட்டியைத் துழாவினன். அதில் காலணுக்கூட இல்லை. பசி காதை அடைத்தது. ஓட்டல் முதலாளியிடம் சென்று, "நண்பர்கள் எங்கோ வெளியே சென்றிருக்கிறார்கள்; வந்ததும் பணம் கொடுத்துவிடுகிறேன்; எனக்குச் சாப்பாடு போடுங்கள்" என்றான். அவரும், 'நம்முடைய ஓட்டல் அறையில் இருப்பவன் தானே. பணம் கொடாமலா போய்விடுவான்?' என்று நினைத்துச் சாப்பாடு போட்டார்.

சாப்பிட்டுவிட்டு வந்து அறையில் படுத்த முருகனைக் கவலை பலமாகப் பற்றிக் கொண்டது. பகல் பொழுது கொஞ்சம் கொஞ்சமாகச் சென்று அஸ்தமித்தது. இருள் சூழ்ந்தது. நண்பர்கள் வரவில்லை.

பசியும் களைப்பும் உடலை வாட்ட அழுதுகொண்டே தூங்கிப்போனன் முருகன். விடியற்காலம் ஓட்டல் முதலாளி வந்து அவனைத் தட்டி எழுப்பினர். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த முருகன் ஒன்றும் தோன்றாமல் விழித்தான். அவர் அவனை அறை வாடகை கேட்டார். அவன் பதில் சொல்லமுடியாமல் திணறினன்.

நண்பர்கள் மோசம் செய்துவிட்டார்கள் என்பதை அறிந்தால் ஓட்டல் முதலாளி இரக்கம் காண்பிப்பார் என்ற எண்ணத்தால் முருகன் உண்மையைச் சொன்னன். ஆனல் முருகன் விஷயத்தை வெளியிட்டானே இல்லையோ, அவர் அவனை உருட்டி விழித்து ஒரு பார்வை பார்த்தார். அடுத்த நிமிஷம் அவரது கை அவனது பிடரியில் சென்றது. ஒரே கல்தா; அடுத்த கணத்தில் முருகன் தெருவிலே போய் விழுந்தான். அழுக்கடைந்த வேட்டி சட்டையுடன் கண்ணீரும் கம்பலையுமாய் எழுந்து நடந்து தெருத்தெருவாய் அலைந்தான்.

பாவட்டகுடி என்கிற கிராமத்தில் பிறந்தவன் முருகன். அவன் தகப்பனர் இறந்துபோய்விட்டார். தாயார் பார்வதி மகனை மிகவும் அருமையுடன் வளர்த்து வந்தாள்.

முருகன் வளர்ந்தான். பார்வதி அவனைப் பள்ளியில் சேர்த்தாள். ஆனல் அவனுக்குப் படிப்பு வரவில்லை; படிக்கவேண்டும் என்கிற அக்கறையும் இல்லை. தகப்பன் வைத்துப் போன சொற்ப நிலத்தைப் பயிரிட்டு அதில் கிடைக்கக்கூடிய வருமானத்தைக்கொண்டு கஷ்டம் இல்லாமல் ஜீவனம் செய்யலாம் என்று புத்திமதிகள் சொன்னள். ஆனல் முருகன் மனத்திலோ தாயின் புத்திமதிகள் ஏறவே இல்லை.

அவனுக்கு அந்த ஊரிலிருந்த சில துஷ்டர்கள் சிநேகமானர்கள். அவர்களுடன் கூடிக்கொண்டு நாகரிகமாக உடுத்துக்கொண்டு அருகிலுள்ள நகரத்துக்குச் சென்று இராவெல்லாம் கண் விழித்து நாடகம், சினிமா முதலியன பார்ப்பதும் அங்குமிங்கும்

அலைந்து திரிவதுமாக இருந்தான்.

பார்வதி அக்கம்பக்கம் உள்ள குடியானவர்களிடம் சொல்லித் தன் நிலத்தைப் பயிரிடச் செய்தாள். உழைக்க வேண்டிய மகன் ஊர் சுற்றிக்கொண்டிருக்க, தள்ளாத வயதுடைய அவள் சதாகாலமும் வயல் வெளியிலே வெயிலிலும் சேற்றிலும் நின்று பாடுபட்டாள். அதன் பயனாகச் சொற்ப வருமானம் கிடைத்தது. தனது செல்வப் புதல்வனின் மனம் கோணக்கூடாதென்று அவன் செலவுக்கு அவ்வப்போது பணம் கொடுத்து வந்தாள். அப்படிக் கொடுக்கிறபோதெல்லாம் அவன் அவ்வாறு நடந்துகொள்வது தகாதென்றும் இனிமேலாவது ஒழுங்காக இருக்க வேண்டும் என்றும் நயமாகப் புத்தி சொல்லி வந்தாள். ஆனால் அவன் அதையெல்லாம் காதில் வாங்கிக்கொள்வதேயில்லை.

செலவுக்குப் பணம் தேவைப்படுகிறபோதெல்லாம் முருகன் தன் தாயாரிடம் போய்க் கெஞ்சிக் கேட்பதைப் பற்றி அடிக்கடி பரிகாசம் செய்துகொண்டிருந்த அவன் சிநேகிதர்கள் ஒரு நாள் அவனுக்குப் பின்வருமாறு கூறினார்கள்:

"உன் தகப்பனாரின் சொத்துக்கு நீதான் வாரிசு. அவ்வாறிருக்க உன் செலவுக்குப் பணம் போதாமல் கஷ்டப்படுவதும் தாயிடம் போய்க் கெஞ்சிக் கேட்பதும் கேலிக்கு இடமான காரியமாகும். அந்த நிலத்தை ஒரேயடியாக விற்றுப் பணமாக்கிப் பட்டணத்துக்கு எடுத்துக் கொண்டுபோய் ஏதாவது வியாபாரம் ஆரம்பித்தால் நிறைய லாபம் கிடைக்கும்; இஷ்டப்படி செலவு செய்துகொண்டு சந்தோஷமாகவும் இருக்கலாம்."

இப்படிச் சிநேகிதர்கள் கூறியது மிகவும் சரி என்றே முருகனுக்குத் தோன்றியதால் உடனேயே தாயாரிடம் சென்று, "நிலத்தை விற்க வேண்டும்" என்றான்.

மகனின் துர்ப்புத்தியைக் கண்டு தாய் துக்கித்தாள். நிலத்தை விற்பது கூடாதென்றாள். "நிலம் விற்ற பணம் வெகு

சீக்கிரத்திலே செலவாகிவிடும்; பிறகு சோற்றுக்கே திண்டாட நேரும்" என்றெல்லாம் சொன்னாள். அதையெல்லாம் முருகன் கேட்கவேயில்லை. தாய்க்கும் மகனுக்கும் பலமான சச்சரவு. துஷ்டர்களின் கெட்ட உபதேசம் வலுவாக ஏறிப்போன முருகன், தன்னை ஆயிரம்பாடு, அரும்பாடுபட்டுப் பெற்று வளர்த்த தாய் என்றுகூட எண்ணிப் பாராமல் பார்வதியை அடித்து இம்சிக்கக்கூடத் துணிந்தான். ஆனால் பார்வதி அதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. எப்படியாவது நிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் தீவிரமாகயோசித்தாள்.

அந்த ஊரில் சிவானந்தம் என்று ஒரு கனவான் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். பார்வதி அவரிடம் போய் விஷயத்தைத் தெரிவித்தாள். அவர் ஒரு நல்ல யோசனை சொன்னார். அதன்படி நிலத்தை அவர் பேருக்கு அடைமானமாக எழுதிக் கொடுத்துவிட்டு அவரிடமிருந்து கொஞ்சம்பணம் வாங்கி முருகனிடம் கொடுத்தாள் பார்வதி. நிலத்தைச் சிவானந்தத்தினிடம் விற்றுவிட்டதாகவே மகனிடம் கூறினாள். அந்தக் கனவானுங்கூட அவ்வாறே சொன்னார். அவன் அதை முற்றும் நம்பினான். கிடைத்த பணத்தைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு பட்டணம் பார்க்கப் போகிற குதூகலத்தோடும் துஷ்ட சிநேகிதர்களுடன் ஊரை விட்டுக் கிளம்பிவிட்டான். அன்று அப்படிப் பட்டணம் சென்றவன்தான், கேசவன் முதலிய நண்பர்களோடு சென்னையிலே ஒரு மாச காலம் குஷியாக இருந்துவிட்டுப் பிறகு நண்பர்களால் கைவிடப்பட்டுத் தெருத் தெருவாய் அலைந்துகொண்டிருந்தான்.

கையில் காலணா இல்லை. பசியோ தாள முடியவில்லை. முருகனுக்கு அழுகையாய் வந்தது. எங்காவது போய் வேலை தேடலாம் என்றாலும் படிப்பு, நேர்மை, நல்ல குணம் எதுவுமற்ற அவனைப் பார்த்ததுமே, 'இவன் ஒரு சோதாப் பையன்' என்று எல்லாருக்கும் தோன்றிவிடவே, யாரும் அவனுக்கு எந்த வேலையும் தர முன்வரவில்லை. பட்டினி பசியுடன் வெகுநாள் கஷ்டப்பட்ட பிறகு சொற்பக் கூலி கிடைக்கக்கூடிய ஒரு கஷ்டமான வேலை அகப்பட்டது. கல் உடைக்கும் வேலைதான். அரை வயிற்றுக்குக்கூட உணவின்றி அந்தக் கடினமான வேலையைச் செய்யமாட்டாமல் அவன் மிகவும் சிரமப்பட்டான். அப்போதுதான் அவனுக்கு நல்ல புத்தி வந்தது. தன் தாயின் உபதேசங்களை எண்ணி எண்ணித் துக்கித்தான். அப்படிப்பட்ட தாயை இம்சித்துப் படாதபாடு படுத்தினதையும் அருமையான நிலத்தை இழந்துவிட்டதையும் நினைத்து நினைத்து ஓயாது கண்ணீர் வடித்தான்.

தாயைப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை நாளாக ஆக அதிகரித்தது. ஆனால் அங்கே அவளே சாப்பாட்டுக்கு வகையின்றித் திண்டாடிக் கொண்

டிருக்கக் கூடிய நிலைமையில் தானும்போய் அவளுக்குப் பாரமாக இருந்துகொண்டு என்ன செய்வது என்றும் எண்ணினான். துஷ்டர் சிநேகத்தை ஒழித்துத் தாயின் சொற்படி குலத் தொழிலாகிய விவசாயத்தைக் கவனித்திருந்தால் தாயுடன் கிராமத்தில் எவ்வளவு மேன்மையாக இருந்திருக்கலாம் என்று நினைத்துப் பார்த்ததும் துயரத்தால் அவனுக்கு உயிரே போவது போன்றிருந்தது.

இந்நிலையில் திடீரென்று ஒருநாள் அவனுக்குக் காய்ச்சல் கண்டது. வேலைக்குப் போக முடியவில்லை. காய்ச்சல் வரவரக் கடுமையாயிற்று. கையில் காலணாக்கூட இல்லை. வேலை செய்யாவிட்டால் பணம் ஏது? கவனிப்பாரற்று படுக்கையிலே கிடந்து புழுவாய்த் துடித்தான். கடினமான நெஞ்சுடைய அவனது எசமானுக்குக்கூட அவன் நிலைமை கண்டு இரக்கம் உண்டாயிற்று. உடனடியாகச் செல்ல வேண்டிய வைத்தியத்தைச் செய்தார். முருகனுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருந்த தாயின் பாசம் நோய்வாய்ப்பட்டதும் அதிகமாயிற்று. "தாயைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது" என்று எசமானிடம் சொல்லி அழுதான். அதன்படியே அவரும் மனமிரங்கி உடம்பு சற்றுக் குணமானதும் அவனை ஊருக்கு அனுப்பி வைத்தார்.

அஸ்தமன சமயம். தெருக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டுத் தள்ளாடியவண்ணம் எழுந்து சென்று திறந்தாள் பார்வதி. எலும்புக் கூடுபோல் எதிரே ஒரு பையன் நின்றுகொண்டிருந்தான். அவன்தான் தன் மகன் என்று அவளால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

துக்கம் தொண்டையை அடைக்க, "அம்மா! என்னை உனக்கு அதற்குள்ளாகவா அடையாளம் தெரியவில்லை?" என்று கூவினான் முருகன். அதைக் கேட்டதும், "ஆ! முருகா!" என்று தாவிச் சென்று மகனைக் கட்டிக்கொண்டாள் பார்வதி. அவனது கேவலமான உடல்நிலை கண்டு அழுதாள். புலம்பினாள். அவன் உணர்ச்சி மேலிட அப்படியே, நின்ற நிலையிலேயே தடாலென்று தாயின் காலில் விழுந்தான். தன் தவறுகளையெல்லாம் மன்னிக்க வேண்டுமென்று கதறினான். பார்வதி பரிவோடு அவனது பறட்டைத் தலையைக் கோதிவிட்டுக் கொண்டே, "போதுமா பட்டண வாழ்வு? நல்ல புத்தி வந்ததா! உன் நிலத்தை விற்கவில்லை. சிவானந்தத்தினிடம் அடைமானந்தான் வைத்திருந்தேன். பாடு பட்டு உழைத்து அந்தக் கடனை அடைத்து அடைமானத்தையும் மீட்டுவிட்டேன். வீடு, நிலம் எல்லாம் இருக்கின்றன. இனிமேலாவது புத்தியோடு பிழைத்துக்கொள்" என்றாள். அதைக் கேட்ட முருகனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அன்று முதல் அவன் நேர்மையுடன் நடந்து உயர்வு பெற்றான்.

நமஸ்காரம்

'சுண்டு'

இந்த விளையாட்டு, பலருக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் எங்கும் இதை முறைப்படி ஆடுவதில்லை. இதோ சரியான முறை:

ஒரு பெரிய வட்டம் போட்டுக்கொள்ளுங்கள். சுற்றிலும் விளையாடுபவர்கள் உள்பக்கம் பார்த்து நிற்கவேண்டும். ஒருவன் மட்டும் வெளியே அந்த வட்டத்தைச் சுற்றி ஓடவேண்டும். அவன் ஓடும்போது யாராவது ஒருவனுடைய முதுகைத் தொட்டுவட்டு ஓடுவான். உடனே அவன் வெளியில் வந்து தன்னைத் தொட்டு விட்டு ஓடுபவனுக்கு எதிர்த் திசையில் ஓடவேண்டும். இரண்டு பேரும் ஓர் இடத்தில் சந்தித்ததும் நின்றுவிட வேண்டும். கைகளைச் சேர்த்துக்கொண்டு மூன்று தடவை 'நமஸ்காரம் நமஸ்காரம்' என்று சொல்லவேண்டும். மூன்றும் தடவை சொன்னதும் கைகளை விடுவித்துக்கொண்டு மறுபடியும் நேர் எதிர்த் திசையில் சுற்றி ஓடி வரவேண்டும். அவன் முதலில் நின்ற இடம் காலியாக இருக்குமல்லவா? அந்த இடத்தில் போய் யார் முன்னால் நிற்கிறார்களோ அவர்கள் ஓடவேண்டியதில்லை. இடம் கிடைக்காமல் போகிறவன் மறுபடியும் சுற்றவேண்டும். இந்தத் தடவை வேறு யாரையாவது தொட்டுவிட்டு ஓடவேண்டும். இப்படியே ஒவ்வொருவராக விளையாடிக்கொண்டே போகவேண்டியதுதான். நேரம் போவதே தெரியாது. ஒரு விஷயம் மட்டும் முக்கியம். ஒரு தடவை தொட்டவனை மறு ஆட்டத்திலேயே தொடக்கூடாது. இரண்டு ஆட்டம் கழித்துத் தொடலாம்.

தங்கப் பதக்கம்

கே. ஆர். ராமசந்திரன்

★

"ஏண்டா! விச்சு, உனக்கு வேறே வேலையே இல்லையா? எப்போ பார்த்தாலும் அசோசியேஷன், கிளப், கிரிக்கட்டுன்னு! அதெல்லாம் எடுத்து வைச்சுட்டு மேலே ரூமுக்குப் போய்ப் புஸ்தகத்தை எடுத்துப் படிடா, போடா" என்று அப்பாவின் அதட்டும் குரல் கேட்டதும் 'ஸ்போர்ட்ஸ்' பேப்பரிலிருந்து கத்தரிக்கப்பட்ட கிரிக்கட் படங்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்த விச்சுவுக்குப் 'பகீர்' என்றது. அவ்வளவு சீக்கிரம் அப்பா வருவார் என்று தெரிந்திருந்தால் அதையெல்லாம் அவன் வெளியே எடுத்திருக்கவே மாட்டான்.

"இல்லேப்பா, இதோ போறேன்!"

சுற்றிலும் அவ்வளவு நாழிகையாகக் கஷ்டப்பட்டுத் தனித்தனியாகப் பிரித்து வைத்திருந்த அத்தனை படங்களையும் வாரியெடுத்துப் பக்கத்திலே இருந்த அட்டைப் பெட்டியில் போட்டுக்கொண்டு மெத்தைக்கு ஓடினான் விச்சு.

பாவம்! அவன் மனத்தில் வருத்தம் நிறைந்து இருந்தது.

'இந்த அப்பாவுக்கு மட்டும் ஏன் இதெல்லாம் பிடிக்கவில்லை? நான் படித்தால் என்ன, படிக்காவிட்டால் என்ன? பாஸாக வேண்டியதுதானே அவருக்கு?' என்று நினைத்தது அவன் இளம் உள்ளம்.

ஆம்; விச்சு படிப்பதே இல்லை என்பது அவன் அப்பாவின் குற்றச்சாட்டு. "அதோ பார்! உன் தங்கை சந்திரா எவ்வளவு நன்றாகப் படிக்கிறாள்! வகுப்பில் முதல் மார்க்கு வாங்குகிறாள். நீயும் இருக்கிறாயே!" என்று அப்பா அடிக்கடி தன் தங்கையைத் தன்னுடன் ஒப்பிடுவது விச்சுவுக்குக் கோபத்தைக் கிளப்பும்.

வாஸ்தவத்தில் விச்சு மக்கு அல்ல. மகா சூடிகை. எல்லா விளையாட்டுக்களிலும் அவன்தான் முதல். வகுப்பு அசோசியேஷனுக்கு அவன்தான் செக்ரடரி. கிரிக்கட் கிளப்புக்

குக் காப்டன். டிராமா, சினிமா ஒன்று விடாமல் பார்த்து, அதே மாதிரி நடித்துக் காண்பிப்பதில் அவனுக்கு மிஞ்சியவர் ஒருவரும் இல்லை.

ஆனல் அவன் அப்பாவுக்கு மட்டும் அதெல்லாம் பிடிக்கவில்லை. 'தன் பிள்ளை நன்ருகப் படிக்கவேண்டும். வகுப்பில் முதல் மார்க் வாங்கவேண்டும். எல்லாரும் படிப்பில் கெட்டிக்காரன் என்று சொல்லவேண்டும்' என்பதுதான் அவர் கருத்து. எப்போது பார்த்தாலும், 'படி, படி' என்றுதான் சொல்லிக்கொண்டே இருப்பார்.

"சார், என்ன, உங்க பையன் பலேபோடுபோடுகிருனே! சிறுவர் கையெழுத்துப் பத்திரிகையாளர் சங்கத்தில் பேசினன் பாருங்கோ, ரொம்ப அழகாகப் பேசினன் சார்!" என்று யாராவது சொன்னல், "அவன் கிடக்கிருன் சார்! படிப்பில் ஒன்றையும் காணேம். இதெல்லாம் இருக்கு!' என்பார். விச்சுவுக்கு முகம் சுண்டிப்போகும்.

ஆச்சு! பெரிய பரீட்சை இன்னும் பதினைந்து நாள்தான் இருக்கும். ஆனல் அந்தச் சமயம் பார்த்துத்தான் பள்ளியில் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தையும் வைக்கவேண்டுமா?

விச்சுவின் அப்பா அவனை முதலிலேயே எச்சரிக்கை செய்துவிட்டார். "டேய் விச்சு, இதோ பார். வெள்ளிவிழான்னு சொல்லிண்டு விளையாட்டு, பந்தாட்டம் பேச்சுகீச்சுன்னு இப்போ விட்டிருக்கும் ஏழு நாள் லீவையும் கழித்துவிட்டு, அடுத்த வாரம் பரீட்சையில் கோட்டை விட்டயோ அப்புறம் உதைதான். பரீட்சையில் நல்ல மார்க் வாங்கத் துப்பில்லாத பையனுக்கு விளையாட்டுக்கள் என்ன கேடு? பேசாமல் மாமா வீட்டுக்குப் போய் அடுத்த வாரம் முழுதும் படித்துக் கொண்டிருக்க வேண்டும், தெரியுமா?" என்ருர்.

விச்சுவின் முகம் சுண்டியது. அடுத்த வாரம் லீவ் விடுவது வெள்ளி விழாவுக்காகவா, படிப்பதற்காகவா? இருந்தாலும் இந்த அப்பா சுத்த மோசம். எல்லாப் பையன்களும் ஸ்போர்ட்ஸிலும் டிராமாலும் குஷியாகப் பொழுது போக்கும்போது தான் மட்டும் அடுத்த ஊரில் மாமா வீட்டில் படிக்க வேண்டும்! எதிர்த்துப் பேசினலோ அப்பாவிடம் உதை விழும்.

வகுப்பு வாத்தியார்கூட அன்றுதான் வெள்ளி விழாக் கொண்டாட்டத்துக்கான டிராமாவில் 'ஹீரோ' பார்ட் தனக்குக் கொடுப்பதாகக் கூறியது விச்சுவுக்கு ஞாபகம் வந்தது. தான் இல்லாவிட்டால் அந்த கோபுப் பயலுக்கு அடித்தது சான்ஸ்! அப்புறம் தான் நடிக்க முடியாது என்று நினைக்கும் போது விச்சுவின் மனம் இரண்டாகப் பிளந்துவிடும்போல் ஆயிற்று. 'எப்படியாவது திடீரென்று கடவுள் அப்பாவின் மனத்தை மாற்றமாட்டாரா?'

விச்சு சேரில் சாய்ந்தவாறே அயர்ந்துவிட்டான். திடீரென்று யாரோ தொடுவது போன்ற உணர்ச்சி. திடுக்கிட்டுத் திரும்

பினான் விச்சு. பின்னால் சந்திரா நின்றுகொண்டிருந்தாள்.

"என்ன, சந்திரா? என்ன வேண்டும்?"

"ஒண்ணுமில்லே அண்ணா! இந்த அப்பா இப்படிச் சொல்லிட்டாரேன்னுதான்!"

"என்ன பண்றது? மாமாவுக்கும் அப்பா சொல்லி அனுப்பிச்சுட்டார். சாயந்தரம் மாமா கார் வந்ததுன்னா பேசாமல் போக வேண்டியதுதான்!"

சந்திராவுக்குத்தான் பெரிய மனத்தாங்கல்! தன் அண்ணா எல்லா விளையாட்டுக்களிலும் முதல் என்று மற்றவர்கள் சொல்லும் போது பெரும் மகிழ்ச்சி கொள்வாள் அவள். இந்தத் தடவை ஒரு விளையாட்டுக்கும் போகவிடாமல் அப்பா அவனைத் தடுத்தது அவளுக்கு மிகவும் வருத்தத்தை அளித்தது.

மாலையில் மாமா காரில் இருவரும் புறப்பட்டு அடுத்த ஊரிலிருந்த மாமா வீட்டுக்குச் சென்றனர்.

* * * *

அன்று பள்ளியில் வெள்ளிவிழா. ஹால் முழுவதும் ஒரே கூட்டம். விச்சுவின் அப்பா அம்மாகூட வந்திருந்தனர். சந்திராதான் அன்று காலையிலே மாமா வீட்டிலிருந்து வந்து அவர்களை இழுத்துக்கொண்டு வந்திருந்தாளே!

ஆச்சு! ஒவ்வோர் ஐடமாக நடந்து பரிசு கொடுக்கும் கட்டம் வந்தது.

அப்பப்பா! எதில் எடுத்தாலும் விச்சுதானா முதல்? லாங்ஜம்ப், ஹைஜம்ப், ஓட்டம்-இப்படியாக நான்கு ஐந்து முதல் பரிசுகள் விச்சுவுக்கு! ஆனால் விச்சுதான் வரவில்லையே? எல்லாம் தனியாக வைக்கப்பட்டன.

"இந்த விச்சு யார், சார்? யார் வீட்டுப் பையன்? எல்லாப் பரிசையும் தட்டிக்கொண்டு போகிறானே!" என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த இருவர் பேசியது விச்சுவின் அப்பாவுக்குக் கோபத்தைத்தான் மூட்டியது. "மண்டு! படிப்பில் ஒன்றையும் காணோம்!" என்று அவர் வாய் முணுமுணுத்தது.

விச்சுவின் அம்மாவுக்கு மட்டும் உள்ளூறச் சந்தோஷம்.

கடைசியாகத் தமிழ் டிராமா ஆரம்பமாயிற்று. விச்சுவின் அப்பா புறப்பட எழுந்திருந்

வாத்தியார்: மணி, தலைவலி எதனால் ஏற்படுகிறது?

மணி: (அடக்கத்துடன்) கண்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வதனாலே, சார்!

தார். "இருங்களேன்; இதையுந்தான் பார்த்துவிட்டே போவோமே' என்று விச்சுவின் அம்மாவும் மாமாவும் சொல்லவே, வேண்டா வெறுப்போடு அவர் உட்கார்ந்து கொண்டார்.

டிராமா நடந்தது. 'ஹீரோ' பார்ட் போட்டுக்கொண்டிருந்த பையன் மிகவும் நன்றாக நடித்தான். அப்பப்பா! அவனுடைய ஒவ்வொரு பேச்சுக்கும் நடிப்புக்கும் ஹால் முழுதும் ஒரே கைதட்டல்.

"இதோ பார்! உன்னை என்ன செய்கிறேன்!" என்று கத்தியை உருவிக்கொண்டு எதிரியின் மேல் பாய்ந்து சண்டை செய்தபோது அந்தப் பையனுடைய நடிப்புத் திறன் உச்

சத்தை அடைந்தது. சபை முழுதும் ஒரே கோலாகலம்.

"இருந்தால் இந்த மாதிரி அல்லவா இருக்க வேண்டும், பையன்கள்!" என்று ஒருவருக்கு ஒருவர் சொல்லிக்கொண்டார்கள்.

விச்சுவின் அம்மாகூட அவன் அப்பாவிடம், "நீங்கள்தான் பாவம், விச்சுவை வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்களே! இதைவிட நன்றாக நடித்திருப்பான் அவன்" என்று அங்கலாய்த்துக்கொண்டாள். விச்சுவின் அப்பாவுக்கும் மனத்தில் சிறிது வருத்தம் தோன்ற ஆரம்பித்தது.

'நம் பையன் விளையாட்டுக்களிலெல்லாம் முதல் பரிசு வாங்கியிருக்கிறான். அவனைப் பரிசு வாங்க முடியாமல் மாமா வீட்டில் இருக்கச் சொல்லி விட்டோமே! இவ்வளவு பேருக்கு எதிரில் அவன் பரிசு வாங்கினால் எவ்வளவு பெருமை?' என்ற சபலம் தோன்றியது.

'அதோ, அந்தப் பையன் எவ்வளவு அற்புதமாக நடிக்கிறான்! எவ்வளவு பேர் அவன் நடிப்பைப் புகழ்கின்றனர்! நம் பையன் விச்சுவுக்கு அல்லவா அந்த ஹீரோ பார்ட் கிடைத்திருக்க வேண்டும்? விச்சு நடித்துப் பெற வேண்டிய புகழை வேறு பையன் அல்லவா அடித்துக்கொண்டு போகிறான்?'

'சே! என்னால்தானே இப்படி நடந்தது? நான் செய்தது தவறு. விச்சுவை விளையாடக்கூடாது, டிராமாவில்

பையன்: அப்பா, அகப்பட்டு விட்டது அப்பா, பிராக்ரஸ் ரிப்போர்ட்!

அப்பா: (மார்க்குகளைப் பார்த்து விட்டு) ஏண்டா, மண்டு! இப்படி மார்க்குகள் சைபரும் பத்தும் வாங்கினால் நீ எப்படிடா பாஸ் செய்து உத்தியோகம் பார்த்து உருப்படப்போறே?

பையன்: என்னை ஏன் அப்பா வையறே? நீகூட முன்னே தொலைஞ்சு போச்சுன்னு சொல்லிண்டிருப்பாயே! உன் பிராக்ரஸ் ரிப்போர்ட்தான் அப்பா இது!

சேர்ந்து வீண் பொழுது போக்கக்கூடாது என்று சொல்லித் தடுத்தது தவறுதான்!'

இப்படியெல்லாம் அப்பாவின் மனம் எண்ணியது.

அதோ, டிராமா முடியப் போகிறது. கடைசி ஸீன்தான் பாக்கி.

மேடையில் இரண்டு நாற்காலிகள் போடப்பட்டன. அந்த ஊர்க் கலெக்டரும், ஸ்கூல் ஹெட்மாஸ்டரும் மேடைமேல்

ஏறி நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள்.

கலெக்டர் எழுந்து பேச ஆரம்பித்தார். அவர் கையில் ஒரு தங்கப் பதக்கம் இருந்தது.

"இந்த டிராமாவில் 'ஹீரோ' பார்ட் போட்டுக்கொண்ட பையன்தான் முதல் பரிசுக்கு உகந்தவன் என்று ஜட்ஜுகள் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். நம் நாட்டில் பையன்களில் பலர் படிப்பில் தான் அதிக கவனம் செலுத்துகிறார்களேயன்றி மற்ற விஷயங்களில் அப்படி இருப்பதில்லை. இதற்கு நம் பெற்றோர்கள்தான் காரணம். அவர்களில் அநேகர் தங்கள் பையன்கள் படிப்பில் முதலாக வர வேண்டும் என்று விரும்புகிறார்களே தவிர, மற்றப்படி விளையாட்டு, நடிப்பு, சித்திரம் போன்ற மற்றப் பல முக்கிய விஷயங்களிலும் கவனம் செலுத்துவதே இல்லை. இந்த நிலைமை மாறவேண்டும். இப்போது இந்தத் தங்கப் பதக்கத்தை 'ஹீரோ' பார்ட் போட்டுக்கொண்ட பையனுக்கு அளிக்கிறேன். அவனுக்கு என் மனமார்ந்த ஆசிகள்" என்று கூறிக்கொண்டே அருகில் வேஷத்தோடு நின்றுகொண்டிருந்த பையனின் மார்பில் பதக்கத்தைப் பொருத்தினார். சபை முழுவதும் கைகொட்டி ஆர்ப்பரித்தது.

ஹெட்மாஸ்டர் எழுந்திருந்தார்.

"இதோ, இந்த டிராமாவில் ஹீரோவாக நடித்த இந்தப் பையன் யார் என்று உங்களில் அநேகம் பேருக்கு அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. ஏன், நம் பள்ளி மாணவர்கள் அநேகம் பேருக்குக்கூடத் தெரியாது. இந்தப் பையன் பல விளையாட்டுக்களிலும் முதல் பரிசு பெற்ற விச்சுதான் என்று சொன்னால்——"

"ஜே - விச்சுவுக்கு ஜே! விச்சுவுக்கு ஜே!" என்ற கோஷங்கள் ஹெட்மாஸ்டரின் பேச்சைக் காதில் படாதவாறு மறைத்தன.

விச்சுவின் அப்பாவுக்குத் தம் காதுகளையே நம்ப முடியவில்லை.

"என்ன? நம்ப விச்சுவா?" என்றார் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்! நம்ப விச்சுதான்" என்றார் மாமா சந்திராவைப் பார்த்துக்கொண்டே.

"தினம் தினம் மாமா, விச்சுவைக் காரில் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வந்து விட்டு, அவன் விளையாட்டுக்களில் கலந்துகொண்டும், டிராமா ரிஹர்ஸலுக்கும் வந்திரா விட்டால் இப்போ எப்படி அப்பா தங்கப் பதக்கம் கிடைக்கும்?" என்றாள் சந்திரா குறுநகையுடன்.

அப்புறம் என் விச்சுவைப் படி என்று சொல்லப் போகிறார் அவன் அப்பா?

பூனைக்குட்டி

தூத்துக்குடி, மு. ரா. கோபாலன்

பையன்:—

பூனைக்குட்டி! பூனைக்குட்டி!
பூத்தசாம்பல் வர்ணக்குட்டி!
உன்னைத்தானே கூப்பிடுகிறேன்
ஓடிவாராய், பூனைக்குட்டி!

பாலும்சோறும் வெண்ணெய்கொண்டு
பலவிதப்பல காரம்கொண்டு
காலைமாலை கூவிநின்றேன்
காணவில்லை, எங்கேபோனாய்?

பூனைக்குட்டி:—

எலிபிடிக்கப் போயிருந்தேன்
வலிஎடுத்தது உடம்பெல்லாம்
கூலிசிறிதும் கிடைக்கவில்லை
கொண்டுவாராய், பாலும்சோறும்.



எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரையில்) "மூட்டை"



கண்ணாடி அழகி

கி. ரா.

வெகு காலத்துக்கு முன் சீன தேசத்தில் லூ என்று ஓர் இளைஞன் இருந்தான். அவனுடைய பெற்றோர் அவனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் பணக்காரர்கள் அல்ல. அதனால் கஷ்டப்பட்டு, ஒவ்வொரு காசாக மிச்சம் பிடித்து, நல்ல உபாத்தியாயரிடம் கல்வி கற்பித்து, அவனைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துவந்தார்கள். அந்த ஊரிலேயே மிக உயர்ந்த பரீட்சை, சக்கரவர்த்திப் பரீட்சைதான். அதில் தேறிவிட்டால் அரசாங்கத்தில் மிக உயர்ந்த உத்தியோகங்கள் கிடைக்கும். எப்படியாவது கஷ்டப்பட்டு அவனை அந்தப் பரீட்சையில் தேற வைத்துவிடவேண்டும் என்பது அவனுடைய பெற்றோரின் ஆசை.

ஆனால் இளைஞன் லூவோ பொறுப்புத் தெரியாமல் மனம் போனபடி சோம்பேறியாய்த் திரிந்துகொண்டிருந்தான். எப்போதும் சிநேகிதர்கள்கூட வீண்வம்பு பேசிக்கொண்டும், ஊர் சுற்றிக்கொண்டும் இருந்தான். இல்லையென்றால் ஒரு குருவியைப் பிடித்துக் கூண்டுக்குள் வைத்து ஆற்றங்கரையில் போய் அதனுடன் விளையாடிக்கொண்டிருப்பான். அவனுடைய தகப்பனார் எவ்வளவோ புத்திமதிகள் சொல்லியும் அவன் கேட்கவில்லை.

ஒரு நாள் மாலை வேளையில் லூ கையில் குருவிக் கூண்டுடன் ஆற்றங்கரையில் சுற்றிக்கொண்டிருந்தான். அங்கே ஓர் அழகான யுவதி வந்தாள். அவள் பெயர் டன்-ஷி. அவளுடைய முகம் பூர்ண சந்திரனைப் போல் பிரகாசித்தது. இவனைக் கண்டதும் அவள் புன்சிரிப்புச் சிரித்தாள். இவனும் அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பொழுதைக் கழித்தான்.

அதன் பிறகு அடிக்கடி இருவரும் ஆற்றங்கரையில் சந்தித்தார்கள். ஓடும் ஜலத்தில் காலைத் தொங்கவிட்டுக்கொண்டு இருவரும் பொழுது போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். அப்படிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு ஒரு நாள் வீட்டுக்குப் போகும்போது அந்தப் பெண் அவனைப் பார்த்து, "இப்படியே நாம் காலம் கழிப்பது சரியல்ல. நீ பரீட்சையில் படித்துத் தேறவேண்டிய மாணவன். நீயோ புஸ்தகத்தைத் திறந்து பார்ப்பதில்லை. பேனாவைக் கையால் தொடுவதில்லை. இப்படி வீண் பொழுதுபோக்கினால் நீ படித்து முன்னுக்கு வர முடியாது. ஆகையினால் நீ பரீட்சையில் தேறும்வரையில் நான் உன்னை வந்து பார்க்கமாட்

டேன். ஆனல் நான் ஓர் அபூர்வப் பொருள் தருகிறேன். அதை என் தந்தை அரேபியா தேசத்திலிருந்து கொண்டுவந்தார். அதில் சில சமயம் என்னுடைய முகத்தை நீ பார்க்கலாம்'' என்று சொல்லி அவன் கையில் ஒரு முகம் பார்க்கும் கண்ணுடியைக் கொடுத்தாள்.

அதை அவன் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்க்கும்போது, ''அன்பனே! இந்தக் கண்ணுடியில் பார்த்தால் என் முகம் தெரியும். ஆனல் நீ என்று நன்ருகப் பாடங்களைப் படித்திருக்கிருயோ அன்றுதான் தெரியும். நீ படிக்காத அன்று தெரியாது'' என்று சொல்லி விட்டு அவள் சென்ருள்.

அந்த அதிசயக் கண்ணாடியை எடுத்துக்கொண்டு லூ வருத்தத்துடன் வீடு திரும்பினான். வீட்டுக்குள் நுழைந்ததும் தன்னுடைய அறைக்குள் போய்க் கதவை மூடிக்கொண்டு அந்தக் கண்ணாடியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். கடைசியில் பளபளப்பான அதன் முன் பக்கத்தில் கூர்ந்து கவனித்தான். அதற்குள் பன் - ஷீனின் உருவம் தெரிந்தது. ஆனால் அவளுடைய முகம் தெரியவில்லை. முதுகுப்புறம்தான் தெரிந்தது.

அப்போதுதான் அவள் சொல்லிவிட்டுப் போன வார்த்தைகள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. "நீ நன்றாகப் படித்தால்தான் என் முகம் தெரியும்" என்று அவள் சொல்லவில்லையா? அதை நினைத்துக்கொண்டான். உடனே மேஜையடியில் போய் உட்கார்ந்துகொண்டான். மூலையில் கிடந்த புஸ்தகங்களைத் தேடி எடுத்தான். ஒவ்வொன்றாகப் புரட்டிப் படிக்கத் தொடங்கினான்.

விடியற்காலம் முதல் சாயங்காலம் வரையில் விழுந்து விழுந்து படித்தான். அறையை விட்டு வெளியே வருவதில்லை. அவனுடைய நண்பர்கள் யாராவது வந்தாலும் அவர்களைப் பார்ப்பதில்லை. அவனுடைய பெற்றோர் தங்கள் மகனுக்குப் புத்தி வந்துவிட்டது என்று எண்ணிச் சந்தோஷம் அடைந்தார்கள். உபாத்தியாயர்கள் அவனைப் புகழ்ந்த வண்ணம் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அவன் அந்த மாயக் கண்ணாடியைப் பார்ப்பான். அதற்குள் தவறாமல் பன் - ஷீனின் அழகிய முகம் காட்சி அளிக்கும்.

இப்படியே பன் - ஷீனின் மேல் ஏற்பட்ட காதலால் அவன் மாடுபோல் உழைத்து, சக்கரவர்த்திப் பரீட்சையில் முதன்மையாகத் தேறினான்.

மூன்று பரீட்சைகளிலும் அவன் வெற்றி பெற்றுவிட்டான் என்று அதிகாரிகள் அறிவித்தபோது அவன் வீடே ஆனந்தக் கடலில் ஆழ்ந்த வாணவெடிகள் தீர்க்கப்பட்டன. வீடு முழுவதும் தீபாலங்காரம் செய்தார்கள். தோரணங்கள் கட்டினார்கள். பூஜை அறை முழுவதும் வாசனைத் திரவியங்கள் புகைந்துகொண்டே இருந்தன. நண்பர்கள் ஓயாமல் வந்து வாழ்த்துக் கூறியவண்ணம் இருந்தார்கள். லூ பட்டு

உடைகள் அணிந்து, பல்லக்கில் ஏறித் தெருவெல்லாம் ஊர்வலம் வந்தான். வழிநெடுகிலும் பெண்கள் புஷ்பங்களை வாரித் தூவி, ஆரத்தி சுற்றி ஆரவாரம் செய்தார்கள்.

லூவின் வீட்டில் கொண்டாட்டங்கள் நடந்துகொண்டிருக்கையிலேயே ஒரு புரோகிதன் வந்து கதவைத் தட்டினான். அந்த ஊரிலேயே மிகப் பணக்காரரான ஒரு பிரபு அவனுடைய வெற்றியைக் கேள்வியுற்றுத் தம்முடைய ஒரே மகளை அவனுக்கு மணம்செய்து வைக்க அந்தப் புரோகிதரை அனுப்பியிருந்தார்.

புரோகிதர் சொன்னதைக் கேட்டதும் அவனுடைய பெற்றோருக்குத் தலைகால் தெரியவில்லை. பின் அவ்வளவு பெரிய பிரபு அந்த ஏழைக் குடும்பத்தில் சம்பந்தம் செய்வது என்றால் ஆச்சரியமாகத்தானே இருக்கும்!

ஆனால் லூ தன் பெற்றோரைப்போல் அதைக் கேட்டுச் சந்தோஷப்படவில்லை. அந்தப் புரோகிதர் மணப் பெண்ணின் அழகைப்பற்றி எவ்வளவோ வர்ணித்தும் அவன் கேட்பதாயில்லை. ''எனக்கு அந்தப் பெண் வேண்டியதில்லை'' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் போய்க் கதவை மூடிக் கொண்டுவிட்டான்.

உள்ளே போனதும் மந்திரக் கண்ணாடியை எடுத்துப் பார்த்தான். அதற்குள் அவனுடைய ஆசைக் காதலியின் முகம் தெரிந்தது. பன்-ஷீன் அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவளுடைய உதடுகள் அசைந்தன. ஆச்சரியத்துடன் லூ அதைக் கவனித்தான்.

''அந்தப் புரோகிதரிடம் போய், கல்யாணத்துக்குச் சம்மதிப்பதாகச் சொல்லு. ஏன் என்று என்னைக் கேட்காதே. அதுதான் உனக்கு நன்மை தரும். பேசாமல் ஒப்புக்கொள்'' என்று அந்தக் கண்ணாடிக் கட்டழகி சொன்னாள்.

அவளிடம் முடியாது என்றுசொல்லவேண்டும் என்று நினைத்து அவன் வாயைத் திறப்பதற்குள் அவளுடைய உருவம் மாயமாய் மறைந்துவிட்டது. கண்ணாடியைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். பலன் இல்லை. அவள் போய்விட்டாள்.

அதன்பிறகு அவன் ஒன்றும் செய்வதற்கு இல்லை. பேசாமல் வந்து நல்ல பிள்ளையாய்க் கல்யாணத்துக்குச் ‘சரி’ என்று சொல்லிவிட்டான். எல்லாருக்கும் திருப்தியாகப் போய்விட்டது.

அவன் மட்டும் உள்ளூற வருத்தப்பட்டுக்கொண்டே இருக்

தான். அவன் நம்பியிருந்த பெண் ஏன் இப்படி வேறு ஒரு பெண்ணை மணக்கவேண்டும் என்று சொன்னாள் என்பது மட்டும் அவனுக்கு விளங்கவே இல்லை. ஆனால் அவள் சொன்ன வார்த்தையை மீறவும் தைரியம் இல்லை. கல்யாண ஏற்பாடுகளில் ஒன்றும் சம்பந்தப்படாமல் யந்திரம் போல் நடந்து வந்தான்.

முகூர்த்த தினம் வந்தது. அவனைக் காலோடு தலை அலங்காரம் செய்தார்கள். வாத்தியங்கள் முழங்கின. அவன் குனிந்த தலை நிமிராமல் வீட்டு வாசலை அடைந்தான். அங்கே மணப்பெண்ணின் பல்லக்கு வந்து நின்றது. அதிலிருந்து மணப்பெண் இறங்கினாள். அப்போது தான் அவன் தலையை நிமிர்ந்து பார்த்தான். என்ன ஆச்சரியம்! அவனுக்கு எதிரில் பன்-ஹீனே மணப்பெண்ணாக நின்றாள்! அவனுடைய வருத்தம் எல்லாம் சந்தோஷமாய் மாறிற்று.

கல்யாணம் தடபுடலாக நடந்தது. அதன் பிறகு லூவுக்குக் கண்ணாடியைப் பார்த்துக் கொள்ள அவசியமே ஏற்படவில்லை. அவனுடைய காதலி தான் எப்போதும் பக்கத்திலேயே இருந்தாளே! அவளுடன் சந்தோஷமாக வெகு காலம் வாழ்ந்தான். அதன் பிறகு சீன தேசத்தில் பிள்ளைகள் தங்கள் பாடங்களைச் சரியானபடி படிக்காவிட்டால் பெற்றோர் லூவின் கதையை உதாரணமாகச் சொல்லுவது வழக்கம்.

நீங்களே செய்யலாம்

சாக்பீஸில் சங்கிலி

ஸி. ரங்கநாதன்



4 3 2 1

கோவையில் சிற்ப வேலைப்பாடமைந்த சிற்பங்களையுடைய அழகான கோவில் ஒன்று இருக்கிறது. அங்குள்ள கனகசபையில் கல்லால் ஆன சங்கிலி இருக்கிறது. கல்லை ஒட்ட முடியுமா? முடியாது பின் எப்படிச்செய்தார்கள்? செய்யமுடியும். நம்மால் கல்லினால் செய்ய முடியாவிட்டாலும் சாக்பீஸில் அதே மாதிரி (Model) செய்யலாம். இதை நீங்கள் ஒவ்வொருவரும் செய்து பார்க்கவேண்டும். இது செய்வதற்கு வெள்ளைச் சாக்பீஸை மட்டுமே எடுத்துக்கொள்ளுங்கள். அதுதான் உடையாது. முதலில் சாக்பீஸை ரெட்கிராஸ் + மார்க் மாதிரியாக படம் 1-இல் காட்டியபடி நான்கு சுவர்களாகப் பிரிக்கவேண்டும். இதில் எதிர் எதிராக உள்ள சுவர்கள் கோணலாக இல்லாமல் நேராக இருக்கவேண்டும்.

பிறகு படம் 2, 3-இல் காட்டியுள்ளதுபோல் அழகாக வெட்டவேண்டும். இவைகளையெல்லாம் பிளேடினாலேயே செய்யலாம். ஆனால் ஒவ்வொன்றையும் செய்யும்பொழுது மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கை சிறிது தவறினாலுங்கூடச் சாக்பீஸ் உடைந்து போகும். அப்படியே உடைந்து போனாலும் மனத் தளர்ச்சி அடையாமல் திரும்பத் திரும்பச் செய்து வெற்றியடைய வேண்டும். பிறகு குண்டுசியால் படம் 4-இல் காட்டியிருப்பதுபோல் மெதுவாகக் குடைந்து, வளையம் வளையமாகப் பிரிக்கவேண்டும். இதுதான் மிகவும் கஷ்டம். ஊசி சிறிது ஆடினாலும் வளையங்கள் உடைந்து போகும். படம் 3 மாதிரி செய்து முடித்தவுடனேயே வளையங்களை எப்படிப் பிரிக்கவேண்டும் என்று தெரிந்துவிடும். இது சுலபந்தான். ஆனால் பொறுமையும் குறிப்பான கையும் வேண்டும்.

ஆங்கிலச் சிறுவர்கள்

ச. கு. கணபதி ஐயர்

இங்கிலாந்து ஒரு சிறிய தீவு. அதில் உள்ளவர்கள் இங்கிலீஷ் பாஷையைப் பேசுகிறார்கள். உலகத்தின் பொது மொழி ஆங்கிலந்தான். ஹென்றி என்பவன் ஓர் ஆங்கிலச் சிறுவன். அவனுக்குத் தன் தேசத்தின்மீது பற்றுதல் அதிகம். இங்கிலாந்து ஒரு சிறிய தேசமானாலும் அது பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்டு வருகிறது. இங்கிலீஷ்காரர்கள் நல்ல குணமுடையவர்கள். நல்லொழுக்கத்தைச் சிறு வயதிலிருந்து வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் பழகிக்கொள்ளுகிறவர்கள். இந்த உயர்ந்த குணவொழுக்கங்களினால்தான் அவர்களால் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஆளமுடிகிறது.

இங்கிலாந்தில் சிறந்த மாலுமிகள் இருந்திருக்கிறார்கள். கப்பலோட்டுவதில் அவர்கள் சமர்த்தர்கள். சுமார் இருநூறு வருஷங்களாக அவர்கள் பல சமுத்திரங்களில் முக்கியமான இடங்களை எல்லாம் கைப்பற்றிக்கொண்டு ஆண்டு வருகிறார்கள். ஹென்றி தன் தேசத்து மாலுமிகளைப்பற்றி பெருமைப்படுவான். அவர்களைப் பற்றிய கதைகளைக் கேட்பதில்

அவனுக்கு விருப்பம் அதிகம். அதுபோலவே அவனுக்கு ஆங்கிலப் புலவர்களில் சிலரிடம் விசேஷ மதிப்பு உண்டு. இங்கிலீஷ் நாடகாசிரியர்களில் சிறந்தவர் ஷேக்ஸ்பியர் என்பவர். இயற்கையை வர்ணித்துப் பாடியிருப்பவர் வேர்ட்ஸ்வர்த் என்பவர். உலகமே பாராட்டும் புலவர்கள் இவர்கள். ஹென்றிக்கு இவர்கள் நூல்களில் ஆசை அதிகம்.

பனிக் காலத்தில் இங்கிலாந்தில் பசுமையான இடம் எதையும் காணமுடியாது. பனி யாவற்றையும் அழித்துவிடும். அதனால் பயிர்கள் எல்லாம் பனிக்காலத்துக்கு முன்னமே அறுவடையாகிவிடும். பனிக்காலம் முடிந்ததும் தேசம் முழுவதும் குபீர் என்று மறுபடியும் பச்சையாக மாறிவிடும். மலர்களுக்கும் சிங்காரத் தோட்டங்களுக்கும் பேர் போனது இங்கிலாந்து. ஹென்றிக்கு இவைகளிடம் பற்றுதல் அதிகம். அவன் வீட்டில் ஒரு தோட்டம் இருக்கிறது. அதில் காய்கறிகளும், ஆப்பிள் போன்ற சில பழங்களும், விசித்திரமான மலர்களும் பயிர் செய்யப்படுகின்றன.

இயற்கையைக் கண்டு ஆனந்திப்பதில் இங்கிலீஷ்காரர் மிக விருப்பமுடையவர்கள். விடுமுறை நாட்களில் ஹென்றியும் மற்றச் சிறுவர்களும் கிராமங்களுக்குப் போய் அங்கே உள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பதுண்டு. சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக நாட்டுப்புறங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செல்வதை விடுமுறை நாட்களில் பார்க்கலாம்.

இங்கிலீஷ் சிறுவர்கள் கிரிக்கெட், கால்பந்து முதலிய விளையாட்டுக்களில் பைத்தியம் கொண்டவர்கள். ஹென்றி நன்றாகக் கிரிக்கெட் விளையாடுவான். விளையாட்டைப் போலவே அவனுக்கு நாய், பூனை, குதிரைக் குட்டி முதலியவைகளிடம் பிரியம் அதிகம். இம்மூன்றையும் அவன் அருமையாக வளர்த்து வருகிறான். ஒவ்வோர் இங்கிலீஷ் சிறுவனும் ஏதேனும் ஒரு பிராணியைத் தன் தோழனைப்போல் பாவித்து வளர்த்து வருவதோடு அதனுடன் விளையாடுவான்.

ஹென்றி 'பப்ளிக் ஸ்கூல்' என்ற ஒரு விதமான பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறான். இங்கிலாந்திலுள்ள இவ்விதமான பள்ளிக்கூடங்கள் ஒழுக்க முறையைக் கற்றுக்கொடுப்பதில் பேர் போனவை. பிள்ளைகள் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த விடுதிகளிலேயே தங்கியிருப்பார்கள். சாப்பாடு, உறைவிடம் இரண்டும் அங்கேதான். ஒரு விடுதிக்குச் சில மாணவர்கள் வீதம் அங்கே பல விடுதிகள் இருக்கும். ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு சட்டாம் பிள்ளை இருப்பான்.

மாணவர்களுக்குள்ளே சிறு சண்டை முதலியவை ஏற்பட்டால் மாணவர்களாகவே அவற்றைத் தீர்த்துக்கொள்ள அப்பள்ளிக்கூடத்தில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஒவ்வோர் வகுப்பிலும் சில மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடி மாணவர்களின் வழக்குகளை விசாரிப்பார்கள். வழக்கின் முடிவைத் தலைமை உபாத்தியாயருக்கு அந்தக் கழகம் தெரிவிக்கும். தலைமை உபாத்தியாயர் குற்றவாளியைத் தண்டிப்பார். இதனைத் தவிர கிரிக்கெட், கால் பந்து முதலிய விளையாட்டுக்களின் மூலம் மாணவர்களுக்கு ஒழுங்கும் முறையும் நல்ல பழக்க வழக்கங்களும் கற்பிக்கப்படும். இந்தக் காரணங்களால் பப்ளிக் ஸ்கூல்களில் படித்து வெளிவருகிறவர்கள் சிறந்த ஒழுக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். சர்ச்சில் போன்ற மேதாவிகளும் இத்தகைய பள்ளிக்கூடங்களிலிருந்து வெளி வந்தவர்கள். நம் ஜவாஹர்லால் நேருவும் இங்கிலாந்தில் ஹாரோ என்ற இடத்தில் உள்ள பப்ளிக் ஸ்கூலில் பயின்று வெளிவந்தவரே. தன் நாட்டில் இவ்விதப் பள்ளிக் கூடங்கள் இருப்பதில் ஹென்றிக்கு பெருமை அதிகம்.

இங்கிலீஷ்காரர்கள் சிறிய தேசத்தவர்களாக இருந்தும் பெரிய சாம்ராஜ்யத்தை ஒழுங்காக ஆண்டுவரும் காரணம் சிறுவயதில் அவர்கள் பெற்று வரும் நல்லொழுக்கப் பயிற்சியே அல்லவா?



சீனித் தீவு

விக்கிரமன்

மந்திரம் உண்டா, மாயம் உண்டா என்றெல்லாம் நீங்கள் என்னைக் கேட்டால் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் நான் சொல்லவிரும்புவேன். உங்களைப்போலச் சிறுவனாக நான் இருந்தபோது ஊருக்கு நடுவே இருந்த தேர்முட்டி மண்டபத்தில் உட்கார்ந்து கொண்டு ஒரு தாத்தா எங்களுக்குப் பல கதைகள் சொல்வார். அடடா, என்ன அற்புதமான கதைகள் தெரியுமா! யாரும் நம்பவே முடியாத விந்தைகளும், மாயாஜால விநோதங்களும் வீரதீரப் பிரதாபங்களும் நிறைந்த அந்தக் கதைகள் எனக்குப் பிரமிப்பை உண்டு பண்ணும். அந்தத் தாத்தா கதையை வர்ணிக்கும்போது மான்கள் ஓடுவதுபோலவும் மயில்கள் ஆடுவது போலவும் அதிசய மனிதர்கள் எல்லாரும் அற்புதங்கள் பேசுவதுபோலவும், செய்வது போலவும் எண்ணிக் கற்பனைக் கடலில் மிதந்து செல்வேன். 'உலகத்தில் மந்திரமோ, மாயமோ இல்லாவிட்டாலும் என்போன்ற சிறுவர்களுக்காகவாவது அவைகள் அவசியம் இருக்கவேண்டும், கடவுளே' என்றுகூட வேண்டிக்கொள்வேன்.

ஆனால் தாத்தா பொய் சொல்லக்கூடிய தாத்தா அல்ல. கதையை ஆரம்பிக்கும்போதே, "நீங்கள் எல்லாம் இந்த மாதிரிக் கதைகளை நம்பமாட்டீர்கள். ஆனால் என் தாத்தா இவற்றைச் சொன்னபோது நான் அப்படியே நம்பினேன். ஏனென்றால் அந்தக் காலத்தில் இன்னும் மனசினால் கூட எண்ணமுடியாத அதிசயங்களை எல்லாம் மனிதர்கள் எண்ணினார்கள், செய்தார்கள்; அதனால்தான். நீங்களும் நான் பொய் சொல்லுவேன் என்று எண்ணக் கூடாது" என்றே ஆரம்பிப்பார்.

நானும் இப்போது அந்தக் கிழவருடைய வார்த்தைகளையே உங்களுக்குத் திருப்பிச் சொல்கிறேன். சரிதானா? இனி இந்தக் கதையைக் கொஞ்சம் கேளுங்கள்:-

நம் நாட்டுக்குக் கிழக்கே அப்போதும் இந்தக் கடல் இருந்தது. சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சீனித் தீவு, சீனித் தீவு என்று ஒரு பெரிய தீவு இருந்தது. நம் நாட்டு மன்னர்களுக்கும் அந்த நாட்டு மன்னர்களுக்கும் எப்போதும் சண்டைதான். அடிக்கடி ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு சண்டை மூண்டுவிடும். மரக்கலங்களிலும் படகுகளிலும் துருப்புகள் வந்திறங்கும்; போகும். ஒரு சமயம் இவர்கள் ஜயிப்பார்கள்; ஒரு சமயம் அவர்கள் ஜயிப்பார்கள். ஆனால் இந்தக் கதை நிகழ்ந்த காலத்தில் நம் நாட்டைச் சேர்ந்த கொற்கை அரசன் தோல்வியடைந்திருந்தான். சீனித் தீவின் அரசன் பிரளயசண்டன் வெற்றியடைந்திருந்தான்.

அவனுடைய வெற்றிக்கு உண்மையான காரணம் அந்த நாட்டில் இருந்த ஒரு பெரிய விலங்குதான்.

அதை ஒரு விலங்கு என்று சாதாரணமாக வர்ணிப்பது கூடாது. அதை வெல்வது என்பதோ, கொல்வது என்பதோ எவராலும் ஆகாத காரியம். அது விலங்குதானு அல்லது துஷ்ட தேவதையில் ஒன்ரு, அல்லது பயங்கரமான ராக்ஷஸனு என்றே ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. நாலுபுறமும் சேனைகள் எழுந்து சூழ்ந்தாலும் அந்த விலங்கு ஒரே நொடியில் அவர்களைப் பஸ்மமாக்கிவிடும். மலைக்குன்று போன்ற ஆட்டுக்கடாவின் தலையும், ராக்ஷஸனைப்போன்ற மனித உடலும், கரடிபோன்ற மயிரும், சிங்கத்தின் கால்களும், பட்டாக்கத்தியைவிட நீளமான நகங்களும் அதற்கு இருந்தன. இன்னும் சீனித் தீவில் உள்ளவர்கள் சொல்கிறபடி அது பேசுமோ என்னவோ அது மட்டும் யாருக்கும் தெரியாது.

பிரளயசண்டன் அந்த வெற்றியுடன் நிற்கவில்லை. ஒவ்வொரு வருஷமும் கொற்கை நாட்டு வாலிபர்களில் ஏழு பேரும் குமரிகளில் ஏழு பேரும் அனுப்ப வேண்டும் என்று கொற்கை அரசனிடம் ஒப்பந்தம் செய்துகொண்டான். ஒவ்வொரு வருஷமும் பதினுலு பேரை கொற்கை மன்னன் பல ஆண்டுகள் அனுப்பிக் கொண்டும் இருந்தான். இல்லாவிட்டால் அந்தக் கொடிய விலங்கு கொற்கை நாட்டில் புகுந்து அட்டகாசம் செய்துவிடும். அந்த விலங்கு மட்டும் இல்லாமல் இருந்தால் கொற்கை நாட்டு வீரர்களை வெல்ல இந்தப் பூமியில் ஒருவன் இருந்துவிட முடியுமா?

இந்தக் கொற்கை மன்னன் அப்படி ஒன்றும் சாமானியப் பட்டவன் இல்லை. மகா பெரிய வீரன். அவன் புகார் நகரிலிருந்து வந்து கொற்கையை வென்று அரசாண்டு வருகிறவன். அவனுடைய இருபதாவது வயதில் இளம் மனைவியை அங்கே விட்டுவிட்டு இங்கே வந்தவன்தான். திரும்பித் தன் நாட்டுக்குப் போகவேயில்லை. கொற்கையை ஆண்ட கிழவனுடைய பெண்ணின் மோகத்

தில் மயங்கித் தனக்கு மனைவி ஒருத்தி இருக்கிறாள், அவளை விட்டு வந்தபோது அவள் கர்ப்பிணி என்பதெல்லாவற்றையும் அடியோடு மறந்துவிட்டான். அந்தப் பெண்ணையே இரண்டாந் தாரமாக மணந்துகொண்டான். இரண்டு குழந்தைகளையும் பெற்றான். பல வருஷங்கள் ஆகிவிட்டன. இப்படியிருக்கும்போது திடீரென்று ஒரு நாள் கொற்கை நகரமே அல்லோல கல்லோலப்பட்டது. புகார் நகரிலிருந்து ஒரு வீர இளைஞன் வருகிறான் என்ற செய்தி மூலை முடுக்குகளிலெல்லாம் பரவி ஒரு பரபரப்பையே உண்டாக்கியது.

யார் அப்படிப்பட்ட வீர இளைஞன்? அப்படி என்ன அரும்பெரும் காரியத்தைச் சாதித்தான் அவன்?

அது ஒரு பெரிய கதை. ஆனால் நான் அதைச் சுருக்கமாகத் தான் சொல்லப்போகிறேன்.

அவன் பெயர் ஜம்பகன். அவனுடைய தாய்தான் புகார் நாட்டு அரசனுடைய மகள் வைசாலி. ஜம்பகன் சிறுவனாய் இருக்கும்போது வைசாலி அவனைத் தனியாக அழைத்துக் கொண்டு சமுத்திரக் கரையிலுள்ள இந்திர மண்டபத்துக்குப் போவாள். வீரம் மிக்க கதைகள் எல்லாம் அவனுக்கு அங்கே சொல்வாள். கை விறுவிறு என்று துடிக்கும். "அம்மா, நான் பெரிய வீரன் ஆகப் போகிறேன்" என்பான்.

ஒரு நாள் வைசாலி ஜம்பகன் உட்கார்ந்திருந்த கல்தேர் ஒன்றைக் காட்டி, "இதோ பார் ஜம்பகா! நீ உட்கார்ந்திருக்கிறாயே அந்தக் கல்லை உன்னால் புரட்ட முடியுமா?" என்று கேட்டாள். அவள் கண்களில் நீர் தேங்கி நின்றது. ஜம்பகன் இதைக் கண்டு திடுக்கிட்டு, "அம்மா, நீ ஏன் இப்படி வருத்தப்படுகிறாய், அதைச் சொல்லு" என்றான்.

வைசாலி, "நான் வருந்தவில்லையே" என்றாள். ஜம்பகன் கூரிய புத்திசாலியாகையால், "அம்மா, அம்மா! எப்போதும் நீதானே என்னோடு இருக்கிறாய்? என்னுடைய அப்பா எங்கே?" என்று கேட்டான்.

வைசாலி திடுக்கிட்டுப் பெருமூச் செறிந்தாள். ஜம்பகன் விடாமல், "சொல் அம்மா" என்று வற்புறுத்தினான். அம்மாவுடைய வருத்தத்துக்கு அதுதான் காரணம் என்று அவன் உள்ளம் ஊகித்துவிட்டது. என்ன இருந்தாலும் ராஜவம்சத்தில் பிறந்தவன் அல்லவா?

வைசாலி வேறு வழியின்றி உண்மையைச் சொன்னாள். "அப்பா, ஜம்பு! அதோ அந்தக் கல்தேர் மீதுதான் நானும் உன் தந்தையும் உட்கார்ந்திருப்போம். உன் அப்பாவுடைய கைவாளும் மிதியடிகளும் இந்தத் தேரின் அடியில் இருக்கின்றன. அதை எடுத்துக் கொண்டு கொற்கைக்குப் போனால் நீ யார் என்பதை அவர் அடையாளம் கண்டு கொள்வார்" என்றாள்.

ராஜகுமாரன் ஜம்பகன் தன்னால் முடிந்தவரையில் அந்தக் கல்லைப் புரட்டிப் பார்த்தான். முடியவில்லை. அன்றுமுதல்



அவன் ஒரு கங்கணம் கட்டிக்கொண்டு, "யாருடைய உதவியுமின்றி நான் இந்தக் கல்தேரைப் புரட்டுவேன். அதனடியில் என் தந்தை வைத்திருக்கும் கத்தியை எடுப்பேன். என் தந்தையைக் காணப் போவேன்" என்று பிரதிக்கினை செய்துகொண்டான்.

ஒருநாள் விடாமல் ஜம்பகன் இந்த மண்டபத்துக்கு வருவதும் கல்தேரைப் புரட்டிப் பழகுவதுமாக இருந்தான். நாளாக நாளாக தேர் பூமியில் பதிந்துகொண்டிருந்ததே தவிர அதை ஒரு துளிக்கூட அசைக்க முடியவில்லை. ஆனால் ஜம்பகனுடைய நம்பிக்கையும் வலுத்துக்கொண்டே வந்தது.

வைசாலிக்குத் தெரியும், குழந்தை ஜம்பகன் இன்னும் குழந்தையாகவே இல்லை என்று. அவன் அழகிய வாலிபனாக வளர்ந்து வந்தான்.

ஒரு நாள் ஜம்பகன், "அம்மா அம்மா! ஓடிவாயேன். கல்லை அசைத்துவிட்டேன். இன்று அல்லது நாளைக்குள் புரட்டித் தள்ளிவிடுகிறேன், பார்!" என்று கூவிக்கொண்டே ஓடிவந்தான்.

அவன் சொன்னது என்னவோ உண்மைதான். வைசாலி மறுநாள் அங்கே சென்றபோது ஜம்பகன் கடைசி முயற்சியாக மூச்சைப் பிடித்துக்கொண்டு அதைப் பிடித்து ஒரே புரட்டாகப் புரட்டித் தள்ளிவிட்டான். அதன் அடியில் அவன் தந்தையின் மிதியடிகளும் அற்புதமான மந்திர வாளும் இருந்தன. அவற்றை வெளியே எடுத்து ஜம்பகன் கண்களில் ஒற்றிக் கொண்டு தான் அணிந்து கொண்டான்.

கண்களிலே ஆனந்த பாஷ்பமும் மனசிலே சிறு வேதனையும் மூண்ட வைசாலி இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நின்றாள். இனி இந்த வீரம் நிறைந்த இளைஞனை நிறுத்திவைக்க முடியாது; அவன் எப்படியும் தந்தையைப் போய்ப் பார்த்தே தீருவான் என்று வைசாலிக்குத் தோன்றிற்று.

அதேபோல ஜம்பகன் பிரயாணத்துக்குச் சித்தமானான். பெரிய மரக்கலம் ஒன்று புகார் நகரத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது.

இங்கே வழியில் நடந்த அற்புத வரலாறுகளையெல்லாம் சொல்வதென்றால் அவைகளே ஒரு பெரிய கதையாகிவிடும்.

எத்தனையோ இன்னல்கள் முளைத்தன. புயல் வீசியது. கப்பலில் வந்தவர்களில் பாதிப்பேர் பீதியினாலேயே இறந்தார்கள்.

நடுவழியில் ஏதோ ஒரு தீவை நெருங்கும்போது மூர்க்கமுழியன் என்ற அரக்கன் ஒருவன் அவர்கள் வந்த மரக்கலத்தை ஒரு பெரிய பாறையில் மோதிச் சிதறவடித்தான். அதில் ஜம்பகனைத் தவிர மீதிப் பேரும் மாண்டனர். ஜம்பகனே தன் வீர தீரத்தைக் காட்டி, அந்த அரக்கனை எதிர்த்து நின்று போராடி அவனைக் கொன்றான். பிறகு ஆலகால விஷத்தைக் கக்கும் ஒரு ராக்ஷஸியிடமிருந்து ஜம்பகத் தீவு மக்களைக் காப்பாற்றினான். அங்கே அவனுக்குப் புதிய மரக்கலம் ஒன்று கிடைத்தது.

இவ்விதம் அவன் போகுமுன் அவன் புகழ் பல நாடுகளையும் எட்டியது.

அவன் வருகையால்தான் கொற்கை நகரமே முன்னே சொன்னபடி அல்லோலகல்லோலப்பட்டது. "வீராதி வீரன், தீராதி தீரன், அசகாய சூரன் இளவல் ஜம்பகனே வருக, வருக" என்று நகரெங்கும் எழுதியிருந்தது.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் கொற்கை மன்னனுக்கு அந்த ஜம்பகன் தன்னுடைய சொந்த மகன்தான் என்பது தெரியவே தெரியாது. ஜம்பகனும் தன்னை அவ்விதம் யாரிடமும் அறிமுகப்படுத்திக்கொள்ளவில்லை. தன் தந்தை திடீரென்று தன்னைக் கண்டு, திகைத்து நிற்கவேண்டும் என்று இளைஞர்களுக்குரிய இயல்புடன் எண்ணினான்.

இந்த விஷயம் எப்படியோ அந்தத் தேசத்து அரசி, அதாவது ஜம்பகனுடைய சிற்றன்னை விசாரிணிக்குத் தெரிந்தது. அவள் அசூயையும் ஆத்திரமும் கொண்டு ஜம்பகனைக் கொன்று விடப் பல சூழ்ச்சிகளைச் செய்யலானாள். அரசனிடம் சென்று, "யாரோ ஜம்பகனாம். அவன் உங்களைக் கொன்று இந்த நாட்டையே அபகரிக்க வந்திருக்கிறானாம்!" என்றாள்.

"என்னிடம் அந்த வேலையை விட்டு விடுங்கள், நான் பார்த்துக் கொள்கிறேன். இதோ, இந்த விஷம் கலந்த பானம் அவன் உயிரையே குடித்து விடும். கவலைப்படாதீர்கள்" என்றாள் விசாரிணி மீண்டும்.

கொற்கை மன்னன் இந்த விஷயத்தை அவ்வளவு பெரிதாக நினைக்கவில்லை. உயிர்களைக் கொல்லச் செய்வது மன்னர்களுக்குச் சர்வ சாதாரணமானதுதானே?

"சரி; அவன் வரட்டும்" என்று கூறினான் மன்னன்.

விசாரிணி குறும்புடன், ஆனால் கொடிய எண்ணத்துடன் சிரித்துக்கொண்டாள்.

ராஜசபை கூடியது. அரசன் உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான். அரசியும் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். ஏகக் கூட்டம்.

ஜம்பகன் பெரிய வீரர்களுக்கே உரிய கம்பீரமான நடையில் வந்து இளமை சொட்டும் முகத்தைப் பணிவாகக்

காட்டி வணங்கினான். முதலில் மன்னனே சிறிது திகைத்து விட்டான். அரசியின் கபட நாடகத்தையோ, ஜம்பகன் தன் மைந்தன் என்பதையோ அறியாத அவன் மனம் மட்டும் குறுகுறுத்தது. "வீரனே, வருக!" என்றான் அரசன்.

விசாரிணிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. அரசன் காதோடு காதாக, "உம்; தாமதிக்காதீர்கள். முதலில் இந்த விஷபானத்தை உங்கள் கையாலேயே கொடுங்கள்" என்றாள்.

அரசன் ஜம்பகனை நோக்கி, "இளைஞனே, உன் வீரத்தை நான் மெச்சுகிறேன். அதற்கு அறிகுறியாக இதை முதலில் பருகு" என்று கிண்ணத்தைக் கையில் எடுத்தான்.

அவன் கைகள் வெடவெட வென்று நடுங்கின. அரசி இதைக் கவனித்தாள். ஒருகால் அரசனுடைய மனம் இளகி விடுமோ என்று பயந்து, "அதோ அவன் இடுப்பைப் பாருங்கள். தங்கத்தினால் ஆன வாள். அதனாலேயே உங்கள் இருதயத்தில் குத்தப் போகிறானாம். உடனே தயங்காமல் கொடுங்கள்" என்றாள்.

அரசன் ஜம்பகனுடைய இடுப்பில் தொங்கிய வாளை அப்போதுதான் கவனித்தான். அப்படியே திடுக்கிட்டு, "ஏதப்பா உனக்கு இந்த வாள்? இது எப்படி உனக்குக் கிடைத்தது?" என்று கர்ஜித்தான். கையிலிருந்த கிண்ணம் அரசியிடமே போய்விட்டது.

ஜம்பகன் கம்பீரமாக நிமிர்ந்து, "இது என் தந்தையுடைய வாள்!" என்றான். "அதோ இவைகளும் அவருடையவைதான்!" என்று காலில் அணிந்திருந்த ஜோடுகளையும் காட்டினான். "என் தாய், புகார் நகரத்து ராஜகுமாரி வைசாலி, தந்தையுடைய கதையை எனக்குச் சொல்லியிருக்கிறாள். நான் வளர்ந்து பெரியவனான பிறகு என் கையாலேயே அந்தக் கல் தேர் மூடியைத் தள்ளி, இவற்றை எடுத்துக்கொண்டு என் தந்தையைக் காண வந்திருக்கிறேன்" என்றான் மேலும்.

அவன் அந்த வார்த்தைகளைச் சொல்லிமுடிக்கு முன்பே, "ஆ, என் குழந்தாய்!" என்று பெரிதாக ஓலமிட்டான் மன்னன்.

இந்த அமர்க்களத்தில் அரசி விசாரிணி தன் குட்டு வெளிப்பட்டுவிடுமோ என்று அஞ்சி அந்தக் கிண்ணத்திலிருந்த மது ரஸத்தைத் தன் குழந்தைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சம் குடிக்கக் கொடுத்து, மீதியைத் தானே அருந்திவிட்டாள்.

இதையெல்லாம் வளர்த்து வானேன்! நம் கதைக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத விஷயம்.

கொற்கை மன்னன் தன் அருமை மகனைக் கண்ட ஆனந்தத்தில் திளைத்திருக்கும்போது ஒரு நாள் நகரமே கூக்குரல் மயமாய் இருந்தது. சீனித் தீவுக்குப் பலி அனுப்பும் நாள்தான் அது. யார் தலைக்குச் சீட்டு விழப்போகிறதோ என்று ஒவ்வொருவரும் கலங்கினார்கள்.

"என்ன அப்பா சமாசாரம்?" என்றான் ஜம்பகன் தந்தையிடம்

சினித்தீவின் அரசன் பிரளய சண்டனைப் பற்றியும் அவன் தேசத்திலுள்ள கொடிய ராக்ஷஸ விலங்கு கொல்லு மாங்களைப் பற்றியும் விவரமாகச் சொன்னான் மன்னன்.

அதைக் கேட்ட ஜம்பகன், "தந்தையே, இந்த வருஷம் நம் மக்கள் ஆறே ஆறு வாலிபர்களை மட்டும் பொறுக்கட்டும். ஏழாவது ஆளாக நான் போகிறேன்" என்றான்.

மன்னனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "சாதாரண ஜனங்களுக்குப் பதிலாக நீ போவதா? நான் உன்னை அனுப்புவதா?" என்றான்.

"நான் உங்கள் குமாரன். அதனால்தான் சொல்கிறேன். இந்த வாள் என் கையிலிருக்கும் வரையில் என்னை யாராலும் வெல்லமுடியாது என்ற தைரியம் எனக்கு உண்டு" என்றான் ஜம்பகன்.

அரசன் கண்ணீர்விட்டான்; கலங்கினான். ஆனால் ஜம்பகன் தன் முடிவை மாற்றிக்கொள்ளவேயில்லை.

மறுநாள் மரக்கலம் தயாராக நின்றது. ஜம்பகன் அதில் நின்றான். நகரமக்கள் எல்லாரும் வருத்தத்தினால் வாயடைத்து வியந்து நின்றார்கள். கடைசியாக மன்னன், "குழந்தாய்! நீ போய் ஜயத்துடன் திரும்பி வர தேவி அருள் புரியட்டும்" என்றான்.

மரக்கலம் புறப்பட்டது. பல நாட்கள் பிரயாணம் செய்து ஏழாவது நாள் மாலையில் சினித் தீவை அடைந்தது.

பிரளயசண்டனுடைய கொலு மண்டபத்தில் இந்தப் பதினாலு பேர்களும் கொண்டு போய் நிறுத்தப்பட்டார்கள்.

பிரளயசண்டனோ கொஞ்சங் கூடக் கருணையே இல்லாதவன். அவன் ஒவ்வொருவராகத் தன் அருகில் அழைத்து அவர்கள் உடலைக் கையிலிருந்த பட்டாக் கத்தியினால் தட்டிப் பார்த்தான். "போகட்டும்; கொல்லுமாங்களுக்குச் சரியான ஆகாரம் தான்" என்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது. எல்லா இளைஞர்களும் யுவதிகளும் அழுது புலம்ப, ஜம்பகன் மட்டும் கம்பீரமாக, தைரியமாக நிமிர்ந்து நின்றான். அரசன் அவனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து, "பையா, உனக்குக் கொல்லுமாங்களைப் பற்றிப் பயமாய் இல்லை?" என்று கேட்டான்.

"பயம் எதற்கு? என் தேசத்துக்காக நான் உயிரை இழக்கத்தானே வந்திருக்கிறேன். ஆனால், ராஜனே, உன்னைத்தான் அந்தக் கொடிய விலங்கைவிட அதிகமாக நான் வெறுக்கிறேன். ஒவ்வொரு வருஷமும் இதுபோன்ற இளைஞர்களையும் பெண்களையும் பலி கொடுக்க உனக்கு வெட்கமாய் இல்லை? தங்கச் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் ஏ மூர்க்க ராஜனே! கொல்லுமாங்களை விடக் கொடியவன் நீதான்!" என்று ஆவேசத்தோடு பேசினான் ஜம்பகன்.

"ஹ - ஹ் - ஹா!" என்று பிரளயசண்டன் சிரித்தான். "நாளைக்கு விடியற்காலையில்

யார் கொடிய மிருகம் என்று தெரியும் உனக்கு! போ! அடே, யாரடா அங்கே - கொண்டு போய் இவர்களைக் கொட்டடியில் அடையுங்கள்'' என்ருன். அரசனுடைய சிம்மாசனத்துக்கு அருகில் நின்ற ராஜகுமாரி குசுமசுந்தரி இவ்வளவையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தாள். அவள் அழகுக்கெல்லாம் சிகரம்போன்ற அழகுடைய சுந்தரி. அவளுடைய பூப்போன்ற மனசு இதைக் கண்டு உண்மையில் வாடியது. ''ஆகா—இந்தக் கொடிய விலங்கின் ஆகாரத்துக்கு ஒரு மாட்டையோ, மிருகத்தையோ கொடுத்தாலும் அதன் பசி தீர்ந்துபோகும். இதற்காக இந்த இளமையில் பூத்த மலர்களைக் கொண்டு போய்ப் பலியிடுவதாவது! என்ன பரிதாபம்!'' என்று உருகியது அவள் உள்ளம். ஜம்பகனுடைய தோற்றத்தையும் அவனுடைய வீரம் நிறைந்த பேச்சையும் கண்டு, 'என்ன அழகு! என்ன கம்பீரமான தோற்றம்! என்ன வீரம்!' என்று வியந்தது அவள் மனம்.

அவர்கள் போன பிறகு, ''அப்பா, இந்த ஒரு வாலிபனை யாவது விட்டுவிடுங்கள்'' என்று கெஞ்சினுள்.

''சீ, அசட்டுப் பெண்ணே'' என்ருன் பிரளயசண்டன்.

அந்த இளம் கைதிகளை ஒரு குகையில் போட்டுச் சிறை வைத்தார்கள். யுவதிகளும் வாலிபர்களும் தம் விதியை நினைந்து, புலம்பி, அப்படியே தூங்கிப்போனுர்கள். ஜம்பகன் மட்டுமே தூக்கம் பிடிக்காமல் விழித்துக்கொண்டிருந்தான்.

நட்ட நடு நிசி. எங்கும் இருள். கலகலவென்று சங்கிலிப் பூட்டைத் திறக்கும் ஒலி மெல்லக் கேட்டது. கையில் ஒரு தீப்பந்தத்துடன் ஒரு யுவதி வருவதைக் கண்டு திகைத்தான் ஜம்பகன்.

''பெண்ணே, யார் நீ?''

''குசுமசுந்தரி! பிரளயசண்டன் குமாரி!''

''ஓ! அப்படியானுல்......''

''என் தந்தையைப்போலவே இருப்பேன் என்றுதானே சொல்லவருகிறீர்கள்? உடனே கிளம்புங்கள்; தப்பித்துச்செல்ல இதுதான் சரியான சமயம். பிறகு முடியாது. இல்லாவிட்டால் அதிகாலையிலேயே கொல்லுமாங்கனுக்குப் பலியாகவேண்டியதுதான்.''

''குசுமா! நான் மட்டும் தப்பிச் செல்ல விரும்பவில்லை. எப்படியும் அந்தக் கொல்லுமாங்களை நான் கொன்றே தீருவேன். அதற்கு மட்டும் நீ உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டான் ஜம்பகன்.

''இதோ உங்கள் உடைவாள்! வாருங்கள், முதலில் வெளியே செல்வோம். அதற்குப் பிறகு பேசலாம்'' என்ருள் குசுமா.

வெளியே வந்ததும் குளிர் காற்று உடலில் வீசியது. நிலா மங்கலாக எறிந்துகொண்டிருந்தது. எங்கும் நிச்சப்தம். பல சோலைகளையும் மைதானங்களையும் கடந்து வானளாவிய ஒரு பெரிய மதிள் சுவர் அருகில் இருவரும் வந்தார்கள்.

"இளவரசே! அதோ உறுமல் சப்தம் கேட்கிறதா உங்களுக்கு—அதுதான் கொல்லு மாங்கன் இருக்கும் சுழல்மண்டபம். நான் இனிமேல் வர முடியாது. நீங்கள் மட்டுமே போகவேண்டும்" என்றாள்.

ஜம்பகன், "சரி; நீ இரு. நான் எப்படியும் அதை ஒழித்துவிட்டே திரும்புவேன்" என்றான்.

குசுமாவின் கண்கள் நிலவில் பளபளத்தன. "ராஜகுமாரா! அது சாமானியமான மண்டபமல்ல. உள்ளே போனதும் சுற்றிச் சுற்றி வந்தாலும் வெளியே வர முடியாது. ஆயுள் பூராவும் சுற்றவேண்டியதுதான். இதோ இந்த நூல் கண்டைப் பிரித்துக் கொண்டே போங்கள். இதன் ஒரு நுனியை நான் வைத்துக் கொள்கிறேன். அடுத்த நுனியை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். திரும்பிவரும் போது அதைப் பிடித்துக் கொண்டே வந்துவிடலாம்" என்றாள்.

திடீரென்று அண்டம் பிளந்தது போல, கொல்லு மாங்கனுடைய கர்ஜனை கேட்டது. ஜம்பகன் திடுக்கிட்டான். கையில் வாளை ஏந்திக்கொண்டு சுழல் மண்டபம் இருந்த வாயிலை நோக்கி நடந்தான். நூல் பிரிந்துகொண்டே வந்தது. மண்டபத்தை நெருங்க நெருங்க அந்த ராக்ஷஸ விலங்கின் கர்ஜனையும் அதனுடைய நாற்றமும் குடலைப்புரட்டின.

செங்குத்தான சுழல் மண்டபப் படிக்கட்டில் கொஞ்சம்

அஜாக்கிரதையாக ஒரு காலை வைத்தாலும் போதும்; இடறி விழுந்துவிட வேண்டியதுதான். ஆனால் ஜம்பகனோ அசாத்திய திடத்துடனும் தைரியத்துடனும் கீழே இறங்கி வந்தான். தூரத்திலேயே கொல்லுமாங்கனுடைய குறட்டை பெரிய சூறுவளிக் காற்றைப்போல ஆளை இழுத்தது.

அப்பாப்பா! என்ன பயங்கரமான உருவம்! சுமார் அறுபது அடி நீளமும் பதினைந்தடி உயரமும் இருண்ட உடலும், பெரிய சிவப்பு விழிகளும், உடைவாளைவிட நீண்ட விரல்களும் குகை போன்ற வாயும்—அடேயப்பா! ஜம்ப

கன் ஒரு கணம் நிலை கலங்கிவிட்டான். அவனைப்போல ஐம்பது ஜம்பகன்களை ஒரே விழுங்கில் விழுங்கிவிடக்கூடிய சக்தி அதற்கு இருக்குமே என்று பிரமிப்பாய் இருந்தது.

ஜம்பகன் தன் தைரியமனைத்தையும் ஒன்று சேர்த்துக்கொண்டு அந்த ராக்ஷஸ விலங்கின் வாலை ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்தினான். கொல்லுமாங்கன் வீறுகொண்டெழுந்தது. மண்டபமே பெயர்ந்து வீழ்வதுபோல் கர்ஜித்தது. வாயைப் பெரிதாகப் பிளந்துகொண்டு பாய்ந்தது.

இங்கே ஒரு விஷயம்: அவனுக்கும் கொல்லுமாங்கனுக்கும் நடந்த சண்டையை அப்படியே விவரிப்பது என்பது யாராலும் முடியாத காரியம். அதைப் போன்ற சண்டை ஒன்று இந்த உலகத்திலேயே நடக்கவில்லை என்று மட்டும் சொன்னால், அதுவே போதும்.

இறுதியில் மந்திர வாளை எடுத்து அந்த விலங்கின் தலையை இடியைப் பெயர்த்து வீழ்த்தியதுபோல வீழ்த்தினான் ஜம்பகன். அந்தச் சத்தத்தில் அந்தத் தீவே ஓர் ஆட்டம் கண்டது. மண்டபமே பெயர்ந்து, பொடிந்து, நொறுங்கியது. எப்படியோ ஒருவிதமாக நூலைப் பிடித்துக்கொண்டு ஜம்பகன் குசுமசுந்தரியிடம் வந்து சேர்ந்தான்.

"குசுமா! வெற்றி! கொல்லுமாங்கன் உயிரைக் குடித்துவிட்டது என் வாள்" என்றான்.

"குசுமா, இனி நீயும் வந்துவிடு எங்களுடன். இந்தக் கொடிய தந்தை நீ எங்களைத் தப்புவித்ததற்காக உன்னையே ஆத்திரத்தில் கொன்று போட்டாலும் போட்டுவிடுவான்" என்றான் ஜம்பகன்.

இதற்குள் கொல்லுமாங்கன் இறந்த சத்தத்தினால் பிரளயசண்டனே அங்கு வந்துவிட்டான்.

ஆனால் அவன் எல்லாம் கைமிஞ்சிப்போனதை உணர்ந்ததும், "குசுமசுந்தரி! நீ செய்த காரியம் தகாதது. அதற்கு என்ன தண்டனை தெரியுமா?" என்றான்.

குசுமா வெலவெலத்துப் போய் நின்றாள். பிரளயசண்டன் ஜம்பகனுடைய கைகளைப் பிடித்து, "ஏ, வீர இளைஞனே! இன்று கொல்லுமாங்கன் மட்டும் இறக்கவில்லை. கொற்கை நாட்டுக்கும் சீனித் தீவுக்கும் இருந்த பகையும் இன்றுடன் இறந்தது. இந்தா, இந்த அழகிய பாலிகையின் கைகளைப் பிடித்துக் கொள். அவளுக்கு இதைவிட வேறு தண்டனை எனக்குக் கொடுக்கத் தெரியவில்லை" என்றான்.

அப்புறம் வளர்த்துவானேன்! சிறையில் கிடந்த மற்ற இளைஞர்களும் குமரிகளும் இதைக் கேட்டு ஆனந்தக் கூத்தாடினார்கள். ஆடிப்பாடிக் களித்தார்கள். அங்கிருந்து குசுமசுந்தரியுடன் ஜம்பகன் மீண்டும் மரக்கலமேறினான்.

வைசாலி இதற்குள் கொற்கைக்கு வந்துவிட்டாள். திருமண வைபவத்துக்காக வந்த பிரளயசண்டன், "இனி ஜம்பகன் இந்த நாட்டுக்கு மட்டும் அல்ல; சீனித் தீவுக்கும் அவனே அரசன். நான் முடி துறந்துவிட நிச்சயித்துவிட்டேன்" என்று பெருத்த ஆரவாரத்திடையே கூறினான்.

இதைக் கேட்டதும், ஜம்பகனைப் பார்த்துக் குசுமசுந்தரி குறுநகை புரிந்தாள்.

இந்தக் கதையைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்!

வியூ மாஸ்டர் பரிசு பெற்ற குழந்தை

ஆசிரியர் அவர்களுக்கு,

அநேக கோடி நமஸ்காரங்கள். என்னுடைய போட்டோவை இத்துடன் அனுப்புகிறேன். இது இவ்வளவு தாமதமாக வருவதற்குக் கோடி மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊர் ஒரு பட்டிக்காடு! இங்கு போட்டோ ஸ்டுடியோ கிடையாது. ஆகையால் பக்கத்து ஊருக்குப் போய், போட்டோ எடுத்து அனுப்புவதற்குத் தாமதமாகிவிட்டது. இதுதான் காரணம்.

வியூ மாஸ்டரில் நான் இந்த உலகத்தையே காண்கிறேன். புத்தரோடு பேசுகிறேன். ஜும்மா மசூதியிலும் குதுப்மினாரிலும் விநாடிக்கு விநாடி உலவுகிறேன். இவ்வளவு உயர்ந்த பரிசை எனக்கு அளித்ததற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொரு கோடி மனமார்ந்த வணக்கங்கள்.

தங்கள் அன்பை மறவாத, N. ஸ்ரீநிவாஸன், கீழக்கரை.

[அநேக கோடி ஆசிகள். ஆ-ர்.]

* * *

''குழந்தைகளே! இலங்கையில் பேனா நண்பர்கள் தேவையானால் என்னுடன் பேனா நண்பனாக இருக்கலாம்.'' ச. செல்வநாயகம், (S. 90) 'ராணி வாசா', பண்டைத்தரிப்பு, யாழ்ப்பாணம்.

"கழக சகோதரர்களே. தீப்பெட்டிப் படம் சேகரிப்பவர்கள் என்னிடம் உள்ளவற்றைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதில் தபால் முத்திரை கொடுக்கலாம்." அகமது முகைதீன், (A. 60) 62, 5 - ஆவது தெரு, ஏர்வாடி.

* * *

1951 - இல் தேதியும் கிழமையும்

கீழே ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வோர் எண் கொடுக்கப்பட்டிருக்கிறது:

ஜனவரி	1	மே	2	செப்டம்பர்	6
பிப்ரவரி	4	ஜூன்	5	அக்டோபர்	1
மார்ச்சு	4	ஜூலை	7	நவம்பர்	4
ஏப்ரல்	7	ஆகஸ்டு	3	டிசம்பர்	6

இந்த எண்களை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். ஏப்ரல் மாதம் 10 - ஆம் தேதி என்ன கிழமை என்று கேட்டால், ஏப்ரல் மாத எண் என்ன? 7. அதை அந்தத் தேதியுடன் கூட்ட வேண்டும். பதினேழு ஆயிற்று? இதை 7-ஆல் வகுக்கவேண்டும். மீதி மூன்று; செவ்வாய்க் கிழமை. ஞாயிறு - 1 திங்கள் - 2, செவ்வாய் - 3, புதன் - 4, வியாழன் - 5, வெள்ளி - 6, சனி - 0.

P. சுப்பராயலு, திண்டுக்கல்.

* * *

ஒரே கோட்டில் வரைந்த படம்



டி. வி ரங்கசாமி, ஆரணி.

புள்ளி மயில்

சீனு ரா. ராமசுப்பு

புள்ளி மயிலே? ஓடிவா,
பூஞ்சோலையில் ஆடிட!
வெள்ளிச் சங்கிலி சூடுவேன்
வேகமாக ஓடிவா!
அன்ன நடை மயிலே
அழகு உன்றன் சாயலே
மின்னுந் தோகை விரித்தே நீ
மேன்மையாக ஆடுவாய்!
வெயில் கடுமை யாதலால்,
விசிறி யொன்று செய்திட!
மயிலே இறகு போட்டுநீ
மாண்புடனே ஆடுவாய்!
கார் மேகத்தைக் கண்டாலோ
களித்துநன்கு ஆடுவாய்!
பார்செழித்து மக்கள் வாழப்
பாங்குடனே ஆடுவாய்!

* * *

A. V. ராமசாமி, திருச்சி



மேலே உள்ள படத்தில் எவ்வளவு முக்கோணங்கள் இருக்கின்றன?

(விடை கடைசிப் பக்கத்தில்)

விடுகதை

பச்சை நிறங் கொண்டாள், பார்வதி தானல்லள்
கொச்சைமொழி சொல்வாள் குழவியல்லள்—இச்சையுடன்
எல்லோரும் கால்பிடித்தே இன்பமுடன் கொஞ்சுகின்ற
நல்லாள் அவள் யார் நவில்.

(கிளி)

—வே ப பாபுல், அரூர்

* * *

விடை: மொத்தம் 47 முக்கோணங்கள்.

1. 2-7-4. 2. 1-2-6; 3. 1-2-7; 4. 1-6-7; 5. 6-7-8; 6. 1-6-8; 7. 2-7-8; 8. 1-2–8; 9. 6-8-10; 10. 2-8-9; 11. 4-6-7; 12. 4-5-6; 13. 2-3-4; 14. 4-5-8; 15 3-4-8; 16. 4-6-9; 17 4-8-10; 18. 4-8-9; 19. 2-6-8; 20. 5-6-10; 21. 2-5-6; 22. 3-4-6; 23. 2-4–8; 24. 4-6-8; 25. 2-4-6; 26. 4-5-10; 27. 3-4-9; 28. 1-3-5; 29. 1-4-5; 30. 1-3-4; 31. 3-5-6; 32. 2-3-5; 33 3-4-6; 34. 2-4-5; 35. 1-3-6; 36 1-2-5; 37. 2-6-10; 38. 3-4-10; 39. 1-4-6; 40. 1-4-2; 41. 1-3-8; 42. 1-5-8; 43. 1-2-6; 44. 2-69-; 45. 2-3-9; 46. 5-6-8; 47. 2-3-8;

* * * *

கண்ணன் ஆசிரியர் அவர்களே, நமஸ்காரம்.

ஒரு சிறு வேண்டுகோள்: 18 வயது வரையுள்ள சிறுவர்கள் எல்லாரையும் கண்ணன் கழக அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். 18 வயதுக்குமேல்தானே அண்ணு, மேஜர்? அதனுல்தான் 18 வயதுக்கு உட்பட்ட மைனர்களைக் கழகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

சண்முகநாதன், 3, கம்மாளத்தெரு, புத்தூர், திருச்சி.

(ஒரு சிறு சந்தேகம்: கண்ணனை அதற்குப் பிறகு, குழந்தைகள் பத்திரிகை என்பதா, மைனர்கள் பத்திரிகை என்பதா? ஆ—ர்.)

* * * *

இந்தப் போக்கிரி மந்திரவாதி தன் முகத்தில் ஒரு பெண்ணை மறைத்து வைத்திருக்கிறுன். கண்டு பிடியுங்கள்.

P. V. தண்டாயுதம் (D. 25), கோயம்புத்தூர்.

[கண்டுபிடித்து விடலாமே; திருப்பிப் பாருங்கள். ஆ-ர்.]

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 4600 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராகச் சேர்ந்துவிட்டார்கள்.

உங்களுக்கும் இதில் சேர ...ண்டுமென்று ஆசையாக ...க்கும். இதுவரையில் நீங்... சேராமல் இருந்தால் இப்பொழுதுகூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். சென்ற இதழில் 'மெக்கானோ' பரிசுப் போட்டி வெளியாயிற்று. இது போன்று அவ்வப்போது நடைபெறும் போட்டிகளில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். மற்றவர்கள் கலந்துகொள்வதற்கில்லை. 'மெக்கானோ' பரிசுப் போட்டிக்கு ஏராளமான கட்டுரைகள் வந்திருக்கின்றன. அதன் முடிவை அடுத்த இதழில் வெளியிடுவோம்.

Reg. No. M. 5542.

இரண்டு புதுப் புத்தகங்கள்

1. கோழி விதைத்த நெல்

ஒரே ஒரு கோழி. அந்தக் கோழிக்குப் பத்
குஞ்சுகள். அந்தப் பத்துக் குஞ்சுகளுடன் ஜாம் ஜ
என்று கோழி அங்கும் இங்கும் உலாவிக்கொண் டி
போது ஒரே ஒரு நெல் அதற்குக் கிடைத்தது. உட
அதைக் கொத்தித் தின்றதா கோழி? இல்லை. விதைத்

தான் மட்டும் பலனை அடைவது கோழிக்குப் பிடி
வில்லை. எப்படி அது காக்கை முதலியவைகளை உதவி
அழைத்தது; முடிவில் என்ன ஆயிற்று என்பதைப் ப
டும் கதையுமாகச் சொல்லுகிறது இந்தப் புத்தகம். மு
வரியிலிருந்து கடைசி வரிக்குப் போய்த்தான் நிறுத்
வீர்கள். நிறையப் படம். கொட்டையான எழுத்து.

விலை 3 அணா

2. கழுகும் கிளியும்

கழுகும் கிளியும் என்றுதான் இந்தப் புத்தகத்து
குப் பெயர். ஆனால் இது இந்தப் புத்தகத்தின் ஒ
கதைக்குத்தான் பெயர். தந்திரக்காரக் கொக்கு, கொ
கார நண்டு, அசட்டுக் கழுதை, குறும்புக்காரக் குரங்
அப்பாவிக் கழுகு, ருத்திராக்ஷப் பூனை முதலிய ப
சிநேகிதர்களின் கதைகளை இந்தப் புத்தகத்தில் காணலா

பார்த்தால் உங்களுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வரு
பல படங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன.

கொக்கு முதலிய ஒவ்வொன்றையும் பற்றிச் சொல்
இருப்பது நிஜந்தானா என்று கதையைப் படித்
பாருங்கள்.

***நீங்கள் கண்ணன் கழக மெம்பரா? அப்
யானால் உங்களுக்குக் கமிஷன் உண்டு!***

விலை 8 அணா

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை-4.